கிரியா பாபாஜி அன்பகம், கனடா
யோக வாழ்வு

பக்கங்கள்: 21

தீம்புனல் THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

விலை: 30.00

NORTH EAST ECONOMIC DEVELOPMENT ORGANIZATION
BUILD THE NATION TOGETHER

www.theempunal.lk தீ : 01 புனல்:07 12.06.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052

த.விஜயசங்கர்

> கொரோனா அச்சம் நிலவத் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை வைத்தியர்களும் தாதியர்களும் வைத்தியசாலைப் பணியாளர்களும் சவால் நிறைந்த நெருக்கடிகளை எதிர்கொண்டே தமது சேவையினைச் செய்து வருகின்றனர். அவர்கள் தமது சேவைகளைத் தொடர்ந்து செய்வதற்குப் பல்வேறு காரணிகள் தடையாக உள்ளன. அவ்வாறான காரணிகளைக் கருத்தில்க் கொண்டு நிவர்த்திப்பதன் மூலம் தமது சேவையினைப் பாதுகாப்பாகவும் வினைத்திறனுடைய தாகவும் செய்யலாம் என்று நம்புகிறார்கள்.

இருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை
புதிய பிரச்சினைகளும் விடுவதாயில்லை

அரச தரப்பிற்கு நாளுக்குநாள் நெருக்கடி அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இவற்றைச் சமாளிப்பதற்குரிய வல்லமை அரசுக்கு இருப்பதாகவும் தெரியவில்லை. ஆனாலும் தாம் எதற்கும் அஞ்சாதவர்கள் போலான பாவனையுடன் கடந்து செல்வதனையும் அவதானிக்க முடிகிறது. கொரோனா நெருக்கடி நிலையிலிருந்து இன்னும் மீண்டுவராத நிலையில் கப்பல் விவகாரம் பூதாகரமாகியிருக்கிறது. அது தொடர்பில் பல்வேறுபட்ட சந்தேகங்கள் மக்கள் மத்தியிலும், அரசியல் அவதானிகள் மத்தியிலும் எழுந்துள்ளன. அதற்குரிய விளக்கத்தினை அரசு முன்வைக்கமுடியாமல் திண்டாடியும் வருகிறது. இந் நிலையில் மேலும் ஒரு நெருக்கடியாகவே அண்மையில் நாடுமுழுவதிலும் உள்ள வைத்தியசாலை தாதியர் உட்பட சுகாதாரப் பணியாளர்கள் மேற்கொண்ட அடையாளப் பணிப்புறக்கணிப்பு அமைகிறது.

வைத்தியசாலைப்பணி மிக அத்தியாவசியமான தேவைகளில் ஒன்று. அதிலும் கொரோனா நெருக்கடி நிலையில் இன்னும் அதிகமான தேவையினை வேண்டிநிற்கிறது. இந்நிலையில் வைத்திய சாலைப் பணியாளர்களின் பணிப் புறக்கணிப்பென்பதும் மேலும் நெருக்கடி நிலையினையே உருவாக்கும். இப் பணிப்புறக் கணிப்பினை சாதாரணமாகக் கடந்து செல்லவும் முடியாது. கொரோனா அச்சம் நிலவத் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை வைத்தியர்களும் தாதியர்களும் வைத்தியசாலைப் பணியாளர்களும் சவால் நிறைந்த நெருக்கடிகளை எதிர் கொண்டே தமது சேவையினைச் செய்து வருகின்றனர்.

▶ 20

அறம் பிழைத்த அரசியலில் இலங்கை

கருணாகரன்



"தென்னாசிய நாடுகளின் தலைவர்கள் தம்மைத் தீவிர மதவாதிகளாகக் காட்டிக் கொண்டாலும் அவர்கள் கடவுளுக்கோ மனச்சாட்சிக்கோ பயப்படுவதாக இல்லை" என்று மருத்துவர் தங்கமுத்து கோணேஸ்வரன் தன்னுடைய முகப்புத்தகத்தில் பதிவிட்டிருந்தார். இது உண்மை மட்டுமல்ல துல்லியமான மதிப்பீடும் துணிச்சலான வெளிப்பாடுமாகும்.

இலங்கை, இந்தியா, பர்மா, பாகிஸ்தான் என இந்த மதப்பற்றுத் தலைவர்கள் ஆட்டம் போடுகின்ற நாடுகளை

> தமிழ்ப்பரப்பில் கடவுள் நம்பிக்கை, மதப்பற்றுள்ள அரசியல்வாதிகளே அதிகமுண்டு. அவர்களிடம்தான் சாதியதிகாரமும் சர்வாதிகார மனநிலையும் தளைத்தோங்கியிருக்கிறது. தங்கள் கண்ணுக்கு முன்னே மதத்தின் பேராலும் சாதியின் பேராலும் பிரதேசம் மற்றும் பால் வேறுபாடு போன்றவற்றின் பேராலும் நடத்தப்படும் எந்த ஒடுக்குமுறையையும் இவர்கள் எதிர்ப்பதில்லை. மறைமுகமாக அவற்றை ஆதரிக்கின்றனர். அப்படியென்றால் இவர்களுடைய உண்மையான முகம்தான் என்ன? இவர்கள் வலியுறுத்துகின்ற நீதியும் அறமும் எத்தகையது? விடுதலையின் பொருள் என்ன?

விரிவாகப் பட்டியலிட்டுக் கொண்டு போகலாம். இதனால்தான் "ஜே.ஆர். ஜெயவர்த்தனா உண்மையில் பௌத்தராக - தர்மிஸ்ரராக இருந்திருந்தால் நாம் ஆயுதம் ஏந்த வேண்டியிருந்திருக்காது" என்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சொல்ல வேண்டியிருந்தது.

தம்மை ஒரு தீவிர பௌத்த மதப் பற்றாளராகக் காட்டிக் கொண்ட ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில்தான் சிறைச்சாலைப்படுகொலைகள், நூலக எரிப்பு, கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு மனிதர்கள் வேட்டையாடப்பட்டது எல்லாமே நடந்தன. மேலும் விமானக் குண்டு வீச்சுகள் ஆரம்பிக்கப்பட்டமை, கடல் வலயத்தடைச்சட்டம் தொடக்கம் பயங்கரவாதத் தடைச்சட்டம் வரையான அத்தனை ஒடுக்குமுறைச் சட்டங்களும் மேற்கொள்ளப்பட்டதோடு அத்தனை மானுட விரோதச் செயல்களும் அரங்கேற்றப்பட்டன. ஏன் ஒபிரேஷன் லிபிரேஷன் என்ற பேரில் வடமராட்சி மீதான படையெடுப்பை மக்கள் மீது தொடக்கி வைத்ததும் இந்த ஜே.ஆர். தானே.

அன்றைய ஜே.ஆர் மட்டுமல்ல, அதற்கு முன்னிருந்த - பின்வந்த இலங்கையின் தலைவர்கள் அனைவரும் தம்மை பௌத்தத்துக்கு

▶ 19

பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்

ஜோ பைடனின் ஐரோப்பிய விஜயமும் அமெரிக்காவின் மீளெழுச்சிக்கான உபாயமும்!

உலக அரசியலின் போக்கு கணத்துக்கு கணம் புதிய மாற்றங்களை நோக்கி நகருகிறது. உலகளாவிய அமெரிக்க வல்லரசுப் பலம் வீழ்ச்சியை நோக்கிய முகத்தைக் கொண்டிருந்தாலும், அதிலிருந்து அமெரிக்காவோ அல்லது வெள்ளையர்களோ வெளியேறுவதற்குத் தயார் இல்லை என்பதை அவர்களது நகர்வுகள் வெளிப்படுத்துகின்றன. உலக எஜமானர்கள் தாமே எனக் கருதும் வெள்ளையர்கள் அதனைத் தொடர்ந்து தக்க வைக்க முயற்சிப்பதைக் காணமுடிகிறது. அதில் ஒன்று, அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோ பைடன் ஜூன் 9 முதல் 16 வரை ஐரோப்பாவுக்கு மேற்கொள்ளும் விஜயம் உணர்த்துகிறது. மீளவும் அமெரிக்கா தனித்தோ அல்லது ஐரோப்பாவுடன் இணைந்தோ வல்லரசுப் பலத்தை தக்கவைப்பதை இலக்காகக் கொண்டு நகர்வதாகவே

> சீனாவை வர்த்தக ரீதியில், பொருளாதார ரீதியில் எதிர்கொள்வது மற்றும் ரஷ்யாவை இராணுவரீதியில் எதிர்கொள்வது என்ற இரட்டை இலக்கை ஐரோப்பிய நாடுகளை முதலீடாக கொண்டு நகரவே பைடன் முயலுகிறார். எனினும் இத்தாலி, ஜப்பான், ஜேர்மனி, ஸ்பெயின், கிரேக்கம் போன்ற நாடுகள் சீனாவுடனான வர்த்தக உறவை நிராகரிக்காத போதிலும் மறுபக்கத்தில் துருக்கி - ரஷ்ய உறவின் நெருக்கமான பலமும் ஜோ பைடனது திட்டமிடலுக்கு சவாலான விடயங்களாகவே தெரிகிறது.

தெரிகிறது. இக்கட்டுரையும் ஜோ பைடனின் ஐரோப்பிய விஜயத்தின் முக்கியத்துவத்தைத் தேடுவதாக உள்ளது.

ஜூன்-09 ஐரோப்பாவுக்குள் விஜயம் செய்யும் ஜோ பைடன் ஜூன்-10 இல் பிரித்தானியப் பிரதமர் பொரிஸ் ஜோன்சனைச் சந்தித்து உரையாடத் திட்டமிட்டுள்ளார். அநேகமான அமெரிக்கப் பிரஜைகள் பிரித்தானிய மூதாதையர் என்பது இரு நாட்டுக்குமான உறவை விளங்கிக் கொள்வதற்குப் போதுமானது. டொனால்ட் ட்ரம்பின் மிக நெருக்கமான நண்பன் என கருதப்பட்ட பொரிஸ் ஜோன்சன் ஐரோப்பாவின் ட்ரம்ப் என வர்ணிக்கப்பட்டார். ஆனால் ட்ரம்பின் தேர்தல்த் தோல்வியும் அவரது நடவடிக்கையும் பொரிஸ் ஜோன்சன் அவரைக் கைவிடும் நிலைக்குள் தள்ளியது. ஜோ பைடனுடன் நெருக்கமடைந்துள்ள ஜோன்சன் சர்வதேச விடயங்களில் இரு நாட்டுக்குமான ஒத்துழைப்பினை அதிகரிப்பார்கள் என்பதை ஏற்கனவே வெளிப்படுத்தியிருந்தனர். இத்தகைய உறவு நிலையைக் கொண்டுள்ள அமெரிக்க - பிரித்தானியத் தலைவர்கள் சந்திக்கும் போது இரு நாட்டுக்கும் இடையிலான விவகாரங்களை உரையாடுவதோடு, காலநிலை மாற்றம், வர்த்தகம், வட அயர்லாந்து தொடர்பாக எழுந்துள்ள விடயங்கள் பற்றியதாக உரையாடல் அமையுமென எதிர் பார்க்கப்படுகிறது. குறிப்பாக, ஐரோப்பிய யூனியனிலிருந்த பிரித்தானியா வெளியேறிய பின்னர் பிரித்தானியாவுடனான வர்த்தக உறவை அமெரிக்கா அதிகம் முதன்மைப்படுத்தி இருந்தது. அதற்கான வாய்ப்புத் தொடர்பாக ஜோன்சனும் ட்ரம்பும் பல தடவை உரையாடி உள்ளார்கள். அமெரிக்கா, பிரித்தானியாவினுடைய முதலீடுகளும் சந்தை வாய்ப்புக்களும் சீனா பக்கம் திரும்பி விடாது கரிசனை காட்டியது. எனவே இச்சந்திப்பு இரு நாட்டுக்குரிய பாரம்பரிய உறவை கட்டியெழுப்புவதுடன், சீனா ரஷ்யாவுக்கு எதிராக ஒரு கூட்டுப் பாதுகாப்பினை அரசியலிலும், பொருளாதாரத்திலும், இராணுவத்திலும் கட்டமைக்கப்படுவதாக தெரிகிறது.

ஜூன்-11 முதல் 12 வரை ஜி7 மாநாட்டில் கலந்து கொள்கின்ற ஜோ பைடன் உலகளாவிய ரீதியில் எழுந்துள்ள பாரிய கொரோனாப் பரவலை எதிர்கொள்ளுதல் அதனால் எற்பட்டிருக்கின்ற பொருளாதார சவாலைக் கையாள்வது பிரதான நிகழ்ச்சி நிரலாகக் காணப்படுகின்றது. ஜி7 நாடுகளிடையிலே முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் காலத்தில் ஏற்பட்ட குழப்பகரமான உறவைச் சரி செய்வதும், அந்நாட்டுத் தலைவர்களுடன் இருபக்க உரையாடல்களை மேற்கொள்வதும் பிரதான நோக்கமாகக் கொண்டிருப்பதோடு காலநிலை மாற்றம், சீனாவின் எழுச்சி, ரஷ்யாவின் அணுகுமுறை கள் தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் என்பனவும் மிகப்பிரதானமாக உரையாடப்படும் அம்சங்களாக தெரிகிறது. ஜி7 தலைமைகளுடனான சந்திப்பு இந்நாடுகளுடனான வர்த்தகக் கூட்டினைப் பலப்படுத்துவதும் ஒரே அணியில் இணைந்து சீனாவின் பொருளாதார ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தவதும் பற்றிய உபாயங்களை வகுப்பதாகவே அமையவும் வாய்ப்புள்ளது.

ஜூன்-13 பிரித்தானிய மகாராணி எலிசபெத்துடனான அரச முறைச் சந்திப்பானதுஅமெரிக்க-பிரித்தானிய உறவின் மரபார்ந்த நிகழ்வாக அமைவதாகும்.

ஜூன்-14 அமெரிக்க ஜனாதிபதி பைடனின் நேட்டோ சந்திப்பு நிகழவுள்ளது. 2018ஆம் ஆண்டுக்குப் பின்னர் பைடன் இத்தகைய மாநாட்டில் நேட்டோ நாடுகளைச் சந்திப்பது மிகமுக்கிய விடயமாக உள்ளது. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் காலத்தில் நேட்டோ நாடுகளுடன் விரிசலடைந்துள்ள அமெரிக்க உறவினை சரி செய்வது, ஆக்ரோசமான ரஷ்யாவின் நடவடிக்கைகளைப் பிராந்திய ரீதியில் எதிர்கொள்வது, சீனாவின் சைபர் தாக்குதல் நெருக்கடி, காலநிலை மாற்றம், ஆப்கானிலிருந்து துருப்புக்களை விலக்கிக் கொள்ளுதல் என மூலோபாய ரீதியான சவால்களை எதிர்கொள்வது பற்றிய உரையாடல்களாகவும் அமைய இருக்கிறது. குறிப்பாக துருக்கிய ஜனாதிபதி எர்டோகன்-உடனான சந்திப்பு முக்கியமான நேட்டோ விவகாரமாகப் பார்க்கப்படுகிறது.

ஜூன்-15 அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய யூனியனுக்குமிடையிலான வர்த்தக மற்றும் தொழில்நுட்பம் சம்பந்தமான மாநாடு ஒன்றை பைடன் எதிர்கொள்கிறார். 2014இற்கு பின்னரான முதற்சந்திப்பாக இது அமைகிறது. குறிப்பாக ட்ரம்ப் காலத்தில் பரிமாறப்பட்ட உற்பத்தி விடயங்களைக் கடந்து அதனுடைய தொழில்நுட்ப பரிமாற்றங்களையும் அவை தொடர்பான ஏற்றுமதி, இறக்குமதி நடைமுறைகளை மீள அமைப்பதோடு வர்த்தக நடவடிக்கை சார்ந்த நீண்ட இடைவெளியை நிரப்புவதாகவும் அமெரிக்க - ஐரோப்பிய யூனியன் மாநாடு திட்டமிடப்பட்டுள்ளது.

ஜூன்-16 ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடனான சந்திப்பு ஒன்றினை ஜோ பைடன் திட்டமிட்டுள்ளார். இச்சந்திப்பு பல்வேறுபட்ட எதிர்பார்ப்புக்களை கொண்டிருந்தாலும் உக்ரைன் விவகாரம், அமெரிக்கா மீதான தேர்தல் தலையீடு, ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் நவாலினி தொடர்பான புட்டினது நடவடிக்கைகள் பற்றியதாக அமைவதோடு தொழில்நுட்ப விடயங்கள் சார்ந்தும், சைபர் தாக்குதல் சார்ந்தும் உரையாடத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. எனவே ஜோ பைடன் ஐரோப்பிய நாடுகளுக்கு மேற்கொள்ளும் விஜயம் பல விடயங்களை முன்னிறுத்தினாலும் பிரதான விடயங்களை விரிவாக விளங்கிக்கொள்ளுதல் அவசியமானது.

முதலாவது, முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் காலத்தில் விரிசலடைந்துள்ள அமெரிக்க - ஐரோப்பிய நட்புறவை மீளப் பலப்படுத்துவதன் மூலம் மீளவும் உலகத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான வாய்ப்பினை அதிகரிப்பதாகும். அதிலும் குறிப்பாக வர்த்தக ரீதியிலான உறவைப் பலப்படுத்துவதனூடாக சீனாவுடனான ஐரோப்பிய வர்த்தக உறவைப் பலவீனப்படுத்தல். அவ்வாறே கால நிலை தொடர்பான உரையாடல் மேற்கு நாடுகள் மற்றும் ஆசிய வல்லரசு நாடுகளிடையே முரண்பாட்டைத் தீவிரப்படுத்துதல் என்ற அடிப்படையில் நகர்வதற்கான வாய்ப்பை அதிகம் கொண்டுள்ளது. பனிப்போருக்கு முற்பட்ட காலப்பகுதியிலும், பனிப்போருக்குப் பிந்தைய காலப்பகுதியிலும் ஐரோப்பாவுடனான கூட்டை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்கா உலக வல்லரசாக நிலைத்தது. அதனை நோக்கி மீள அமெரிக்க தயாராவதே ஜோ பைடனது ஐரோப்பிய விஜயம் வெளிப்படுத்தும் செய்தியாகும்.

இரண்டாவது, அமெரிக்கா மற்றும் ஜி 7 நாடுகளுடனான உறவு மீண்டும் ஒரு நேர்க்கணியத்துடன் செயற்பட வேண்டுமாயின் பொருளாதாரப் பிணைப்பினாலேயே சாத்தியமாகும். அத்தகைய பொருளாதாரப் பிணைப்பை முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் அதிகம் பலவீனப்படுத்தி இருந்தார். ஜோ பைடன் அத்தகைய சூழ்நிலையை மாற்றுவதன் மூலம் சீனாவின் ஒரே சுற்று, ஒரே பாதை என்ற இலக்கை ஐரோப்பாவிற்குள் எழுச்சி பெறாமல் தடுப்பதற்குத் திட்டமிடுவதாகத் தெரிகிறது. கொவிட்-19 பின்னான சீன ஐரோப்பிய உறவு பலமான தாக மாறிவருகிறது. அதனைத் தடுப்பதும் அதற்குள் அமெரிக்கா தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதும் ஐரோப்பிய விஜயத்தின் மூலம் சாத்தியப்படுத்த பைடன் முயலுகிறார்.

மூன்றாவது, நேட்டோவைப் பலப்படுத்துவதனூடாகவும், பிரிந்துள்ள நேட்டோ நாடுகளை ஒன்றிணைப்பதனூடாகவும் கிழக்கு ஐரோப்பாவிற்குள்ளும் மேற்காசிய குடியரசுகளிற்குள்ளும் ரஷ்ய பலத்தைக் கட்டுப்படுத்த ஜோ பைடன் திட்டமிடுகிறார். உக்ரைன் விவகாரத்தை முன்னிறுத்துவதனூடாக ரஷ்யாவின் எல்லையையும் ரஷ்யாவின் பொருளாதார நகர்வுகளை நெருக்கடிக்கு உள்ளாக்கலாமென ஜோ பைடன் கருதுகிறார். எனவே இவரது நேட்டோ சந்திப்பு, பிரதான எதிரியான ரஷ்யாவையும் புடினையும் தோற்கடிப்பதற்கான நகர்வாகவே தெரிகிறது.

நான்காவது, சீனாவை வர்த்தகரீதியில், பொருளாதார ரீதியில் எதிர்கொள்வது மற்றும் ரஷ்யாவை இராணுவ ரீதியில் எதிர்கொள்வது என்ற இரட்டை இலக்கை ஐரோப்பிய நாடுகளை முதலீடாகக் கொண்டு நகரவே பைடன் முயலுகிறார். எனினும் இத்தாலி, ஜப்பான், ஜேர்மனி, ஸ்பெயின், கிரேக்கம் போன்ற நாடுகள் சீனாவுடனான வர்த்தக உறவை நிராகரிக்காத போதிலும் மறுபக்கத்தில் துருக்கி - ரஷ்ய உறவின் நெருக்கமான பலமும் ஜோ பைடனது திட்டமிடலுக்கு சவாலான விடயங்களாகவே தெரிகிறது.

எனவே, பிராந்திய அடிப்படையில் அமெரிக்கா ஐரோப்பாவை அரவணைத்துக் கொண்டாலும் சீனாவுடனான வர்த்தக பொருளாதார உறவை ஐரோப்பிய நாடுகள் நிராகரித்து செயற்படுமா? என்பது சந்தேகமான விடயமாகும். அவ்வாறே இராணுவ ரீதியில் ரஷ்யாவின் சுனாமி ஆயுதம், எஸ்-4000 மற்றும் ஐந்தாம் தலைமுறை விமானம் போன்றவை அதன் இராணுவ வளர்ச்சியையும் கிழக்கு ஐரோப்பாவிற்குள்ளும் மேற்கு ஆசியாவினுள்ளும் அதன் பலத்தை அதிகரிக்கச் செய்தன. எனவே ஜோ பைடன் தனது பிரதான எதிரிகளான சீனாவையும் ரஷ்யாவையும் வெற்றி கொள்ள அரசியல் பொருளாதார இராஜதந்திர நடவடிக்கைகளைத் தாண்டி போரொன்றினை தெரிவு செய்வதே பொருத்தமானதாக அமையுமென சர்வதேச ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதனை நோக்கி அமெரிக்கா செயற்படுமா? மீளவும் உலக வல்லரசாக மாற அமெரிக்கா பலவீனங்களைச் சரிசெய்யுமா? ■

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL தீம்புனல்

அரச வேலைவாய்ப்புகளும் இடைத் தரகர்களும்

அரசாங்கம் ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்திச் செயற்படுத்தி வருகின்றது. இதுவரை 34000 பேருக்கு அத்திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது. அத்தகைய வேலை வாய்ப்பினை வழங்குவதன் நோக்கம், பொருளாதாரத்தில் நலிவடைந்துள்ள குடும்ப அங்கத்துவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதன் ஊடாக அவர்களின் வாழ் வாதாரத்தினை மேம்படுத்த முயற்சிப்பதே ஆகும். ஆனால் இது சரியான வகையில் முன்னெடுக்கப்படுகிறதா? பொருத்தமானவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறதா? என்பன பொதுவாக எழுந்து வருகின்ற கேள்விகளாகும்.

அண்மையில் இவ்வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒருதொகுதியினரின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் இதனால் குழப்பநிலைகள் எழுந்துள்ளதாகவும் அறியமுடிகிறது. இக்குழப்பத்திற்குக் காரணம் பொருத்தமானவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பதாகும். இத்தகைய நிலை இன்று மட்டுமல்ல. காலங்காலமாக நடைபெற்று வரும் ஒன்று. அரசாங்கம் வழங்குகின்ற வேலை வாய்ப்பானது நாட்டில் எல்லோருக்கும் பொதுவானது. எவ்வகையான நியதிகளுக்குட்பட்டு வழங்கப்படுகின்றதோ அவ்வகையான நியதிக்குப் பொருத்தமானவர்களுக்கு கிடைக்கக்கூடிய வெளிப்படைத் தன்மை கொண்டது. ஆனால் இந்த இயல்பு நிலை நாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை.
வேலைவாய்ப்புக்கள் சரியான வகையில் பங்கிடப்படுவதில்லை, சரியானவர்களைச் சென்றடைவதுமில்லை. இதற்கான காரணம் என்னவென நோக்கினால் அரசியல்வாதிகளின் தலையீடு என்பது தெரியவரும். இவர்கள் தமது வாக்கு வங்கிகளை நிரப்புவதற்கு அரசாங்கத்தால் வழங்கப்படுகிற வேலைவாய்ப்புக்களை மட்டுமல்ல அரசு முன்வைக்கின்ற நலத்திட்டங்கள் அனைத்தையும் பயன்படுத்துகின்றனர். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் சில வேட்பாளர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றுத் தருவதாகக் கூறி பல இளைஞர் களையும் யுவதிகளையும் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி பாராளுமன்றம் சென்ற கதை எல்லோருக் கும் தெரிந்ததுதான். இவர்களில் பலர் தாங்கள் ஏமாற் றப்பட்டு விட்டதாகப் பின்னாளில் புலம்பித்திரிந்தமை யும் அறிந்தவொரு விடயம்.

அரசு வழங்குகின்ற வேலைவாய்ப்புகளுக்கு இடைத் தரகர்கள் தேவைதானா? இவர்கள் இல்லாமல் இத்தகைய செயற்றிட்டங்களைச் செயற்படுத்த முடியாதா? என்ற கேள்விகளும் பிரதானமானவை. இவர்களைப் பொறுத் தவரையில் வேலைவாய்ப்பினை மக்களுக்கு வழங்கக் கூடிய சக்தி வாய்ந்தவர்களாகத்தங்களை மக்கள் முன் நிறுத்த முனைகிறார்கள். தாங்கள் மக்கள் மீது மிகுந்த கரிசனை உள்ளவர்கள் என்பதனையும், அரசாங்கத்திடம் போராடி வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொடுப்பவர்களாகவும் தமது விம்பத்தினை உயர்த்திக் கொள்ள முனைகிறார் கள். அப்படி இவர்கள் மக்களின் நலன்களில் அக் கறையுள்ளவர்கள் என்றால் வேலைவாய்ப்பினை உருவாக்க வேண்டும். அதற்குரிய நிகழ்ச்சித்திட்டங் களை முன்னெடுக்கவேண்டும். இயல்பாக அரசாங்கத் திடமிருந்து மக்களுக்குக் கிடைக்கக்கூடிய வேலைவாய்ப் புக்களுக்குத் தரகுவேலை செய்யக்கூடாது. இத்தகைய தரகு வேலைகளால் பயனடைபவர்கள் அவர்களுக்கு மிக வும் வேண்டப்பட்டவர்கள் அல்லது அவர்களின் தனிப்பட்ட முன்னேற்றத்திற்கு உதவிபுரிந்தவர்கள். மற்றையவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

இத்தகைய செயற்பாடுகள் பல பாதகமான விளைவு களை ஏற்படுத்தும். குறிப்பாக பொருளாதார நலிவு நிலை யில் இருப்பவர்கள் தொடர்ந்தும் நலிவு நிலையிலேயே இருக்கவும் பொருத்தமில்லாதவர்கள் பொருத் தமில்லாத வேலைகளில் ஈடுபடவும் அரசியல் செல்வாக் கின் நிமிர்த்தம் வேலைபெற்றவர்கள் வேலைத்தளங்களி லும் தமது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தவும் பிறரை அச்சுறுத்துவதுமான விளைவுகளைத் தரகூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

இத்தகைய நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். முதலில் அரசியல் கட்சி சார்ந்தவர்கள் அரச வேலை வாய்ப்புக்களில் செல்வாக்கு நிலைகொள்வது நிறுத்தப் படவேண்டும். அதேபோல அரச நிறுவனங்களில் தாம் மேற்கொள்ளும் தலையீடுகளை நிறுத்தவேண் டும். அத்தகைய தலையீடுகள் கடந்த காலங்களில் பல விளைவுகளை ஏற்படுத்தியிருந்தமை கவனத்தில் கொள்ளப்படவேண்டும். குறிப்பாக ஆசிரிய இட மாற்றங்கள் தொடர்பான செயற்பாட்டின் போது, அதிபர் நியமனங்களின் போது, பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்ற போது இத்தகையோரின் செல் வாக்கு நிலையானது இருந்து வந்துள்ளமை அறியக் கூடிய விடயமே. தமக்கு வேண்டியவர்களைத் திருப்திப்படுத்துவதாக இருந்தாலும் மற்றவர்களைப் பாதிப்புக்குள்ளாக்குவதாகவும் மன அழுத்தங்களை ஏற்படுத்துவதாகவும் அமைகின்றதென்பதனை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசியல் கட்சி சார்ந்தவர்கள் தாங்கள் எல்லா மக்களுக்குமான பிரதிநிதி என்பதனை முதலில் நினைவு கொள்ளவேண்டும். தங்களுக்கு வாக்களித்த வர்களையும் தங்களுக்கு வேலை செய்தவர்களையும் முதன்மைப்படுத்தும் பாரபட்சமான செயற்போக்கு களை நிறுத்தவேண்டும். எல்லோரும் இந்நாட்டு மக்கள், இந்நாட்டில் கிடைக்கப்பெறும் வளங்கள் எல்லோரும் அனுபவிப்பதற்குரியது என்ற எண்ணம் வலுவாக்கப்பட வேண்டும். மக்களுக்கான அரசியல் முன்னெடுக்கப்படவேண்டும். தங்களைச் சார்ந்த வர்களுக்கு நன்மை செய்வதாய் நினைத்துக் கொண்டு மற்றவர்களின் வாழ்க்கையில் விளையாடிச் செல்லும் நிலைமை எதிர்காலச் சந்ததியினை இன்னும் படுகுழி யிலேயே கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பதனையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த இடத்தில் அரசாங்கத்துக்குப் பாரிய பொறுப் புண்டு. இத்தகைய தரகர்களை முதன்நிலைப்படுத்தி அவர்களுக்கு வழங்கும் சலுகைகள் அப்பாவிப் பொதுமக்களின் வாழ்க்கையை இருளுக்குள் தள்ளி விடுகின்றது என்பதனை கவனத்தில் கொண்டு செயற்படவேண்டும். அவர்களைத் தனியே அரசியல் சார்ந்த வேலைத்திட்டங்களுக்குரியவர்களாக வைத்துக்கொண்டு மக்கள் சார்ந்த வேலைத்திட்டங்களில் வெளிப்படைத்தன்மை யினைப் பேணி எவரும் பாதிக்காத வகையில் செயற்திட்ட முன்னெடுப்பினை மேற்கொள்வது தொடர்பில் சிந்திக்கவேண்டும். இவ்வாறு தொடர்ந் தும் காணித்தரகர்கள் போல வேலைத்தரகர்கள் செயற்படுவார்கள் என்றால் சில ஆண்டுகளின் பின் ஆளுமையற்ற பணியாளர்களே நாட்டின் சகல துறைகளிலும் இருக்கும் சூழல் உருவாகும் என்ப தனைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்தினைச் சரி யாகத் திட்டமிடல் வேண்டும். ■

கொரோனாவும் நுண்நிதிக்கடன் சுமையும் ஒன்றா?

தந்திரன்

கொரோனா பெருந் தொற்றும் மரண வீதமும் மிக வேகமாக அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. கடந்த ஒரு மாத காலம் பயணத்தடை காலமாகும். இந்த வாரத்தில் அதன் தாக்கம் வழமையை விட அதிகரித்துள்ளதோடு எதிர்வரும் வாரங்களில் இதன் வீதம் இன்னும் அதிகரிக்கும் என்று எதிர்வு கூறப்படுகிறது.

மரண வீத அதிகரிப்பு என்பது தனியே கொரோனா பெருந் தொற்றினால் ஏற்படுவதனையும் தண்டி இன்னொரு வடிவில் விஸ்வரூபம் எடுத்துள்ளது. கொரோனா காரணமாக நடைமுறைப்படுத்தப் பட்டு வரும் பயணத்தடை அதன் காரணமாக ஏற்படும் பொருளாதாரச் சிக்கல் மன அழுதங்களை ஏற்படுத்துவதோடு தற்கொலைக்கான தூண்டுதலை யும் ஏற்படுத்தி வருவதனை அறிந்துகொள்ள முடிகின்றது.

பயணத்தடை காலத்தில் வேலையின்மை பிரச் சினையும் வருமான இழப்பும் ஏற்பட்டுள்ளமை யாவரும் அறிந்ததே. அன்றாட வாழ்வாதாரமே கேள்விக்குள்ளான நிலையில் நிறுவனங்களிடம் பெற்ற கடனை எவ்வாறு மீளச் செலுத்துவது? அவர்கள் வீடுதேடி வந்து கேட்கும் நிலையில் என்ன பதில் அளிப்பது தொடர்பான சிந்தனைகள் வலுப் பெறும் போது மன அழுத்தமும் கூடவே சேர்ந்து கொள்கின்றது. நுண்நிதிக் கடன்களை வழங்கும் நிறு வனங்களும் வங்கிகளும் தமது இலாபத்தினையும் தமக்கான கவர்ச்சிகரமான வியாபார மேம்படுத்தல்க ளையும் அதிகம் கவனத்தில் கொண்டு செயற்பட்டு வருகின்றன. இவ்வாறான செயற்பாடுகளின் நிமிர்த்தம் நுண்நிதிகடன்களைப் பெற்றவர்கள் அதிகம் பேர். அவர்களில் அன்றாட வருமனங்களில் சீவனத்தினை நடத்துபவர்களும் அடங்குவர். சாதாரண காலங்களி லேயே இவ்வாறு கடன் பெற்றவர்கள் கடனைத் திருப் பிச் செலுத்த முடியாமல் மன விரக்திக்கு உள்ளாகி தற் கொலை செய்து கொண்டவர்கள் பற்றிய செய்திகள் அறியக் கிடைத்திருக்கின்றது. இந்நிலையில் தற் போதைய கொரோனா காலத்தில் வருமானம் இழப்பின் போது நிலைமை இன்னும் மோசமானதே. கடனைக் கொடுத்தவர்கள் திரும்பப் பெறாமல் இருக்க முடியாது.

ஆனால் சரியான முறையில் அணுகுதல் வேண்டும். ஏற்கனவே மன அழுத்தங்களுக்கு உள்ளாகியிருக்கும் ஒருவரிடம் மேலும் மன அழுத்தத்தினை ஏற்படுத்தும் போது தற்கொலை பற்றிய எண்ணம் அவரிடம் வலுப் பெறும் ஆபத்தான நிலையினைக் கருத்தில் கொள்ள வேண்டும.

கடந்த வருட கொரோனா பெருந்தொற்றின் பொழுது அரசாங்கம், வங்கிக்கடன், நுண்நிதிக்கடன் தொடர்பில் சரியான அணுகுமுறையினைக் கையாண்டிருந்தது. அது மக்களுக்கு மிகப்பெரும் ஆறுதலாகவும் இருந்தது. அதா வது மக்களின் வேலையில்லாப் பிரச்சினையையும் வறுமையையும் கருத்தில் கொண்டு நுண்நிதிக் கடன்களை மீளச் செலுத்துவதற்கான சலுகைக் காலத்தை வழங்கியி ருந்தது. அத்தகைய முன்னெடுப்பினை ஏன் அரசு இம் முறை மேற்கொள்ளவில்லை? மக்களைப் பாதுகாப்பதில் இதுவும் முக்கியமான ஒன்றாகவே தற்போதைய காலத்தில் கருதப்படுகின்றது.

கொரோனா இடரின் தன்மை குறைந்த காலத்திலேயே மத்திய வங்கியின் ஆலோசனையின் பேரில் நுண்நிதிக் கடன்களுக்கான மீளச் செலுத்தும் காலத்திற்கு சலுகை அளித்த அரசு, கொரோனா தொற்றின் பேரிடரின் பொழுது அதனை ஏன் கண்டு கொள்ளவில்லை. பொறுப் புள்ள அரசாங்கம் என்ற வகையில் மக்களின் நலன் சார்ந்த எல்லா வகையான செயல்முறைகளையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

எனவே கொரோனா பெருந்தொற்று காலங்களில் மாத் திரமல்ல வெள்ளப் பெருக்கு, புயல், சூறாவளி, சுனாமி, மண்சரிவு போன்ற இயற்கை இடர்களின் போதும் நுண் நிதிக் கடன் தொடர்பில் ஒரு முறையான திட்ட அமுலாக் கத்தை மேற்கொள்ள வேண்டும். இன்றளவும் இதற்கான முறையான திட்டம் ஒன்றிருப்பதாக தகவல்கள் எவையு மில்லை.

இதனை மேற்கொண்டாலே நிதி நிறுவனங்களும் கடனை மீளப் பெறுவதற்கான நிபந்தனைகளை தளர்த் திக் கொள்ளும். எழுந்தமானமாக செயற்பட முடியாது. அதேநேரம் அரசினை மாத்திரம் குறை கூறாது, நுண்நிதி நிறுவனங்களும் காலப் பேரிடரின் தன்மை உணர்ந்து பொறுப்புணர்வுடனும் மனிதாபிமானத்துடனும் செயற் படவேண்டியது காலக் கட்டாயமாகும். இவைகூட பேரிடர் காலங்களில் நுண்நிதிக் கடனை வசூலிப்பது தொடர்பில் வாடிக்கையாளர் சார்ந்து தமக்குள்ளே ஒரு பொருத்தமான உள்ளக கட்டமைப்பொன்றினை உரு வாக்கி செயற்படுவதே மனிதாபிமானமிக்க செயற்பாடாக அமைவதோடு, நாட்டின் ஆரோக்கியமான சமூகத்தினைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்தும். ■

அவதானி

சோ தனை மேல் தனை போதுமடா சாமி

எமது நாட்டில் எதனையும் அரசியலாக்கி, அமைச்சர் கள் தோன்றி " ஷோ " காண்பிக்கின்ற சடங்குகள்தான் காட்சிப்படுத்தப்படுகின்றது.

அவ்வாறாயின் விதிக்கப்பட்ட பயணத்தடை அமைச்சர் பிரதானிகளுக்கு இல்லையா..? என்ற கேள்வியும் எழுகிறது. அமைச்சர்கள், அரசியல் வாதிகளுக்கு எப்போதுமே ஊடக விளம்பரம்தான் தேவைப்படுகிறது.

சீனா இலவசமாக வழங்கிய தடுப்பூசிகளை மக்களுக்கு வழங்குவதற்காக ஏன் இந்தப் பெரும் எடுப்பு சடங்குகள். அதனையும் ஒரு அரசியல் திருவிழா வாக்கியிருக்கிறார்கள்.

பல வருடங்களுக்கு முன்னர், கொழும்பு துறைமுகத்தில் ஒரு வேலைத் திட்டத்தை ஜப்பானிய அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. அதற்காக ஜப்பானி லிருந்து ஒரு அமைச்சர் வந்திருந்தார். அந்த நிகழ்ச்சி நடந்த இடத்தில் ஏராளமான துறைமுகத் தொழிலாளர்கள், துறைமுக அதிகார சபை அதிகாரிகள், பத்திரிகையாளர்கள், பொதுமக்கள் என்று பெருந் தொகையானோர் கூடிவிட்டனர்.

அதனைப் பார்த்த ஜப்பான் அமைச்சருக்கு அதிர்ச்சியாக இருந்தது. அங்கிருந்த இலங்கை அமைச்சரிடமும் அவரது அதிகாரிகளிடமும், " ஏன் இவர்கள் எல்லோரும் இங்கே வந்திருக்கிறார்கள்..?" எனக்கேட்கிறார். அவர்கள் திரு திருவென விழிக்கின் றனர். "நாம் தானே இந்தத் திட்டம் தொடர்பாக செயல்படுத்த வந்துள்ளோம். மற்றவர்கள் எதற்கு..? அவர்களைச் சென்று, அவரவர் வேலைகளை பார்க்கச் சொல்லுங்கள். கடமை முக்கியம்"என்று சொல் லியிருக்கிறார்.

இதிலிருந்து எமக்கு ஒரு உண்மை புலப்படும். இரண்டாம் உலகப்போரில் பெரும் பாதிப்பை சந்தித்த ஜப்பான் எவ்வாறு துரிதமாக பல துறைகளிலும் முன் னேறியிருக்கிறது என்பது. அன்று அந்த ஜப்பானிய அமைச்சரின் விழிப்புணர்வுக் கூற்றிலிருந்து எம்மவர்கள் அனுபவங்களைப் பெற்றிருக்க வேண்டும்.

சமகாலத்தில், " கொரோனோவுக்கு எதிரான தடுப்பூசிகளை வழங்கும் திட்டத்திலும் உலக சுகாதார ஸ்தாபனம் (W . H. O) பரிந்துரைத்துள்ள வழிகாட்டல் களையும் இலங்கை பின்பற்றுவதில்லை." என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அநுருத்த பாதெனிய கவலை தெரிவித்துள்ளதுடன், இதிலும் அரசியல் தலையீடுகள் உள்ளன என்கிறார்.

உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கியுள்ள மூலோபா யங்களை பின்பற்ற வேண்டும் எனவும் வலியுறுத்துகி றார்.இலங்கையில் பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசுக ளும், மக்களுக்கு நேரும் பாதிப்புகளையே அரசியல் ஆதாயமாக பார்க்கும் மனோபாவம் தொடருவது பேராபத்து.

முன்னர் நீடித்த போரையும், அதனை வெற்றி கொண்டதையும் அரசியல் ஆதாயத்திற்கு பயன் படுத்தியவர்கள், பின்னர் 2019 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தையும் தற்போது வேகமாக பரவி வரும் கொரோனோத் தொற்றையும் அரசியல் ஆதாயத்திற்காக பயன்படுத்தும் கொடு மையிலிருந்து எங்கள் தேசமும் இங்கு வாழும் மூவின மக்களும் எப்போது முற்றாக விடுபடுவார்கள்...?

> **" எங்கிருந்தோ வந்த ஒரு கப்பல் தீப்பற்றியதால், அதிலிருந்து நச்சுத் தன்மை வெளியேறி, கடல் வாழ் உயிரி னங்கள் அநியாயமாக பலியாகத் தொடங்கிவிட்டன. கடலிலே சுதந்திர மாக நீந்தி வாழ்ந்து கொண்டிருந்த அவை, உயிரற்ற சடலமாக மிதந்து வந்து கரை ஒதுங்குகின்றன. மீன்பிடித் துறையும் இதனால் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளது. சில நாட்கள், இது தொடர் பாக மீன்பிடித்துறை அமைச்சரும், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பிரதிநிதி சுமந்திரனும் ஊடகங்களில் பட்டி மன்றம் நடத்திக்கொண்டிருந்தனர். "**

இந்தப்பின்னணிகளுடன், இயற்கையும் எமது மக்களை கடுமையாக சோதிக்கின்றது. அண்மைக் காலங்களில் மழைவீழ்ச்சி அதிகரித்து நதிகளில் நீர்மட் டம் உயர்ந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பலர் நிர்க்க தியாகியிருக்கின்றனர். அத்துடன் மண் சரிவுகளினால் முழுக்குடும்பங்களும் பலியாகிய சம்பவங்களும் தொடருகின்றன.

கொழும்புத் துறைமுகத்திற்கு அருகில் முற்றாக எரிந்துள்ள எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலிருந்து கடலுக்குள் விழுந்துள்ளவற்றினால் நேர்ந்துள்ள சுற்றுச் சூழல் பாதிப்பு எத்தகைய பக்கவிளைவுகளை ஏற்படுத்தும் என்பதை இப்போது கணிக்க முடியாது.எங்கிருந்தோ வந்துள்ள கண்ணுக்குத் தெரியாத கொரோனோ என்ற எதிரியுடன் மூன்றாம் உலக நாடுகளில் ஒன்றான எமது தேசம் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும்போது இந்து சமுத்திரக் கடல் பிராந்தியமும் நஞ்சாக மாறிக் கொண்டி ருக்கிறது. இவை போதாதென்று இயற்கையும் கடுமை யாக சோதிக்கின்றது.

மக்களுக்கு நேரும் அனைத்து சோதனைகளையும் வேதனைகளையும் அரசு தனது அரசியல் ஆதாயத்திற்கு கச்சிதமாகப் பயன்படுத்திவருகிறது. ஒன்றின் பின் ஒன் றாகப் தொடர்ந்து ஓடிவரும் வைரஸ்கள் ஒலிம்பிக் ஓட் டப் பந்தயத்திற்கு தயாராகி வருகின்றன.

சோதனை மேல் சோதனை போதுமடா சாமி. ■

இவை எல்லாம் எம்மைக் கடந்து போகும், நாம் பிழைத்துக் கொள்வோம்.
ஆனால்.....
நாம் போராடியது
ஒரு துண்டு நிலத்திற்கோ
ஒரு குவளை நீருக்கோ
உடல் மறைக்க சீலைக்கோ
ஒரு பிடி சோற்றுக்கோ அல்ல....

பறிபோகும் எமது மரபணுக்கள்

வேதநாயகம் தபேந்திரன்

அவர் ஆடுகள் வளர்ப்பதைத் தமது வாழ்வாதாரத்தின் ஒரு பகுதியாகக் கொண்டுள்ளார். ஆடுகள் வளர்ப்புத் தொடர்பாக உரையாடிய போது "ஆடு ஒன்று குட்டி போட்டால், குட்டி போட்டு இருபத்து நான்கு மணித்தியாலத்துக்குள் தாய் ஆட்டுக்கும் குட்டி ஆடுகளுக்கும் ஏற்புத் தடுப்பு ஊசி போட வேண்டும்.

இல்லாவிட்டால் ஏற்பாக்கி இறந்து விடும் " என்றார்.

"நாங்களும் ஒரு காலத்தில் நீண்ட பல வருடங்கள் ஆடு வளர்த்தனாங்கள். ஆனால் இப்படி ஊசி போடுவதில்லையே? ஏன் இப்போது இப்படி" எனக்கேட்டேன்.

தனக்கு அது தெரியாது என்றார்.

மாஸ் உணவாக வைத்து ஆடுகள் வளர்க்கும் வேறு ஆள்களையும் கேட்டேன். அவர்களும் இதே கதை சொன்னார்கள்.

அதேவேளையில் பாரம்பரிய முறைப்படி தனியே இலைகுழைகளை வைத்து, தவிடு, புண்ணாக்கு கரைத்து வைத்து ஆடுகளை வளர்ப்போரிடம் இது தொடர்பாகக் கேட்டேன். அவர்கள் தங்களது ஆடுகள் குட்டி ஈனும் போது, ஊசி போடும் தேவை ஏற்படவில்லை யென்றார்கள்.

எனக்குள் ஆழ்ந்த யோசனை. மிருக வைத்தியம் தெரிந்த வயதில் மூத்த ஒரு நண்பரைத் தொடர்பு கொண்டு இவ் விடயத்தைக் கூறினேன்.

"எங்கட ஆக்கள் இப்ப நாலு பக்கமும் மதில் கட்டி வருவதால் ஆடுகளுக்கு இலை குழை போட முடியாத நிலை. அவசர வாழ்க்கையில் இலைகுழை தேடிப் போக முடியவில்லை. அதனால் கடையில் மாஸ் வாங்கி ஆடுகளுக்கு வைக்கின்றார்கள்.

ஆடுகள் பலவிதமான மரங்கள், செடிகளின் இலைகுழைகளை உண்ணும் போது இயற்கையாகவே அவற்றுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி கிடைக்கின்றது.

ஆனால் மாஸ் உண்டு ஆடுகள் வளரும் போது அவற்றுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி கிடைக்க வாய்ப்பில்லை.

அத்துடன் மாஸ் தயாரிக்கும் பல்தேசியக் கம்பனிகள் அதை உண்ணும் ஆடுகள் இரசாயன மருந்துகளில் தங்கி இருக்கும் வண்ணம் தயாரிக்கலாம். அதனைப் பெரிய விலையில் விற்பனை செய்து பணம் சம்பாதிக்கும் நிறுவனமாக அதே கம்பனியே இருக்கலாம்.

அதனால்த்தான் ஆடுகளுக்கு ஏற்புத் தடுப்பூசி போட வேண்டிய நிலை வருகின்றது.

இது ஒரு கோப்பரேட் உலகம். பெருந் தொகைப் பணம் சம்பாதிப்பதற்கும் இயற்கை வளம் கொழிக்கும் எமது நாடுகளை அடிமைப்படுத்துவதற்கும் இது போன்ற வழிகளைக் கையாளுவார்கள்.

விளம்பரங்கள் ஊடாகவும், ஊடகப் பரப்புரைகள் மூலமாகவும் இயற்கையுடன் இணைந்த எமது வாழ்க்கை முறையை மாற்றி விடுவார்கள்.

எமது பாரம்பரியங்கள் மெல்ல மெல்ல எம்மிடமிருந்து பறிக்கப்படும்.

ஊர்க்கோழி முட்டையில் இயற்கையாகவே நோய் எதிர்ப்புச் சக்தி உள்ளது. அது எமது உடலை நோய்களில் இருந்து பாதுகாக்கும். ஆனால் நாம் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து வீதம் பாம் முட்டை எனவும் லெக்கோன் முட்டை எனவும் அழைக்கும் முட்டையையே உணவுக்காக உபயோகிக்கின்றோம்.

அத்துடன் இன்றைய காலத்தில் ஊர்க்கோழி வளர்ப்போரில் பெரும்பாலானோர் மாஸ் போட்டுத் தான் வளர்க்கின்றனர்.

இதனால் ஊர்க்கோழி வளர்ப்பின் மூலமாகப் பெறப்படும் முட்டைகள் கூட இயற்கையின் கூறுகளை முழுமையாகப் பிரதி பலிக்க மாட்டாது.

மாடு வளர்ப்பும் மாஸ் மயமாகிப் போய் விட்டது. முன்னைய காலத்தில் இலைகுழைகள் உணவாகக் கொடுத்து மாடு வளர்த்த போது பசுப் பாலைக் காய்ச்சினால் தனியாக ஒரு வாசம் வரும். கால்க்கட்டை தூரத்துக்குப் பசுப்பால் வாசம் வரும்.

ஆனால் இன்று பசுப் பால் காய்ச்சினால் அது போல வாசம் வராது. பாலிலும் கசப்புத் தன்மையொன்று வந்து விட்டது.

இருபது வருடங்களுக்கு முன்பாக றெட் லேடிப் பப்பாசி மரக்கன்றுகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கினார்கள். பராமரிப்புக்கென உரம் கூட இலவசமாக வழங்கினார்கள்.

இலவசம் என்பது எம்மைப் பிடிப்பதற்கு வீசப்படும் தூண்டில் என மூத்த அரச அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள் எதிர்த்தார்கள்.

ஆனால் அரசாங்கத்தின் விநியோகம் எனக் கூறி வழங்கினார்கள்.

விளைவு றெட்லேடிப் பப்பாசி எங்கும் வளர அவற்றில் இருந்து மகரந்தச் சேர்க்கையின் மூலமாக எமது பாரம்பரியமான ஊர்ப் பப்பாசி மரங்கள் மலடு பற்றிப் போய் தற்போது கிட்டத்தட்ட அற்றுப் போய் விட்டது. ஒரு காலத்தில் பெரிய பெரிய பப்பாசிப் பழங்களைத் தந்த றெட்லேடி தற்போது அதன் அரைவாசி சைஸ் பழங்களைத் தருகின்றது. றெட்லேடி வந்த புதிதில் அவை நோய்வாய்ப் படாமல் இயல்பாக வளர்ந்தன. ஆனால் தற்போது அடிக்கடி நோய்வாய்ப்பட்டு மரங்களின் உற்பத்தித் திறன் பாதிக்கப்படுகின்றது.

இதனால் கிருமிநாசினிகளுக்கும் உரத்துக்கும் பல்லாயிரம் ரூபாவைச் செலவளித்தே ஒருவர் விவசாயத்தில் ஈடுபட வேண்டியுள்ளது.

தற்போது றெட்லேடிப் பப்பாசி விதைகள் 50 கிராம் பத்தாயிரம் ரூபா வரையில் விலை போகின்றது.

செலவில்லாமல் பப்பாசிப் பழம் சாப்பிட்ட நாம் கோடி கோடியாக எமது பணத்தை வெளிநாடுகளுக்குக் கொட்டிக் கொடுக்கின்றோம்.

எமது பாரம்பரியங்களையும் இழந்து இயற்கை எமக்குத் தந்த நோய் எதிர்ப்புச் சக்திகளையும் இழந்து வாழுகின்றோம்.

இது போலவே பூசணி, மிளகாய்ச்செய்கைகளிலும் எமது பாரம்பரிய இனங்களை வேகமாக இழந்து வருகின்றோம்.

வாழையடி வாழையாக நாம் செய்த வாழைச் செய்கையும் எமது கையை விட்டுப் போய் விடும் நிலை வரப் போகின்றது.

மரபணு மாற்றப்பட்ட ஹவந்தீஸ் எனப் பட்ட வாழை இனமொன்று அண்மைய வருடங்களில் வடக்கு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுவதுடன் அவற்றுக்கான மருந்துகளும், உரங்களும் கூட வழங்கப்பட்டு வருகின்றது.

அவற்றை இலவசமாக வழங்கும் பல்தேசியக் கம்பனிகள் ஏற்றுமதித் தரம் வாய்ந்த வாழைக்குலைகளைத் தாம் கொள்வனவு செய்வதாகக் கூறுகின்றன.

ஆனால் நாளடைவில் மகரந்தச் சேர்க்கைகள் மூலமாக எமது ஊர்வாழைகள் மலடு பற்றிப் போக அவை அழிந்து விடும். வீட்டுக் கோடியில், தண்ணீர் போகும் வாய்க்கால்களில் எல்லாம் தனது பாட்டில் வளர்ந்து பயன்தரும் வாழைகளுக்கும் அழிவு காலம் வரப் போகின்றது.

அது போல கட்டையான பருவத்தில் நிறை கூடிய மாங்காய்களைத் தரும் மாமரங்களும் பல இடங்களில் நடப்பட்டு வருகின்றன.

எமது மண்ணுக்கே உரித்தான தனித்துவமான மாம்பழங்களைக் குறிப்பாகக் கறுத்தக் கொழும்பான் மாம்பழங்களை இழக்கும் காலமும் கிட்ட வரும் போல உள்ளது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கம் தாய் நாட்டைத் தூர நோக்குடன் நேசித்தால் ஒழிய மற்றும்படி எமது பாரம்பரிய விவசாயத்தைக் காப்பாற்ற வழியேதும் இல்லை என்பதே தற்போதைய உண்மை. ■

ந. குகபரன்

நிலையறிதல்*

சூழலோடு தன்னைப் பொருத்திக்கொள்ளுதல் மனிதரின் இயல்பு. சுற்றம், தொடர்பு, நட்பு என்ற இணைவினூடாக உயிர்க்கும் வாழ்க்கையில் பல்வேறு உணர்ச்சிகள் பகிரப்படுகின்றன. அவை வாழ்க்கைப் பாதையைத் தீர்மானிக்கின்றன. இந்த வாழ்க்கை எப்போதும் சமனிலையாக இருந்துவிடுவதில்லை. முரண்பாடுகளும் ஏமாற்றங்களும் மோதல்களும் வாழ்க்கையின் மகிழ்ச்சியை, நிம்மதியை பறித்துச்சென்றுவிடுகின்றன. அரசன் தொடக்கம் சாதாரணன் வரை இதற்கு விதிவிலக்கன்று. இந்தச் சிக்கல்களை எதிர்கொண்டு வெற்றிகொள்வதற்கு தன்னை ஆளும் ஆளுமை அவசியம். பேணவேண்டியவை, விலக்கவேண்டியவை தொடர்பான தெளிவு அவசியம். இதன் தரிசனத்தை இலக்கியங்கள் முன்நிறுத்துகின்றன.

அப்படியொரு காட்சியை புறநானூற்றில் வரும் ஆவூர் மூலங்கிழாரது பாடலில் காணமுடியும்.

போரானது வாழ்வின் அங்கமாகிப்போன சங்ககாலத்தில் வாழ்ந்தவர் மூலங்கிழார். அவர் வறுமையில் வாடியவர். வாழ்வதற்கு வழிதேடி அரசனான பாண்டியன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறனிடம் வந்தார். அவனிடம் இருந்து பொருள் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு காத்திருந்து சலித்து இனி கிடைக்காது என்ற நிலையில் ஏமாற்றம் அடைகிறார். வாழ்க்கையை எதிர்கொள்ள முடியாத வறுமை. தன் குடும்பத்தின் கையறுநிலை கண்முன் விரிகிறது. தன்னை காக்கவைத்து ஏமாற்றிய அரசனின் அறமற்ற பண்பைக் கண்டு எழுந்த அறச்சீற்றம் புலவரை இவ்வாறு பாட வைத்துள்ளது.

ஒல்லுவது ஒல்லும் என்றலும் யாவர்க்கும்
ஒல்லாது இல்லென மறுத்தலும் இரண்டும்
ஆள்வினை மருங்கின் கேண்மைப் பாலே
ஒல்லாது ஒல்லும் என்றலும் ஒல்லுவது
இல்லென மறுத்தலும் இரண்டும் வல்லே
இரப்போர் வாட்டல் அன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயில் அத்தை
அனைத்தா கியர்இனி இதுவே எனைத்தும்
சேய்த்துக் காணாது கண்டனம் அதனால்
நோயிலர் ஆகநின் புதல்வர் யானும்
வெயிலென முனியேன் பனியென மடியேன்
கல்குயின் நன்றன்ன நல்கூர் வளிமறை
நாணலது இல்லாக் கற்பின் வாணுதல்
மெல்லியல் குறுமகள் உள்ளிச்
செல்வல் அத்தை சிறக்கநின் னாளே

தன்னால் கொடுக்க இயலுமானதை மனமொத்துக் கொடுத்தலும் இயலாத இடத்து இல்லை என்று மறுத்துரைத்தலும் தாளாண்மையுடைய பண்பாகும். அதேவேளை தன்னால் இயலாத ஒன்றை இயலும் என்று உரைப்பதும் இயலுமான ஒன்றை இல்லை என்று மறுப்பதும் ஆளுமை அற்றவர்களது செயல்களாகும். இது இரப்போரை துன்பத்துக்குள்ளாக்குவதோடு புரக்கும் தன்மையுடையோரின் புகழ்குன்றி இழிவெய்துவதற்குக் காரணமாகவும் அமைந்துவிடும். இதனைப் புலவர் அரசனுக்கு எடுத்துகாட்டுகிறார்.

காக்கவைப்பது, நம்பிக்கையை ஏற்படுத்துவது, ஈற்றில் ஏமாற்றிவிடுவது எத்தகைய வலியைத் தரும் என்பதை உணர்த்துகிறது இச்செய்யுள். தன்னியாலுமைக்கு இயைந்த வற்றை உடன்பட்டு மேற்கொள்வதே உயர்ந்தோர் பண்பாகும். அரசன் அதிலிருந்து தவறிவிடுகிறான். வாழ்வதற்கு வழியற்ற சூழலில் ஏங்கிநிற்கிறார் புலவர்.

பொருள் பெறாத ஏமாற்றத்தில் புறப்படத்தயாராகிறார். அவரது வாயில் இருந்து அறத்தோடு வாழ்த்தும் பிறக்கிறது. "நோயிலராக நின்புதல்வர்" என்கிறார். பொருள்பெறாத நிலையில் வந்த மொழி இது. ஏமாற்றத்தில் வெளிப்படும் இந்த வாழ்த்துமொழி பொருள் கொடாத மன்னனுக்கு நிட்சயம் அச்சத்தை அறைவதாய் அமைந்திருக்கும். ஒருவரது செயலின் விளைவு செயலுக்குரியவரை மட்டுமன்றி சார்ந்தவர்களையும் பாதித்துவிடும் என்பது தொடர்புபடுத்திச் சிந்திக்கத்தக்கது. நோயற்றவர்களாக உன்பிள்ளைகள் வாழட்டும் என்ற வாழ்த்து பொருள்நிறைந்தது. "சிறக்கநின்னாளே" என்று மன்னனையும் வாழ்த்துகிறார். அவ்வாழ்த்தும் நிறைவைத் தரும் வாழ்த்தல்ல. காக்கவைத்து ஏமாற்றியதோடு பொருத்தி நோக்குகையில் அதுவும் அர்த்தச்செறிவுடையதே.

புலவர் வாழ்வதற்கு ஏற்ற வீடிருக்கவில்லை. வாழும் இடத்தைப்பற்றி அவர் கூறும் மொழி அச்சூழலை கண்முன்னே நிறுத்துகிறது. நான் வெயில் என்று நொந்து கொள்ளவோ பனி என்று படுத்திருக்கவோ போவதில்லை. கல்லைக் குடைந்து வைத்துள்ள காற்றுத்தடுப்பாக உள்ள என் குடிசை என்று தனது இல்லத்தின் தன்மையை எடுத்துரைக்கிறார். நாணத்தைத் தவிர வேறெந்த அணிகலன்களும் அணியாத ஒளிபொருந்திய நெற்றியை உடையவளும் மெல்லியலுமாகிய கற்பிற்சிறந்த என் மனைவியை எண்ணிச்செல்கிறேன் என்கிறார்.

மற்றவர்களின் உணர்வுகளை மதித்துச் செயற்படவேண்டும், செய்யக்கூடியவற்றை செய்ய உடன்படவேண்டும் இல்லையேல் அந்தச் செயல், அந்தச் சொற்கள் நம்மை பின்தொடரும். சொற்களின் அதிகாரம், ஆற்றல் அத்தகையது. சொன்ன சொற்கள் எமக்கு எஜமான். சொல்லாத சொற்களுக்கு நாம் எஜமான் என்பர். உணர்வையும் அறிவையும் துணைக்கொண்டு சமனிலையோடு விடயங்களை அணுகவேண்டியது அவசியம்.

தசரதன் மிகுந்த மகிழ்ச்சியான மனநிலையில் கைகேயியிக்கு வாக்களிக்கிறான். அவள் அதனை தனக்குப் பொருத்தமான இடத்தில் பயன்படுத்த முனைந்த போது கொடுத்த வாக்கு இராமனைக் காடனுப்பி தசரதன் உயிரையே பறித்துவிடுகிறது. இங்குதான் இயலும், இயலாது என்ற சொற்களின் முக்கியத்துவம் வெளிப்படுகிறது. பிறர் பண்பறிந்து செயற்படவேண்டும், முடிவெடுக்கவேண்டும். இதனையே மூலங்கிழாரும் வலியுறுத்துகிறார். வள்ளுவரும்

"பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமுந் தரும்" என்கிறார். பொய்யற்ற வாழ்வே பேரறம். அது எல்லா அறத்தையும் கொடுக்கும் சிறப்பு மிக்கது என்பது வள்ளுவரின் வாய்மொழியாகும்.

மூலங்கிழார் உரைத்த அறம் கற்கும் தோறும் நயம்பயப்பது. வாழ்வில் பேண வேண்டியது. இத்தகு அனுபவங்களின் பிழிசாறாகி எம்மோடு உரையாடும் செய்யுள்கள் வாழ்வுக்கு துணைதரும் வல்லமைகொண்டன "நவில்தொறும் நூல்நயம்" என்பது எத்தகைய பேருண்மை.

■

இராகன்

உளருக்கை ஒரு கதை! – 07

நாகதம்பிரான் கோயில் அழிறப்பர் டாக்குத்தர்

அந்தநேரம் ஊரிலை டாக்குத்தர்மார் பல ரகம். இப்போதையைப் போலை எல்லா டாக்குத்தர்மாரையும் ரகம் ரகமா ஒரிடத்திலை சந்திக்கிற நிலை அண்டைக்கு இல்லை. ஒவ்வொரு ஊரிலையும் ஒவ்வொரு ரகமானவை இருப்பினம். விசக்கடிக்கு ஒருத்தர், பிள்ளைப்பேத்துக்கு ஒருவர், வாதத்துக்கு ஒராள், முறிவு நெரிவுக்கு ஒராள் எண்டு துலைக்குத் துலை இருப்பினம். அவையைத் தேடிப் போறதுக்கு வண்டில் பிடிச்சுக்கொண்டும், கார் பிடிச்சுக்கொண்டும் போறவையின்ரை வசதிக்கேற்றாப்போலை போவினம். டாக்குத்தரெட்டை போய்வாறது ஒருநாள் பயணம்.

அந்தக் காலத்து டாக்குத்தர்மார் கைராசிக்காரர். ஒருக்கால் கையைப் பிடிச்சால் போதும் வருத்தம் இன்ன இடமெண்டு இல்லாமல் பறந்திடும். கையைப் பிடிச்சு நாடி பார்த்தால் "சீ.ரீ. ஸ்கான்" தோத்துப்போகும். இண்டைக்கு எத்தினை சோதினையளைச் செய்தாலும், அவையின்ரை பெறுமதி வேறை. சேடம் இழுத்துக்கொண்டு கிடக்கிறவையின்ரை கையைப் பிடிச்சு நாள் குறிச்சால் தப்பாது. நாடியைப் பிடிச்சுப்பாத்து வயித்திலை இருக்கிற குழந்தையைப் பற்றிச் சொல்லுவினம். கை, கால் சுளுக்கெண்டு போனால் கட்டையைப் போட்டு உருட்டிவிட்டு உளுக்கெடுப்பினம். இப்பிடி எத்தினை சாதனையள் செய்திருப்பினம்!

அவயளைப்போலை இல்லை இவர். இவரொரு வித்தியாசமான ஆள். ஆளைப் பார்த்தால் பூசாரித் தோற்றம். பரட்டையடித்த நீளத் தலை முடியை அள்ளி உச்சியிலை முடிஞ்சிருப்பார். எலும்புகள் எண்ணிப் பார்க்கக்கூடியளவுக்கு புடைச்சுக்கொண்டு கிடக்கும். எலும்புக்கூடொன்றின்மேல் கறுத்த விரிப்பால் போர்த்தி ஆளைச் செய்ததுபோல இருப்பார். முகத்திலை தாடை எலும்புகள் தள்ளியபடியிருக்கும். கண்ணுகள் கிடங்குகளின் அடியில் கிடக்கும். மீசை பழுப்பு நிறமேறிக் கிடக்கும். தாடி நீளமா வளர்ந்து தொங்கும். நெத்தி நிறைய திருநீறு பூசிக் குங்குமக் குறியிழுத்திருப்பார். பூவரசடி நாகதம்பிரான்தான் அவரின்ரை குலதெய்வம். அவர்தான் விளக்கு வைக்கிறவர். பூசையும் வைப்பார். பூசை நேரம் முடிய, மற்ற நேரங்களிலை கோயில்தான் அவரின்ரை "கிளினிக்". நாகதம்பிரான் கிளினிக்! வைத்தியத்துக்கு தேடி வாற ஆக்கள் எப்பவும் அவரை பூவரசடி நாகதம்பிரான் வாசலிலைதான் சந்திப்பினம். வைத்தியத்துக்கு தேடிவாற ஆக்களை வீட்டுக்கு எடுக்கமாட்டுது மனிசன். ஏனெண்டு தெரியுமோ? எந்த வீட்டுக்கு எடுக்கிறது? அவருக்கு ரண்டெல்லே வீடு! அத்தோட ரண்டு வீட்டிலும் சேர்ந்து 9 பிள்ளைகள். நாலும் அஞ்சுமாம்.

நாகதம்பிரான் பெரிய ஒரு பூவரசுக்கு கீழை, பனை ஓலையாலை வேய்ஞ்சு, மண் திண்ணை போட்ட கொட்டிலுக்குள்ளை குழுகுழுவெண்டு இருப்பார். அயலிலை வீடுகள் இல்லாத தனிச்ச இடம். பெரிசா ஊர்ச்சனம் புழங்காத இடம். நாகதம்பிரானிலை பற்றும், வைத்தியரின்ரை தேவையும் இருக்கிறவைதான் தேடி வருவினம். நாகதம்பிரானிலை பற்றுவைச்சு வந்துபோன ஒருத்திதானாம் வைத்தியரின்ரை ரண்டாவது வீட்டுக்காரி எண்டு ஆக்கள் கதைப்பினம்!

பூசாரியார் காலையிலை வாயிலை ஒண்டும் வையாராம். அது நாகதம்பிரானுக்காக! மதியம் ஒரு வீட்டிலையிருந்து சாப்பாடு வரும். இரவு மற்ற வீட்டிலையிருந்து வரும். காலையிலை நாகதம்பிரானுக்கு விளக்குக் காட்டி முடிஞ்ச பிறகு, வாறாக்களை கவனிச்சு முடிய மத்தியானம் ஆகிவிடும். மத்தியானம்தான் நாகதம்பிரான் வாசலைவிட்டு கொஞ்சம் வெளியிலை போவாராம். நாகதம்பிரான் இருக்கிற வளவுக்கு பக்கத்திலை பெரிய ஒரு காணியுக்கை அன்னமுன்னா காடுமாதிரி வளந்து கிடக்கிறதாம். அதுக்குள்ளை ஏழெட்டுப் பனையள் நிண்டதாம். நாகதம்பிரான் வாசலிலையிருந்து பார்க்க பனையிலை ஏறுறதும் இறங்கிறதும் அன்னமுன்னா பத்தைக்கு மேலாலை தெரியுமாம். அந்த நேரத்திலை பூசாரியார் வெளிக்கிருக்கிற சாட்டிலை அன்னமுன்னா பத்தையுக்கை நுழைஞ்சு திரும்பிவரவும், மத்தியானச் சாப்பாடு வரவும் சரியாக இருக்குமாம். பூசாரியாரின்ரை "ரைம் செடூல்" அப்பிடியானது!

நாகதம்பிரானின்ரை பெருமையை கேள்விப்பட்டு தூரத்து ஆக்கள்தானாம் வருவினம். அவையளுக்குத்தானாம் பூசாரியாரின்ரை "பவர்" தெரியும். ஊர்க்காரர் பயத்திலை கும்பிட மட்டும் வருவினமாம்! வந்துபோற நேரங்களிலை பூசாரியாரை பயபக்தியோடை சுகம் விசாரிச்சு வைப்பினமாம்!

நாகதம்பிரானுக்குள்ளையே பூசாரியார் லேகியங்கள், சூறணங்கள் ஒழிச்சு வைச்சிருக்கிறவராம். தேவை வரேக்கைதான் வெளியாலை எடுத்து பக்குவமாக் குடுப்பாராம். மருந்து குடுக்கிற விதத்தை பார்க்கிறவைக்கு அவர் நாகதம்பிரான் கலந்த வைத்தியராத்தான் தெரிவாராம்! மனிசன் லேகியத்தை பிரசாதமாக் குடுக்கிற ஆள்!

ஆராவது வைத்தியத்துக்கு தேடிவந்தால், அவையளை ஆறஅமர இருத்திவைச்சு, அவையளைப் பற்றி குலம், கோத்திரம் எல்லாம் விசாரிச்சு, ஒரு பூசையை தொடங்குவாராம். பூசை வந்திருக்கிறவையின்ரை நோக்கம் சரியா நிறைவேறி, நினைக்கிறது நடக்கவேணும் எண்டுதானாம். பூசையை முடிச்சு, நாகதம்பிரானுக்கு காட்டின விளக்கை வந்திருக்கிறவைக்கு தொட்டுக் கும்பிடக் குடுத்த பிறகு, நாகதம்பிரானுக்கு முன்னாலை தான் இருந்துகொண்டு, வைத்தியத்துக்கு வந்தவையை தனக்கு எதிரே இருக்கச்சொல்லி, அவையின்ரை கையளுக்கு நூலைக் கட்டிவிட்ட பிறகுதான் நாடிபிடிச்சுப் பார்ப்பாராம். நாடி பிடிச்சுப் பார்க்கிற நேரத்திலை அவருக்கு வெளியுலகம் மறந்துபோய், வைத்தியத்துக்கு வந்தவரின்ரை உடம்புக்குள்ளை நடக்கிறது மட்டும்தானாம் மனக்கண்ணிலை தெரியும். அவர் ஒரு "அல்ட்றா சவுண்ட் ஸ்கானர்"! மோனம் கலைஞ்சு கண் திறந்தால் சரி, வந்தவருக்கு என்ன லேகியம் கொடுக்கலாம் எண்டு தீர்மானித்து விடுவாராம். மறைச்சு வைச்ச லேகியத்தை பவ்வியமாய் எடுத்து, வாழையிலையிலை மடிச்சு, கடதாசியால் சின்னச்சின்ன சரையள் சுற்றிக் குடுத்து, அதுக்கான பக்குவங்களையும் சொல்லிவிடுவாராம். வந்தவை வெளிக்கிடுற நேரம், நாகதம்பிரானுக்கு முன்னாலை நிண்டபடி வெத்திலையிலை வைச்சு மடிச்சு "தெட்சணை" குடுப்பினமாம். அந்த தெட்சணையைத்தானாம் பின்னாளிலை "பீஸ்" எண்டு எல்லாரும் சொல்லீனமாம்!

ஆரம்பத்திலை இப்பிடியெல்லாம் ஆக்கள் வந்து வந்து போகேக்கை ஊராக்கள் தங்களுக்கை குசுகுசுவெண்டு கதைப்பினமாம். பிறகு அது பழகிப்போச்சுதாம். ஆள் செய்வினை, சூனியம் செய்யிறார் எண்டுதானாம் முதலிலை கதைச்சவை. பிறகு போகப் போகத்தானாம் விசயம் விளங்கினது. வந்து போற ஆக்களை கவனிச்சுப் பாத்திட்டுத்தானாம் சனத்துக்கு விசயம் வெளிச்சது. வந்து போன ஆக்களை பொம்பிளையள்தானாம் கூட. சிலநேரங்களிலை துலைவிலையிருந்து வாறவை ஆளைக் காரிலை ஏத்திக் கையோடை கூட்டிக்கொண்டும் போறவையாம். போய்வாற நேரங்களிலை சாமான் சக்கட்டுகளோடை வந்து ரண்டு வீட்டுக்கும் போய்த்தானாம் குளிச்சிட்டுப் பிறகு நாகதம்பிரானின்ரை வாசலுக்குப் போவாராம்!

உப்பிடி வெளியிலை போய்வாறதும், பொம்பிளையள் தேடிவாறதும் அடிக்கடி நடக்க நடக்க ஊராக்கள் உசாராயிட்டினமாம். உரிலை இருக்கிற புலனாய்வுத்துறை வேலைசெய்யத் தொடங்கீட்டுதாம்! அது விசயத்தை கண்டுபிடிச்சிட்டுதாம். அதுக்குப் பிறகுதான் பூசாரியாருக்கு "அழிறப்பர் டாக்குத்தர்" எண்டு காரணப்பெயர் வந்துதாம். " தனக்கு மட்டு வஞ்சகமில்லாத நாலும் அஞ்சுமா ஒன்பதைப் பெத்துப்போட்டு மனுசன் மற்றவைக்கு செய்றது சரியே." எண்டு ஊராக்கள் பேசுவினம். சாதாரண பூசாரியை அழிறப்பர் டாக்குத்தர் ஆக்கிற வல்லமை நாகதம்பிரானுக்கு இருக்குதெண்டு ஊருக்கை ஆக்கள் கதைக்கினம் பாருங்கோ!

■

அதிர்புனைவாக்க அகில சினிமா

வெ.அருட்குமரன்

இந்தவார அதிர்புனைவாக்க அகில சினிமாவில் அடிமைத்தனம் பற்றிக் கூறும் சிறந்த ஹாலிவுட் திரைப்படமாகிய ஜாங்கோ அன்செய்ண்ட் (Django Unchained) பற்றி நோக்குவோம். உலகின் தலைசிறந்த இயக்குநர்களில் சிறந்த திரைக்கதை எழுத்தாளர் டாப் 10 லிஸ்ட் எடுத்துப் பார்த்தால் டரண்டினோ பெயர் இருக்கும். அதற்குக் காரணம் அவரது கற்பனைக்கு வறட்சியே ஏற்படுவது இல்லை, உண்மைக் கதையைப் புனைவாக கூறுவதில் வல்லவர், அவர் படங்களில் நம்மைத்தான் திட்டுகிறார் என்று தெரிந்தாலும் நம்மையே அதை பார்த்துக் கைதட்ட வைப்பார்.

அடிமைத்தனம் என்பது யுனிவர்சல் கான்செப்ட், உலகெங்கும் பரவிக்கிடந்த /கிடக்கும் ஒன்று, இதனை மையக்கருத்தாகக் கொண்டு எந்த மொழியில், நாட்டில் வேண்டுமானலும் படமாக்கலாம், நம்ம வெற்றிமாறனின் அசுரன் படத்தை அமெரிக்காவில் நடப்பது போன்ற கதைக்களம் அமைக்கலாம், சின்னச் சின்ன மாற்றம் செய்தால் போதும், அல்பான்சோ குரான் எடுத்த கராமா படத்தைத் தமிழில் எடுக்கலாம். சினிமா என்னும் காலையில் உண்மைச் சம்பவத்தை நேரடியாக எடுக்காமல் புனைவுக் கதையாக மாற்றும் போது இயக்கு நரின் கருத்துச் சுதந்தரம் மற்றும் கற்பனைத்திறன் பறிக்கப்படாமல் இருக்கும். உலகில் நீங்கள் எங்கிருந்தாலும், ஒடுக்கப்பட்ட மக்களின் கதையைச் சினிமாவாக மாற்ற வேண்டுமென்றால், ஜாங்கோ அன்செய்ண்ட் (Django Unchained) படத்திலிருந்து கற்றுக்கொள்வதற்கு நிறைய உள்ளன.

ரத்தம் தெறிக்க தெறிக்க படம் பண்ணலாம் என யார் நினைத்து திரைக்கதை எழுதினாலும் முதலில் டரண்டினோ படத்தைத்தான் பார்ப்பார்கள். ஒரு கறுப்பின அடிமையை ஹீரோவாகக் காட்டி, அவர் வெள்ளையின அடிமை உரிமையாளர்களை சகட்டுமேனிக்கு கொல்வதைப் போல் படமெடுத்து அதை வெள்ளையின மக்களையே ரசிக்க வைத்த கலைஞர் டரண்டினோ. இவரைவிட வன்முறையை அழகாய்க் கையாண்டவர்களை நான் பார்த்ததில்லை.

12 years a slave படம் உண்மைக் கதையைச் சொல்லி நிறவெறியை விமர்சித்ததை விட அதிகமாக ஜாங்கோ அன்செய்ண்ட் என்ற கபாலி கதையைக் கொண்டு செய்துள்ளார் டரண்டினோ. 400 வருடங்களாக உங்களை மனிதனாகவே மதிக்காதவர்களை 70 வருடத்திலா மாற்றிவிடப் போகிறீர்கள் என்ற வசனம் தான் இந்த படத்தின் மையக்கருத்து.

ஹீரோ கிளைமாக்ஸில் மக்களுக்கு கருத்துச் சொல்கிறேன் என்று பக்கம் பக்கமாக வசனம் பேசி பார்வையாளர்களின் உயிரை எடுப்பார்கள், படத்தோடு ஒட்டாத தனித்தனி காட்சிகள் வைத்து கருத்து சொல்வது தமிழ் படங்களில் பார்க்க முடியும். டரண்டினோ தன் கருத்துக்களை படத்தின் எல்லா இடங்களிலும் பொதித்து வைக்கிறார். கதையும் நகர்ந்து கொண்டே இருக்கும், கருத்தும் நம் முகத்தில் அறையப்பட்டிருக்கும்.

படத்தில் உள்ள சின்ன வசனம் கூட பெரிய விடயத்தைச் சொல்லும், வசனமில்லாத காட்சிகள் கூட நிறைய விடயங்களை விட்டுச் செல்லும் அதுதான் டரண்டினோவின் சிறப்பு. முதலாளிகள் பலர் குதிரைகளில் ஹீரோவை தேடிப் போகும் காட்சி. அதில் அவர்கள் வெள்ளை முகமூடி அணிந்திருப்பார்கள். முகமூடி போட்டுக் கொண்டு சரியாகப் பார்க்க முடியவில்லை என்று சண்டை போட்டுக் கொள்வார்கள். இந்தக் காட்சி மூலம் டரண்டினோ காமெடியைத் தவிர வேறு என்ன சொல்ல வருகிறார். வெள்ளை நிறவெறி முகமூடி இருக்கும் போது சரியான பார்வை நமக்கு இருக்க முடியாது என்பதுதான்.

டரண்டினோவின் படங்களில் சாமுவேல் ஜாக்சனுக்கு ஒரு கதாபாத்திரம் இருக்கும், அவரின் நடிப்பு மற்றப் படங்களை விட டரண்டினோ படத்தில் சிறப்பாக இருக்கும். இந்தப் படத்தில் சாமுவேல் ஜாக்சனுடன் இணைந்து லியானார்டோ டிகாப்ரியோ நடிப்பில் மிரட்டியிருப்பார்.

20 நிமிடம் மட்டுமே திரையில் வரும் டிகாப்ரியோவின் நடிப்பு, ஏண்டா இந்தப் படத்திற்கு இவருக்கு ஆஸ்கார் தரவில்லை என யோசிக்க வைக்கும்.

குறிப்பாக டைனிங் டேபிள் காட்சி, கையில் ரத்தம் சொட்டச் சொட்ட டிகாப்ரியோ பேசும் வசனம், இந்தக் காட்சி திரைக்கதையின்படி கோபமாக மிரட்டி மேசையை தட்டி பேச வேண்டும், ஆனால் காட்சி எடுக்கும் போது உணர்ச்சி வசப்பட்டு மேசையில் கையால் தட்டுவார், கையில் காயம் ஏற்பட்டு ரத்தம் வரும், இது அவரை அறியாமல் வந்துள்ளது, இயக்குநர் கட் சொல்லாமல் அப்படியே காட்சிப்படுத்திப் படத்தில் வைத்திருப்பார். இந்தப் படம் முதல் முறை பார்க்கும் போது குழப்பங்களை ஏற்படுத்தும், ஹில்டியாவை வாங்கும் ஒப்பந்தம் நல்லபடியாகத் தானே முடிந்தது. பிறகு ஷால்ட்ஸ் ஏன் டிகாப்ரியோவை கொல்கிறார்? கடைசியாக ஒருமுறை டிகாப்ரியோ கைகொடுக்க சொல்வார்.

அப்போது தன் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் ஷால்ட்ஸ் அவரை சுட்டுவிடுவார். ஏன் அந்த கோபம் என்றால், ஒப்பந்தம் கையெழுத்தாகும் போது அங்கு ஒருவர் பிஜானோவில் பீத்தோவன் இசையை வாசித்து கொண்டிருப்பார். அது தான் ஷால்ட்ஸ்க்கு மிகபெரிய ஆத்திரத்தை வரவழைக்கும்.

பீத்தோவன்தான் வரலாற்றில் முதல் முறையாக தன்னிச்சையாக உருவான கலைஞன். அதற்கு முன் இருந்த எல்லா கலைஞர்களும் பிரபுக்கள் கீழ் தான் வாழ்ந்து வந்தனர். அப்படிப்பட்ட பீத்தோவனின் இசை அங்கிருந்த முதலாளிகளுக்காக வாசிக்கப்படுவது ஷால்ட்ஸ்க்கு ஆத்திரத்தை உண்டாக்கும். அதனால் டிகாப்ரியோவை நெருங்கியவுடன் அவரைச் சுட்டு விடுகிறார். பீத்தோவன் ஒரு கறுப்பினத்தவர் என்பது நினைவிருக்கிறதா?

அமெரிக்காவில் அடிமைகளுக்கு நடந்த கொடூரங்களை வெறுப்பதாக வரும் ஷால்ட்ஸ் என்ற பாத்திரம் ஒரு ஜேர்மனியர். அந்தப் பாத்திரத்தை வெள்ளையராகவே காட்டியிருக்க முடியும். அங்கிருந்த மோசமான வெள்ளையினத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியில் ஒரு நல்லவர் இருப்பது போல் அந்தப் பாத்திரத்தை வடிவமைத் திருக்கலாம்.

அதாவது என்னதான் அடிமை முறை இருந்தாலும் சில நல்ல வெள்ளை இனத்தவர் இருந்தார்கள் என்ற கருத்தை முன்வைத்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யவில்லை. இது தான் டரண்டினோவின் புரிதல்.

கிரீன் புக் (Green Book) என்ற படத்தை நாம் எதிர்ப்பதற்கு இதுதான் காரணம். மேல்சாதியினர் என்னதான் அடக்குமுறையைக் கையாண்டிருந்தாலும் ஒரு சில மேல்சாதியினர் தனிப்பட்ட முறையில் நல்லவர்கள் என்று சொல்லி அனுதாபம் செய்வது எவ்வளவு பெரிய அயோக்கியத்தனம்.

டிகாப்ரியோ கொடுக்கும் விருந்தில் வழங்கப்படும் கேக்குகளை ஷால்ட்ஸ் மறுப்பார். தான் இனிப்புகளை சாப்பிடமாட்டேன் என்று கூறுவார். கேக்குகள் தயாரிக்கப் பயன்படும் சர்க்கரையானது ஹல்வினின் வயல்களில் ஆயிரக்கணக்கான அடிமைகளை வைத்து தயாரிக்கப்படும். அதை எதிர்ப்பதாகவே இனிப்புகளை உண்ணமாட்டார் ஷால்ட்ஸ்.

இதெல்லாம் டரண்டினோவின் சக்திவாய்ந்த குறியீடுகள்.

ஹல்வின் கண்டி என்ற பெயரை கவனித்தீர்களா?

அடிமைகளை அடிக்கும் போது கைகளில் பைபிள் வைத்துக்கொண்டு அதை வாசித்து கொண்டே அடிப்பது போல் ஒரு காட்சி. அடிமை முறையை நியாயப்படுத்த முதலாளிகள் பைபிளை ஆதாரமாகப் பயன்படுத்தினார்கள் என்பதுதான் அங்கு சொல்லப்படும் கருத்து. கண்டி மற்றும் ஸ்பேன் பாத்திரங்கள், ஷால்ட்ஸ் மற்றும் ஜாங்கோ பாத்திரங்களுக்கு இடையே வேறுபாடுகளைப் பொருத்தி பார்க்கச் சொல்கிறார் டரண்டினோ. அதனால்த்தான் ஜாங்கோவின் வில்லனாக கண்டி இருந்தாலும், அவரைக் கொல்வது என்னவோ ஷால்ட்ஸ்தான். ஸ்பேன் ஐ கொல்வது ஜாங்கோ.

இதுபோன்ற வரலாற்றுப் படங்கள் போலியான கதைகளைக் கொண்டது என்று பார்வையாளனுக்கு தெரிந்தாலும், உண்மையான வரலாற்றின் மீது அவனுக்கு இருக்கும் பார்வையை அப்படங்கள் பாதிக்கிறது.

■ திரைப்படத்தின் இறுதியில், ஜாங்கோ அணிந்திருப்பது அடிமை உரிமையாளரான டிகாப்ரியோவின் ஆடைகள்.

■ கடைசிக் காட்சியில், ஹில்டி ஜாங்கோவிடமிருந்து துப்பாக்கியைத் தனக்குத்தானே எடுத்துச் செல்கிறார். அடிமை உரிமையாளர்கள் பெண்களை நடத்துவதற்கு இது முரணானது (Woman Empowerment).

எந்த ஒரு கருத்துமிக்க வசனமும் பேசாமலே சக்திவாய்ந்ததாக அந்த இறுதிக்காட்சி அமைந்தது. சினிமா என்பது விஷீவல் மீடியம், இங்கு அறிவுரை /கருத்து என்ற வசனங்கள் பேசி மக்களைக் கொல்ல வேண்டாம் என்பது டரண்டினோவிற்கு நன்கு தெரியும்.

■

நுரையீரலின் செயற்திறனை அதிகரிக்கும் சுவாசப் பயிற்சிகள்

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.
- திருமந்திரம்

மனம், மூச்சு இரண்டும் ஒன்றையொன்று சார்ந்து இயங்குகின்றன. மனம் சஞ்சலப்பட மூச்சின் வேகம் அதிகரிப்பதும், மூச்சின் வேகம் குறைவடைய மனம் சாந்தியடைவதும் நாம் அனுபவத்தால் வாழ்வில் காணும் உண்மை. உடம்பை வளர்த்து எப்படி உயிர் வளர்ப்பது? 80% ஆன செய்திகள் உடலில் இருந்து மூளைக்குச் செல்ல, 20% மட்டுமே மூளையில் இருந்து, உடலுக்குச் செல்கின்றன. எமது உடல் ஆரோக்கியமாக இருக்கும் போது மட்டுமே உயிரும் இவ்வுடலில் நிலைத்திருக்கும். நல்ல செய்திகளை மூளைக்கு அனுப்ப வேண்டுமானால் உடல் ஆரோக்கியத்துக்கு முக்கிய மான மனவளமும், அதை அடைய சுவாச மண்டலத்தின் சீரான இயக்கமும் அவசியம்.

சுவாச மண்டலத்தை சரியான முறையில் நாம் உப யோகப்படுத்துகிறோமா என்றால் இல்லை என்றே கூற வேண்டும். ஒரு சராசரி மனிதனின் நுரையீரலின் கொள் ளளவு 5-6 லீட்டர் ஆக இருந்த போதும் நாம் சாதாரண மாக அரை லீட்டர் காற்றையே உட்சுவாசம் மூலம் எடுக்கிறோம். இது ஒவ்வொருவரினதும் தேவை, செயற்பாட்டைப் பொறுத்து வேறுபடும். நம்மை மறந்த நிலையில் சுவாச செயற்பாடு தானாக நடந்து வருகிறது. 30-50 வயதுக்கிடையில் 15% ஆன நுரையீ ரலின் திறனை இழந்து விடுகிறோம். இன்னும் சொல்லப் போனால் சரியாக சுவாசிக்கும் அடிப்படைப் பயிற்சிக்கு நாம் செல்ல வேண்டியுள்ளது.

பொதுவாக நாம் பல வேளைகளில் கழுத்து, நெஞ்சு மற்றும் மார்புத் தசைகளின் உதவியுடன் ஆழமற்ற வகை யிலான சுவாச செயற்பாட்டை(vertical breathing) நடத்துகிறோம். இதனால் நுரையீரல் மூலம் பெறக் கூடிய முழுமையான பலன் கிடைக்காமல் போகிறது. கடின உழைப்பு, மன உளைச்சல், உடற்பருமன், புகைப்பிடித்தல், சூழல் மாசு, எமது இருக்கை முறை போன்ற காரணங்களால் இது நிகழ்கிறது. மனிதர்களாகிய நாம் உண்மையில் வயிற்றுத் தசைகளின் மூலம் சுவாச செயற்பாட்டை (Belly Breathing) நடத்தி முழுமையான பலனைப் பெற வேண்டியவர்கள்.

எமது வயிற்றுப் பகுதியின் மேல் உள்ள முக்கியமான தசை உதரவிதானம் (Diaphragm) ஆகும். நாம் சரியான முறையில் மூக்கின் வழி உதரவிதான தசைகளைப் பாவித்து இயல்பாக ஆழமாகச் சுவாசிக்கும் போது வயிற்றுப்பகுதி வெளிநோக்கியும், வெளிச்சுவாசத்தின் போது உள்நோக்கியும் செல்லும் (Horiontal Breathing). மார்பு, தோள்ப்பட்டை அசைவற்று இருக்கும்.

வெளிச்சுவாசத்தின் போது உடனடியாக வயிற்றுப் பகுதியை தளர்த்த வேண்டியதில்லை, இது படிப்படியாக எமது இடுப்பினதும் (Pelvic floor muscles) வயிற்றினதும் (Lower abs) அடிப்பகுதி தசைகளின் படிப்படியான சுருக்கத்தின் மூலம், முழுமையாக அசுத்தக் காற்று நுரை யீரலில் இருந்து வெளியேறும் விதமாக நடைபெற வேண்டும்.

இதனை ஒரு பயிற்சியின் மூலம் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும். கீழே உள்ள படத்தில் காட் டியபடி படுத்திருந்து, ஒரு கையை மார்பிலும் மறு கையை வயிற்றின் மேலும் வைக்கவும். விரும்பினால் பாரமற்ற புத்தகம் ஒன்றை வயிற்றின் மேல் வைக்கலாம். நீங்கள் சரியான முறையில் உட்சுவாசம் செய்யும் போது, வயிற்றுப்பகுதியில் உள்ள கை மார்புப்பகுதியில் உள்ள கையை விட மேலெழுவதையும், வெளிச்சுவாசத்தின் போது இதற்கு எதிர்மாறான கைகளின் நிலையையும் அவதானிக்கலாம். இப்பயிற்சியைக் கதிரையிலோ, பத்மாசனத்திலோ நிமிர்ந்து இருந்த நிலையில் பின்னர் தொடரலாம்.

உதரவிதானம் மூலமான சுவாசச் செயற்பாட்டின் மூலம் கிடைக்கும் பயன்கள்.

- உடல் அமைதியான, தளர்வான நிலைக்கு வருகிறது.
- உடலின் முக்கிய தசைகள் பலம் பெறுகின்றன.
- இதயத்துடிப்பு வேகம் மற்றும் இரத்த அழுத்தம் குறைவடைகிறது.
- உடலின் ஒட்சிசன் தேவை குறைவடைகிறது.
- சுவாச வீதம் குறைவடைகிறது.
- உதரவிதானம் பலமடைகிறது.
- உடற்கழிவு வெளியேற்றம் சிறப்பாக நடக்கிறது.

குழந்தையாக இருந்த போது எமது சுவாச ஒழுங்கு சரியாகவே இருந்தது. வாழ்வின் தேவைகளும், சவால்களும் எமது சுவாசத்தை ஆழமற்றதாக, அர்த் தமற்றதாக மாற்றிவிட்டது. விட்ட இடத்தில் இருந்து தொடருவதன் மூலம் இழந்தவைகளை நிச்சயமாக திரும்பவும் பெற்றுக் கொள்ள முடியும்.

சுவாச உறுப்புகளை சுத்திகரிக்கும் பிராணாயாமம் (இதனை ஆங்கிலத்தில் Purse lips breathing என்றும் அழைப்பார்கள்.)

செய்யும் முறை.

- கழுத்தும் தோள் களும் தளர்வாக இருக்க, மூக்கின் வழியாக காற்றை மெதுவாக உள்ளிழுக்க வேண்டும்.
- கீழ் உதடு உட்புறமாகவும், மேல் உதட்டின் கீழும் வருமாறு இருக்கும் ஓரளவு மூடப்பட்ட வாயின் இடைவெளிகளினூடாக வலிமையான வெளிச் சுவாசத்தை, உட்சுவாசத்தை விட இரு மடங்கு நேரம் எடுத்து வெளிவிட வேண்டும்.

பலன்கள் அதிகம் உபயோகப்படுத்தாத நுரையீர லின் அடிப்பகுதி செயற்படுத்தப்படுவதோடு சளி, மாசுக்களும் இலகுவில் வெளியேறுகின்றன. நுரையீர லில் தங்கியிருக்கும் பழைய காற்று வெளியேறுதலும் புதிய காற்று உள்நுழைதலும் சாத்தியமாகிறது. சுவாசப் பாதை நீண்ட நேரம் திறந்திருப்பதால் சுவாச நிகழ்வு இலகுவாகிறது, சுவாச வீதம் குறைவடைகிறது.

மேற்குறித்த பயிற்சிகள் உணவு செரிமானத்தின் பின் செய்யும் போது இலகுவாகவும் செயல்திறன் கூடிய பயிற் சிகளாகவும் இருக்கும். சுவாச நோய்கள் உள்ளவர்கள் மருத்துவரின் ஆலோசனையின் படி செய்யலாம்.

இந்தச் கொரோனா பேரிடர் காலத்தில் முறையான சுவாசச் செயற்பாடு இருக்கும் ஒரே காலமான நிகழ்காலத்தில் வாழ்தல் மற்றும் முறையான, அளவான உணவுப் பழக்கங்கள் மூலம் உயிர் வாழும் கோயிலான உடலைப் பேண முடியும்.

முரளீதரன் நவரத்தினம்
MSc in Yoga (அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம்)

நிலைக்கண்ணாடி

விம்பம் - 01

தரிசனன்

இந்த வாழ்க்கை நமக்கெல்லாம் கிடைத்துள்ள அரியதோர் சந்தர்ப்பம். யாருக்குமே அது ஒரு தடை வைதான் கிடைக்கிறது. இதன் அருமையைப் புரிந்து கொண்டு தமது அறிவையும் ஆற்றலையும் சரிவரப் பயன்படுத்தியவர்களே வரலாற்றில் சாதனைகள் என்று பேசப்படத்தக்க தமக்கும் பிறர்க்கும் பயன் தரத்தக்க காரியங்களை ஆற்றியிருக்கிறார்கள். அவ்வாறான அரிய செயல்களைப் புரிந்து தம்மை அடையாளப்படுத்திப் போன சாதனையாளர்கள் இந்த வாழ்க்கையின் அருமையைப் புரிந்து கொண்டு நம்முள் அடங்கிக் கிடக்கும் ஆற்றல்களை இனம் கண்டு நமக்கான பாதையை வகுத்து வாழ்ந்து காட்டிப்போயிருக்கிறார்கள்.

இந்த உண்மை விதிவிலக்கான ஒரு சிலருக்கு மட் டும் பொருந்தி வருகின்ற தனியாள் இயல்பல்ல. அந்த சாதனையாளர்கள் தமக்குக் கிடைத்த சந் தர்ப்பங்களைச் சரிவரப் பயன்படுத்திக் கொண்டு இருந்தார்கள். தமது ஆற்றல்களை இனம் கண்டு தம்மைத்தாமே அங்கீகரித்திருந்தார்கள். முடியுமென உள்ளூர நம்பினார்கள். சலிப்படையாமல் உழைத் தார்கள், சாதித்தார்கள்.

இவ்வாறாக ஆற்றலை அடையாளப்படுத்து வோராக நீங்களும் மாறமுடியும். உங்களிடம் இருக் கின்ற திறமையை முதலில் அடையாளம் காணுங் கள் அதனை மேலும் வளர்த்துக் கொள்ள மனதார விரும்புங்கள். அந்த இலக்கினை நோக்கி நம்பிக் கையுடன் முன்னேறுங்கள். இடையில் வருகின்ற தடைகள், இடையூறுகளை உடைத்துக் கொண்டு முன்னேற வேண்டும் என்ற உத்வேகத்தை உள்ளூரக் கட்டியெழுப்பிக் கொள்ளுங்கள். உங்கள் திறமை மீதான உங்கள் நம்பிக்கையை மேலும் உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் மீதான உங்கள் சுயாபிமானத்தின் சுடரை அணையவிடாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அந்த ஒளியின் தடத் தில் தொடர்ந்து முன்னேறுங்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் காலம், நீங்கள் யார் என்பதை உங்களுக்கே அடையாளங் காட்டும். தன்னை யாரெ னத் தானே அடையாளம் கண்டு கொள்ளும் ஒரு வனுக்குக் காலத்தின் பெறுமதி புரியும், திறமைகளின் விலை விளங்கும். தன்னைத் தானே அங்கீகரிக்கவும் தனது ஆற்றல்களைத் தானே பேணி வளர்த்துக் கொள்ளும் அவசியமும் புரிந்து போகும்.

அத்தகைய தன்மதிப்புப் புரியும் போது உங்களை உங்களுக்கே யாரென அடையாளம் காட்டும் காலம். இவ்வாறாகத் தன்மதிப்பை உணரும் ஒருவனுக்குத் தான் மற்றவர்களின் பெறுமதியும் அவர்களுக்கான தன்மதிப்புப் பற்றிய உணர்வும் புரியும்.

உங்களது 'நான்' என்னும் உணர்வு வெறும் திமிரோ நான் என்னும் (ஈகோ) ஆணவமோ அல்ல. நான் யார் என எனக்குச் சரியாக அடையாளம் தெரியும் போது தான் என்னை நானே பாதுகாத்துக் கொள்ளும் அவசியம் புரியும். எனக்கு என் மீது ஒரு சரியான கணிப்பு, சுயமதிப்பு உண்டாகும் போது தாழ்வு மனப்பாங்கோ அடுத்தவர்களைக் காட்டி லும் நான் கீழானவன் தரங்குறைந்தவன் என்ற பிழையான கருத்துக் கணிப்போ தோன்றாது.

அன்பானவர்களே உங்களின் பெருமையை உங்களுக்கு உணர்த்தவும் உங்களை யாரென உங்க ளுக்கே காட்டவும் உங்களை நீங்களே காத்துக் கொள்ளவும் உங்கள் உடல் உள நலன்களைப் பேணிக் கொள்ளவும் வேண்டிய அவசியத்தை உணர்த்தவே 'நிலைக்கண்ணாடி' என்னும் இந்தக் கட்டுரைத் தொடர் எழுதப்படுகிறது. சுயாபிமான மும் மனிதாபிமானமும் மேலான மனித நற்பண்பு விருத்தியும் உருவாவதற்கு ஒரு சிறிய வழிகாட்டி யாக இக் கட்டுரைத் தொடர் அமையுமென மனதார நம்புகிறேன்.

-வாருங்கள் அடுத்த வாரத்திலிருந்து சிந் திப்போம்.

என்ன உலகமடா பரமானந்தா?

தமிழ்க்கவி

> அதுகும் உந்த மத்தியானத்து வெயிலுக்கு என்ன ஒரு இதமா இருக்கும். பின்ன சாண்டில்யன்ர கதையெல்லாம் மல்லாந்து கிடந்து படிக்கேலாது. அதுக்கு குப்புறப் படுத்தாத்தான் தோது. நீங்க சொல்லுறியள் அடை மழை பெய்ய வேணும். வீட்டு வாசலுக்க சாக்கை இழுத்துப் போட்டு அதில படுத்துக் கொண்டு ஙா.. எப்பிடியோ குப்பறத்தான். கல்கி தீபாவலிமலரை அக்கா, நான், தங் கச்சி எல்லாரும் முறைவச்சு ஆளுக்கொருபக்கம் சத்தம் போட்டுப்படிக்க வாசிக்கப்பழகாத தம்பியும் பக்கத்து ஒத்தாப்புக்க கிடக்கிற சின்னாச்சிக் கிழவியும் கேட்டுக் கொண்டிருப்பினம்.

இப்ப கொஞ்ச நாளைக்குள்ள பேஸ் புக்கில புத்தகங்களா கொட்டுப்பட்டுக் கொண்டிருக்கு. குழு குழுவா புத்தகப் புழுக்களெல்லாம் வெளிக்கிட்டிருக்கு. நாங்களும் குழுத்தான் விரும்பியோ விரும்பாமலோ குழுவில சேர்த்து விட்டா இருக்கத்தான் வேணும். ஒரு வேளை குருடன் பெண்டிலுக்கடிச்ச கணக்கா பெறுமதியான விசியங்களும் வந்து விழுந்திடும்.

என்ன அந்த நாளையில் நான் சின்னப் பொடிச்சியா இருந்த காலத்தில என்ர அப்பு எனக்கொரு கெட்டபழக்கத்தை பழக்கிப் போட்டார். 'எடி பிள்ளை காத்துக்குத்தான் ஒரு கடதாசி பறந்து வந்தாலும் அதை எடுத்து படிச்சுப்பார். சில வேளை அதில உன்ர அறிவுக்கு தெரியாத விசியம் ஏதும் இருந்திடும் எண்டு . பின்ன அச்சடிச்ச காயிதமோ? ஆரும் எழுதிக் கிழிச்ச காயிதமோ? இண்டைவரைக்கும் நான் அதை பின்பற்றித்தான் வாறன். ஏனெண்டா தந்தை சொல் மிக்க மந்திரமில்லை. உந்தப் பழக்கத்தால நான் அம்பத்தெட்டு வரியமா படிச்சு கிழிச்சது எக்கச்சக்கம். தக்கதை படிச்சு பாராட்ட வாங்கினதுபோல தகாததைப்படிச்சு விளக்குமாத்தால அம்மாவிட்ட வாங்கினதுகளும் அடக்கம்.

சரி நான் சொல்ல வந்ததென்னண்டா உந்த முகநூல் எழுத்துகளத்தான். கொஞ்சம் பொறுங்கோ, அதுக்கு என்ன பேர் முக நூல். அதென்னங்கோ முகத்தை காட்டாம அதுக்க கொஞ்சப்பேர் வருகினம். முகநூல் எண்டத விட பேஸ்புக் எண்டு சொல்லுறதுதான் பாசன். நல்ல தரமான எழுத்தாளருகள் பெறு மதியான விசியங்களை போற போக்கில பதிஞ்சிட்டுப் போகினம் எட பிறகு பாத்தா அதெல்லாம் ஒருநாளைக்கு புத்தகமாவும் வருது.

சிலது பேர் தங்கட தங்கட வெப்பியாரத்தையும் அதுக்கதான் கொட்டுகினம். தங்கட கோவத்தையும் அதுக்கதான் காட்டுகினம் ஏறக்குறைய ஒரு சேரிச் சனத்தின்ர வாழ்க்கைதானுங்கோ முகநூல் வாழ்க்கை. சண்டை சச்சரவு, அன்பு பாசம், பிறந்தநாள் இறந்தநாள், நினைவுதினம், பாராட்டு பணிவிடை எண்டு தங்கட உணர்ச்சியள கொட்டிவிடுகிற இடமா போச்சு. எனக்கே சந்தேகம் வந்திடும். இது பொக்கிசப்பக்கமா குப்பைத்தொட்டியா எண்டு. ஆனாலும் பாருங்கோ எல்லா எழுத்தாளருக்கும் பத்திரிகையளில எழுத கிடைக்காது. இனி பேப்பருகளுக்க நுழைய முன்னம் பெரிய நெருப்பாத்தை நீந்தாம முழுகி கடக்க வேணும். அது எல்லாருக்கும் வாய்க்காது. ஆனா முகநூலில எழுதிற எதையும் போடலாம். ஆரும் லைக்கினாலும் சரி லைக்காட்டியும் சரி. திருப்பி மறுத்தானடிச்சாலும் நோபுறாப்பளம் எண்டு கடாசிட்டு போக ஒரு இது இருந்தாக்காணும்.

பின்ன புத்தகங்களை கொண்டு வந்து நிறைய கொட்டியிருக்கெண்டு சொன்னனே. பாதிக்குமேல படிச்ச புத்தகங்கள்தான். புதுசெண்டு தெரியிறதுகளையும் போனில கையில வச்சுக்கொண்டு படிக்கிறதில பொச்சந் தீராது. அது ஏதோ ஆத்தாதவன் அப்பீல் கேட்ட மாதிரித்தான்.

கதைப்புத்தகமெண்டா அது கைக்க பாரமில்லாம நிக்கவேணும். தரையில மல்லாக்குப் பறிய படுத்துக்கொண்டோ அல்லது மாமரத்து, பிலா மரத்து இணல்ல படுத்துக்கொண்டோ வாயிச்சுப் பாருங்கோ. அதுகும் உந்த மத்தியானத்து வெயிலுக்கு என்ன ஒரு இதமா இருக்கும். பின்ன சாண்டில்யன்ர கதையெல்லாம் மல்லாந்து கிடந்து படிக்கேலாது. அதுக்கு குப்புறப் படுத்தாத்தான் தோது. நீங்க சொல்லுறியள் அடை மழை பெய்ய வேணும். வீட்டு வாசலுக்க சாக்கை இழுத்துப் போட்டு அதில படுத்துக் கொண்டு ஙா.. எப்பிடியோ குப்பறத்தான். கல்கி தீபாவலிமலரை அக்கா, நான், தங்கச்சி எல்லாரும் முறைவச்சு ஆளுக்கொரு பக்கம் சத்தம் போட்டுப்படிக்க வாசிக்கப்பழகாத தம்பியும் பக்கத்து ஒத்தாப்புக்க கிடக்கிற சின்னாச்சிக் கிழவியும் கேட்டுக் கொண்டிருப்பினம். வீட்டுக்க மழை ஒழுகிறதும் தெரியாதெண்டாப் பாருங்கோவன். அதில வாற படங்களை இப்ப நினைச்சாலும் வாயூறுது.

பின்ன இந்த முகநூலுக்கால இன்னுமொரு செய்தி வந்திருக்கு கல்கி நிறுவனம் ஞாயமான புத்தகங்களை வாசகர்களுக்காக இலவசமா இணையத்தில போட்டிருக்காம். பட்டியலப்பாத்தன். அற்புதமான புத்தகங்கள் போட்டி ருக்கிறாங்கள். படிக்கப்படிக்க நெஞ் சிலினிக்கும் அருமையான புத்தகங்கள். எங்க இப்ப உள்ள பிள்ளையளுக்குத்தான் பாடப்புத்தகமே படிக்க நேரமில்லாம கேள்வித்தாளுகள வச்சு விடைய ரெடிபண்ணுதுகளே. சிரிக்காம கேளுங்கோ பாரதம் இலக்கியப்பாடம் மூண்டாவது தடவையா சோதினை எழுதப்போற பெடியனட்ட குந்தி ஆரெண்டு கேட்டன். பாண்டவர்களின்ர மனிசியா எண்டு என்னை திருப்பிக் கேட்டான். ஆனா அவன் பரீட்சையில பாஸ். எப்பிடியெண்டா சப்பித்துப்பினதுதான்.

வாசிப்பெண்டதும் ஒரு போதைதான் எங்கட அம்மா நெடுகச் சொல்லுவா கதைப்புத்தகத்தை கையில எடுத்தா கொப்பருக்கு இடிவிழுந்தாலும் கேளாதெண்டு பின்ன எங்களுக்கு மட்டும். எங்கட அப்பான்ர அம்மா மலைமகள் புத்தகம் நெடுக வாங்குவா. எங்கட ஊருக்க புத்தகம் வாங்கிற நாலைஞ்சு குடும்பங்களும் ஆளுக்கொரு புத்தகம் வாங்கிறதுதான் ஆனா எல்லாரும் அந்தந்த மாசத்தில வாற புத்தகங்கள் எல்லாத்தையும் படிச்சிருவம். கலைமகள் அப்பாத்தை வாங்குவா.கல்கி அப்பு வாங்குவார். பக்கத்தில பூமணி குமுதம் வாங்குவா. சைமனய்யா ஆனந்த விகடன், வடிவேலண்ணை காதல் ஓம் காதல் எண்டொரு சஞ்சிகை வந்தது. பேசும்படம் ஆறுமுகத்தார். நான் வீடு வீடாத்திரிஞ்சு எல்லாத்தையும் பண்டமாற்றுப்பண்ணி எல்லாத்தையும் எல்லாரும் வாசிப்பம். அதே தைரியத்தோட முகநூல்ல வந்திருக்கிற புத்தகங்கள வாசிக்கலாம் எண்டா அது கொஞ்சம் கஸ்டமான காரியந்தான். ஏனெண்டா நான் சொன்னது போல கையில வச்சு படம்பார் பாடம்படி எண்ட மாதிரி வந்தாயெல்லோ. எண்டாலும் இந்த புத்தகப் பரிமாற்றங்களுக்கு ஒரு நன்றி சொல்லத்தான் வேணும் சாமம் சாமமா போனில கடலை போட்டாலும் வாசிக்க நினைச்சா கண்ணைச் சுழட்டுது எண்டு சொல்லுறவைய ஒண்டும் சொல்லவோ செய்யவோ ஏலாது. அவையள் அதிர்ஸ்டம் இல்லாதவை எண்டு ஒதுக்க வேண் டியதுதான். பின்ன வாசிக்கிறவைக்குத்தான் அந்த ருசி தெரியும்.

கனவின் சில கோடுகள்

அரவமற்றிருக்கும்
பெருவெளியின் ஆத்மாவில்
என் கனவும் கலந்திற்று.

காலத்தெருக்களில் நான் செய்த
தடமழியாப் பயணங்களில் மிளிர்ந்து
துயரிசையாயிற்று அது.

துயரிசையை மீட்டி
என் கணங்களை,
முகாரியாய் நெய்கிறது காற்று.

காற்றிலேறிக் கபடச்சிறகுகளுடன்
உயரப்பறக்கும் கோரப்பட்சிகள்...
இலைகளற்ற கிளையின் உச்சியில்
தொங்கும்,
என் மீதமுள்ள நம்பிக்கையைத்
தீனியாக்கக் குறிவைக்கின்றன.

என் கோலத்தில்,
மறைந்துள்ள சில புள்ளிகள் போல்,
கனவின் சில கோடுகளும்
பத்திரமாய் வரையப்பட்டுள்ளன,
யாரும் பார்க்காதபடி.

சு.க.சிந்துதாசன்

கண்ணீர் அஞ்சலி

அருள்பிரகாசம் வேணுகாந்தன்

தோற்றம்
14 - 05 - 1987

மறைவு
08 - 06 -2021

எமது ஆருயிர் நண்பரும்
BCAS இன் 21ஆம் Batch QS மாணவனும் ஆகிய
தும்பளையை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை
வசிப்பிடமாகவும் கொண்ட அருள்பிரகாசம் வேணுகாந்தன் அவர்கள்
08.06.2021அன்று ஜேர்மனியில் அகால மரணமானார்.
அன்னாரின் மறைவால் துயரிற்று இருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

வடமராட்சி நண்பர்கள்

மீண்டும் பிறப்பேன்... விடுதலைக்காகப் போராடுவேன்...

ஆதித்த கரிகாலன்

வன்னிப் பல்கலைக்கழகம் - என்பது தமிழ்த்தேசியர்களின் பெருங்கனவுகளில் ஒன்று. பல்கலைக் கழக அனுமதிகளில் நிகழ்ந்த தரப்படுத் தல்களினால் ஆத்திரமுற்ற தமிழ் இளை ஞர்களின் கோபக்கனலே, தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தை வட்டுக் கோட்டை, வல்வை, சுதுமலை முதல் முள்ளிவாய்க்கால் வரை நகர்த்தியி ருந்தது - என்பது மறைபொருளாயிருக் கும். தமிழீழ உட்கட்டுமான அமைப் பியலைத் தற்காலிகமாக எழுத்தாவணத் திட்டமாக உருவகப்படுத்தி வைத்திருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிட லில், கிளிநொச்சியில் அறிவியல் ஆராய்ச்சிகளுக்கான பல்கலைக்கழக மொன்றும் - முல்லைத்தீவில் கடற் தொழில் சார் கற்கைநெறிகளுக் கான பல்கலைக்கழகமொன்றும் - வவு னியாவில் கைத்தொழில் நெறிகளுக்கான உயர் கற்கைக் கல்லூரியொன்றும் வரை புகளாக்கப்பட்டிருந்தன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் - விவ சாய விஞ்ஞானக் கற்கை நெறிக ளுக்காக கிளிநொச்சி வளாகத்திற்கு, கிளிநொச்சி நகருக்கு அண்மையில் காடழித்து உருவாக்கிய நிலப்பரப்பிற்கு 'அறிவியல் நகர்' எனப் பெயரிட்டிருந் தார்கள். இன்றளவும் அறிவியல் நகர் என்ற பெயருடனேயே கிளிநொச்சிக் கான யாழ்.பல்கலைக்கழக வளாகம் அழைக்கப்பட்டும் வருகின்றது. 2009 இற்கு பிறகு உருவாகியிருக்க வேண்டிய 'நெய்தல் நகர்' மற்றும் 'தொழில் நகர்' எனப் பெயர் சூடியிருக்க வேண்டிய இரு உயர்கல்விக் கூடங்களும் தள்ளிப் போயின. பாடசாலைக் கல்விக்குப் பிறகான தொழில் வாய்ப்புக்களை, பட்டங்களாகக் கற்ற இளைஞர்களை சமூக வெளியீடுகளாக வெளியிடுவதற்கு - ஆயுதமேந்திய ஒரு விடுதலை இயக்கம் முன்னெடுத்திருந்த முயற்சிகளே அவர்களின் சமூக மேம்பாட்டுக்கான அளவுகோல். செம்மையான தற்சார்புப் பொருளாதாரத்தைத் தமிழ்த் தேசிய மக்களிடத்தில் கட்டியெழுப்புவதற்குத் தேவையான மண்ணுக்குரித்தான பொருண்மியக் காப்பை, அத்தகைய தொரு உயர்கல்விச் சமூகத்தினூடாகவே கட்டியெழுப்ப முடியும், என்பது அன்றைய படிக்காத பொடியங்களின் சிந்தனையே. இன்று மெத்தப் படித்த கொள்கையாக்கங்களினாலும் வழி மொழியப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 01 முதல் செயற்படும் வண்ணம் 'வவுனியா பல்கலைக்கழகம், இலங்கை' எனும் பெயருடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் வவுனியா வளாகம் வன்னிப் பிராந்தியத்துக்கான பல்கலைக் கழகமாக தரமுயர்த்தப்பட்டு வர்த்த மானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள் ளது. 1998 ம் ஆண்டு ஜெயசிக்குறு எதிர்ச் சமரில் இரண்டாவது ஓயாத அலைகளாக எதிர்த்தாக்குதல் நடாத்தி வன்னிப் பிராந்திய நிலப்பரப்பினை தமக்கான ஆண்டில் எல்லைகளோடு வரையறுத்த தமிழீழ விடுதலைப்புலிகள், 2000ம் ஆண்டு முதல் கிளிநொச்சியில் அறிவியல் நகர் பல்கலைக்கழகத்திற்கான முனைப்புக்களை ஆரம்பித்து இருந்தனர். தமிழ்த் தேசிய நிலப்பரப்பில் - வடக்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு மேலதிகமாக இரண்டாவது உயர் கற் கைப் பீடமொன்றைப் பல்கலைக்கழக மாக்குவதற்கான இலங்கை அரசின் முடிவுக்கும் - தமிழீழ விடுதலைப் புலி களின் ஆரம்ப முயற்சிகளுக்கும் இடை யிலான கால இடைவெளி சுமார் 21 வரு டங்கள் - கிட்டத்தட்ட இரு தசாப்தக் காலம். "உடையவன் பாரா வேலை, கால் நூற்றாண்டுக் கட்டை" யாகிப் போனதற்கு தக்க உதாரணம் - வன்னிப் பல்கலைக் கழகம்!

(அன்றைய தமிழீழ விடுதலைப் புலிக ளின் அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி, சுஜந்தன், பூவண்ணன், வண. கருணாரத்தினம் அடிகள் ஆகியோரைக் கொண்ட குழுவே அறிவியல் நகரின் திட்டவடிவமைப்பில் முதன்மைப் பாங் காற்றியவர்கள்.)

ஈழத்தின் 'பகத்சிங்' என்று போற்றியழைக்கப்படுகின்ற தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் முதல் தற்கொலையாளர் பொன். சிவகுமாரன் வீரமரணிக்கும் போது அவரது வயது 24. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவனான சிவகுமா ரன் ஐந்தாண்டிற்கு மேற்பட்ட தமிழ் மாணவர் பேரவை செயற்பாடுகளோடு பொலிசாரால் தேடப்பட்டு சயனைட் அருந்தி உயிர் நீத்த போது பல்கலைக் கழக இறுதி வருட மாணவனொருவனின் வயதுடையவராகவே இருந்தார். 60 களின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப் பட்ட பல்கலைக்கழகத் தரப்படுத்தல் முறைகளினால் தமிழ் இளைஞர்கள் சிங்கள தேசத்துடன் இசைந்தொழுக முடியாத நிலைப்போக்கு வலிந்தழைக் கப்பட்ட காலத்தில் பாடசாலைக் கல் வியை முடித்தவர், சிவகுமாரன் கல்விச் சேவைகளில், இனரீதியான புறக்கணிப் பினை எதிர்க்கவென உருவாக்கப்பட் டிருந்த தமிழ் மாணவர் பேரவையின்

2009 இற்கு பிறகு உருவாகியி ருக்க வேண்டிய 'நெய்தல் நகர்' மற்றும் 'தொழில் நகர்' எனப் பெயர் சூடியிருக்க வேண்டிய இரு உயர்கல்விக் கூடங்களும் தள்ளிப் போயின. பாடசாலைக் கல்விக்குப் பிறகான தொழில் வாய்ப்புக்களை, பட்டங்களாக கற்ற இளைஞர்களை சமூக வெளியீடுகளாக வெளியிடுவ தற்கு - ஆயுதமேந்திய ஒரு விடுதலை இயக்கம் முன்னெடுத் திருந்த முயற்சிகளே அவர் களின் சமூக மேம்பாட்டுக்கான அளவுகோல். செம்மையான தற்சார்புப் பொருளாதாரத் தைத் தமிழ்த் தேசிய மக்க ளிடத்தில் கட்டியெழுப்புவதற் குத் தேவையான மண்ணுக் குரித்தான பொருண்மியக் காப்பை, அத்தகையதொரு உயர்கல்விச் சமூகத்தினூடா கவே கட்டியெழுப்ப முடியும் - என்ற, அன்றைய படிக்காத பொடியங்களின் சிந்தனையே.

செயற்பாடு முகிழ்ந்த காலத்தில் பாட சாலைக் கல்வியை நிறைவு செய்து விட்டு, பல்கலைக்கழகம் செல்லமுடி யாமற்போன ஆயிரமாயிரம் தமிழ் இளைஞர்களின் நடுவில் தனித்துவமான போராட்ட வடிவத்தை அவர்களிடம் அறிமுகப்படுத்தியது சிவகுமாரனின் அறச்சீற்றம்.

இவ் விடுதலையென்பது வெறுமனே அதிகாரக் கையளிப்பாக மட்டுமல் லாது; மொழி, பண்பாடு, கலை - கலா சாரம், கல்வி, பொருளாதாரம், சமூக விழுமியம், ஒழுக்கம் ஆகிய பல கூறுக ளின் காலத்தகு வளர்ச்சியையும் இணைத்தது - என்பது, தியாகி சிவகு மாரன் மட்டுமல்லாது அவருக்கு பிறகும் தமிழீழக் கனவைத் தம் கண்களுக்குள் சுமந்த லட்சக்கணக்கான தமிழ் இளை ஞர்களினதும் ஏகோபித்த நம்பிக்கை யாயிருந்தது. பாடசாலைக் காலத்தி லேயே போதைப்பொருளுக்கும் வாள் வெட்டுக்கும் பாலியல் பிறழ் நடத்தைக் கும் ஒழுக்கச்சீர்கேடுகளுக்கும் தம்மை அர்ப்பணித்துச் சீரழியத் தயங்காத தமிழ் மாணவ சமூகமொன்றின் அதிவேக உருவாக்கத்தை மறைமுகமாக ஊக்கு விக்கும் திட்டமிடப்பட்ட இனவழிப்பு பொறிமுறை - பேரினவாதிகள் இழிகுணத்தோடு பிணைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றது.

என்றும் இல்லாதவாறு வடக்கும் - கிழக்கும் பாடசாலைக்காலப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கீழ்வரிசையில் நிரற்படுவதன் விளைவு காரணமாக, மாணவ சமூகத்தின் - சமூக விடுதலை மீதான விழிப்புணர்வின் மையும் இனவிடுதலையின் மீதான பற்ற றுப்பும் புலப்படாத வலுக்களாகப் பின் னிற்கின்றன. தமிழ்த் தேசிய இனம் மீதான காழ்ப்புணர்வின் பாற்பட்டு, இத் தீவின் ஒரே இனமாகி சிங்கள தேசியத் தினால் வகுக்கப்பட்ட 'இலங்கையர்' கோசத்தோடு எம்முன்னே குருதிப்ப சியுடன் நிற்கும் பௌத்த - சிங்கள பேரினவாதத்தினை எதிர்க்க எம்மிடம் எஞ்சியிருக்கும் ஒரே ஒரு ஆயுதமாக 'தன்னிறைவுக் கல்வியே' தரப்பட்டிருக் கிறது. பொலிசாரால் சுற்றிவளைக்கப் பட்டு சயனைட் அருந்திய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிவகுமாரன் ஜூன் 05 தனது இறுதி மூச்சை விட முன் தன் நண்பர்களிடம் சொன்னதே.

-"மீண்டும் பிறப்பேன், விடுதலைக் காகப் போராடுவேன்"

அக முரண்பாடுகளைக் களைதலும் தமிழ்த்தேசியத்தை வாழ்வு முறையாக்குதலும்

சி.அ.யோதிலிங்கம்

வடக்கும் கிழக்கும் எதிர் நோக்கும் பிரச்சினைகள் ஒத்த தன்மை கொண்டவையல்ல. இதனால் வடக் கிற்கும் கிழக்கிற்கும் என்று தனித் தனியான அணுகு முறைகளும் செயற்பாடுகளும் முன்னிறுத்தப் படவேண்டும். கிழக்கை சுதந்தி ரமாக இயங்க விடுவது இங்கு பிரதானமானது. அது தமிழ்த்தேசிய முன்னெடுப்புக்களை ஆரோக்கிய மானதாக அமைக்க உதவும். அரசாங்கம் இந்திய, மேற்குலகச் சக்திகள் கிழக்கை முதன்மைப் படுத்த விரும்பவில்லை. கிழக்கை முதன்மைப்படுத்தினால் வடக்கு கிழக்கை இணைக்க வேண்டிவரும் என்பது அவர்களின் அச்சமாக இருக்கிறது.

தமிழ்மக்கள் மத்தியில் இருக்கின்ற அக முரண்பாடு கள் நீக்கம் செய்யப்பட வேண்டும். ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் எழுகின்ற அக ரீதியான முரண் பாடுகளையே அக முரண்பாடு எனக் குறிப்பிடலாம். இத்தகைய அக முரண்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் வெகுவாகக் காணப்படுகின்றது. அக முரண்பாடுகளைக் கவனத்தில் எடுத்துச் செயற்படுகின்ற போதுதான் மக் களை ஒன்றிணைத்து அரசியல் ரீதியாக முன்னேறிச் செல்ல முடியும். இல்லையெனில் பல தடைகளை எதிர்நோக்க வேண்டிய சூழல் தமிழ் அரசியல் பரப்பில் ஏற்படும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் நான்கு வகையான அக முரண்பாடுகள் உள்ளன.

1. சாதிய முரண்பாடு
2. பிரதேச முரண்பாடு
3. மத முரண்பாடு
4. பால் முரண்பாடு

முதலாவது, சாதிய முரண்பாடு: மரபான தொழில்களை அடிப்படை யாகக் கொண்டதும். பிறப் பினாலே ஏற்றத்தாழ்வுகளைக் கற்பிப்பதும் அதனையும் விட தமிழ் மக்கள் மத்தியில் வேளா ளர் தலைமையிலான அதிகாரப் படி நிலைகளை வலியுறுத்துவ துமான சமூக நிலைதான் சாதிய முரண்பாடாகக் கருதப்படுகி றது. மதம் சாதியத்துக்கான சித்தாந்த நிலைப்பட்ட கருத்துக்களையும் பொருளாதாரம் வர்க்க முறையிலான ஒடுக்கு முறையினையும் வெளிப்படுத்துகிறது. ஒரே நேரத்தில் பொருளாதார ஒடுக்கு முறைக்கும் சித்தாந்த ஒடுக்கு முறைக்கும் முகம் கொடுக்கும் நிலையில்தான் சாதியால் ஒதுக்கப்படும் மக்கள் இருக்கின்றனர். பொருளாதார ஒடுக்கு முறை வர்க்க ரீதியான அடிப்படையிலும் சித்தாந்த ஒடுக்கு முறை தீண்டாமை என்ற அடிப்படையிலும் பேசப்பட்டு வருகிறது. தேசிய போராட்டம், சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம், இலவசக்கல்வி, தமிழ் மொழிக் கல்வி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு போன்றவை சாதிய ஒடுக்கு முறையை பலவீனப்படுத்தியுள் ளது. ஆனாலும் முற்றுமுழுதாக இல்லாமற் போனதா கக் கூறமுடியாது. பொருளாதார ஒடுக்கு முறை என்பது உற்பத்தி உறவுகளுடன் தொடர்புபட்ட விடயம். இன்று பொருளாதார ரீதியில் எல்லாத்தரப்பினரும் முன்னே றியிருக்கும் சூழலில் உயர்சாதியாகக் குறிப்பிடப்படும் மக்கள் சமூகத்தினரின் நிலங்களில் வேலை செய்ய வேண்டிய கட்டாய நிலைமை இல்லை என்பது இத்த கைய ஒடுக்குமுறையினையும் பலவீனப்படுத்தியுள்ளது. சமய ரீதியாக எழும் ஒடுக்குமுறையானது பலவீன மடைந்துள்ளதாக கருதப்படுகின்ற போதும் ஆல யங்களில் பைக்கோ மற்றும் இராணுவத்தினரைக் கொண்டு ஆலயத்தேர் இழுக்கப்பட்ட சம்பவங்கள் முற்றுமுழுதாக அற்றுப்போகவில்லை என்பதனை வெளிப் படுத்துகிறது. அதேபோல திருமண ஒழுங்கமைப்பின் போது கவனத்திற் கொள்ளப்படுவதும் அவதானிக்கப் படுகின்ற விடயம் ஆகும்.

இரண்டாவது, பிரதேச முரண்பாடு: யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களை தாழ்வு நிலையில் நோக்குவதும் அப்பிரதேசங்கள் மீது ஆதிக்கத்தை செலுத்துவதனையுமே இது குறிக்கின்றது. காலனித்துவ ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட சமமற்ற பிரதேச அமைப்புமுறையே இதற்குக் காரணமாகும். யாழ்ப் பாணத்துக்குக் கிடைத்த வாய்ப்புக்களும் வசதிகளும் யாழ்ப்பாணத்தை முன்நிலையில் கொண்டுவந்திருந்தது. இதன் விளைவே 1960 களில் வன்னியிலும் கிழக்கிலும் யாழ் அகற்றும் சங்கம் உருவாகவும் காரணமாகியது. இந்நிலைமையை மாற்றியமைத்ததில் தந்தை செல்வாவிற் குப் பெரும் பங்குண்டு. அவர் அரசியல் முன்நகர்வின் மூலம் இத்தகைய ஏற்றத்தாழ்வுகளை தமிழரின் தாயக மாக, வடக்கு கிழக்காக வரையறுத்து அதற்கான அதிகா ரத்தை கோருகின்ற சாத்தியமான பாதையினூடாக முன்னெடுத்தார். இவரின் வருகை தமிழ் அரசியலில் பிரதானமான மூன்று மாற்றங்களை நிகழ்த்தியிருந்தன.

1. தமிழின அரசியல், தமிழ்த்தேசிய அரசியலாக வளர்ச்சியடைந்தது.

2. கொழும்பு, யாழ்ப்பாணம் என இருந்த அரசியல் செயற்பாடு வடக்கையும் கிழக்கையும் இணைத்ததாக முன்னெடுக்கப்பட்டது.

3. கோரிக்கை, மனுக்களை அனுப்புவது, பாராளுமன் றத்தில் உரையாற்றுவது எனும் நிலையை மாற்றி மக்களை இணைத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆரம்ப காலங்களில் வன்னி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு ஆகிய தேர்தல்த் தொகுகளில் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்தவர்களே போட்டியிட்டு வந்தனர். ஆனால் தந்தை செல்வா இந் நிலைமையை மாற்றி அப்பிரதே சத்தைச் சேர்ந்தவர்களைத் தேர்தலில் களமிறக்கி யாழ்ப் பாணத்தில் உள்ளவர்களை அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் நிலையினை உருவாக்கியிருந்தார். இது அப்பிரதேசங்களின் சிறந்த தலைவர்கள் உருவாக அடித் தளமாக அமைந்தமை கவனத்திற்குரியது. அதே வேளை கட்சிகளின் முக்கிய பதவிகளில் ஒன்றை கிழக்கிற்கும் கொடுத்திருந்தார். தற்போது பாராளுமன்ற உறுப்பி னராக இருக்கும் சாணக்கியனின் பேரனார் நீண்டகாலம் தமிழரசுக்கட்சியின் தலைவராகப் பதவிவகித்திருந்தார். இது வடக்கிற்கும் கிழக்கிற்கும் நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தியிருந்தது என்பது குறிப்பிடதக்கதாகும். ஆனால் தற்போது அத்தகைய பிணைப்பில் விரிசல்கள் ஏற்பட்டுவருவது கவலை அளிக்கிறது. இத்தகைய விரிசல் நிலைக்கு பின்வரும் காரணங்களை முதன் மையானதாகக் கருதலாம்.

1. அங்குள்ள தமிழ், முஸ்லிம் முரண்பாட்டைப் போதியளவு கவனத்தில் எடுக்கவில்லை.

2.வடக்கின் அதிகாரத்தை கிழக்கில் திணிக்க முற் பட்டமை.

வடக்கும் கிழக்கும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஒத்த தன்மை கொண்டவையல்ல. இதனால் வடக்கிற் கும் கிழக்கிற்கும் என்று தனித்தனியான அணுகு முறை களும் செயற்பாடுகளும் முன்னிறுத்தப்படவேண்டும். கிழக்கை சுதந்திரமாக இயங்க விடுவது இங்கு பிரதான மானது. அது தமிழ்த்தேசிய முன்னெடுப்புக்களை ஆரோக் கியமானதாக அமைக்க உதவும். அரசாங்கம், இந்திய, மேற்குலகச் சக்திகள் கிழக்கை முதன்மைப்படுத்த விரும்பவில்லை. கிழக்கை முதன்மைப்படுத்தினால் வடக்கு கிழக்கை இணைக்க வேண்டிவரும் என்பது அவர்களின் அச்சமாக இருக்கிறது. சர்வதேச இராஜ தந்திரிகள் இலங்கைக்கு வருகின்ற போது வடக்குப் பகுதிக்கே தமது பயணத்தை மேற்கொள்கின்றனர். கிழக்கிற்குச் செல்வதில்லை. தமிழ்த் தலைமைகளும் அவர்களைக் கிழக்குக்குச் செல்வதற்கு வழிபடுத்து வதில்லை. அதே போல தமிழர்களின் பிரச்சினை

தொடர்பாக வெளிநாட்டு இராஜதந்திரப் பயணத்தின் போது கிழக்கின் பிரதிநிதிகளை அழைத்துச்செல்வதும் இல்லை, கிழக்குப் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதும் இல்லை. இந்நிலைமை கிழக்கு அரசியல் பிரதிநிதிகளி டமும் மக்களிடமும் எதிர்ப்புணர்வு ஏற்படக் காரணமா கியது. இந் நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். இதற்கு கிழக்குப் பிரச்சினையை கிழக்குத் தலைவர்களும் வடக்கு பிரச்சினையை வடக்குத் தலைவர்களும் கையா ளக் கூடிய அணுகுமுறையையும் மொத்த தேசியப் பிரச்சினையை இரண்டு தலைமைகளும் இணைந்து மேற்கொள்ளக்கூடிய பொறிமுறைகளையும் உருவாக் குவது தொடர்பில் சிந்திக்கவேண்டும்.

அடுத்த முக்கியமான விடயம் கிழக்கு மக்களுக்கான சர்வதேச அரசியல்ப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண் டும். அதற்கு வடக்கு மக்கள் முதலாவது பாதுகாப்பு மதிலாகவும் உலகத் தமிழர்கள் இரண்டாவது பாது காப்பு மதிலாகவும் உலகத்தினுடைய நுட்ப சக்திகள் மூன்றாவது பாதுகாப்பு மதிலாகவும் அமையவேண்டும். அவ்வாறு செயற்பட்டால் தான் தமிழர்கள் ஒன்றுபடமுடியும். வடக்கு கிழக்கு இணைப்பு இல்லை என்றால் தமிழர் தாயகம் இல்லை. தமிழர் தாயகம் இல்லை என்றால் தமிழ்த் தேசியம் இல்லை. தமிழ்த் தேசியம் இல்லை என்றால் தமிழ் அரசியல் இல்லை என்பதனைக் கவனத்தில் கொண்டு செயற்படவேண் டும். வடக்கு கிழக்கு இடைவெளியை சிங்கள அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைகின்றது. அதே போல் தமிழ், முஸ்லிம் இன முரண்பாடும் தமிழ்த் தேசியத்திற்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் ஒன்றாகும். இருதரப்பினருக் குமான முரண்பாட்டினை சாதாரணமானதாகக் கருதித் தாண்டிச்செல்ல முடியாது அதனைத் தீர்ப்பதற்குரிய தந்திரோபாய செய்திட்டங் களையும் வகுத்துக்கொள்ள வேண்டும்

மூன்றாவது, சைவ மதத் தினுடைய மேலாதிக்க சக்தியாக விளங்குகின்ற மத முரண்பாடு: வெளிப்படையாகச் சொன்னால் சைவ சமயப்பண்புகள்தான் தமிழ்ப்பிரதேசத்தின் பண்பு களாகச் சித்தரிக்கும் போக்கும் காணப்படுகின்றது.

தமிழ்பிரதேசத்தில் பல்கலைக்கழகம் வேண்டும் என 1970 களில் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது அப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் வேண்டும் அதுவும் இந்துப் பல்கலைக்கழகமாகத்தான் வேண்டும். என்று கோரிக்கை வலுவானது. இது தொடர்பில் தமிழரசுக் கட்சியினருக்கும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினருக்கும் இடையில் முரண்பாடு எழுந்தமையும் கவனத்திற்குரி யது. தமிழ்க் காங்கிரஸ் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத் தில் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க தமிழரசுக்கட்சி வடக்கையும் கிழக்கையும் இணைப்பதாக திருகோணமலை அமைவதால் அப்பகுதியிலே பல்கலைக்கழகத்தை உருவாக்கி ஏனைய மாவட்டங்களில் வெவ்வேறு பீடங்களை உருவாக் கலாம் என்ற கருத்தை முன்வைத்துப் போராட்டங்களை நடத்தி வந்தது. இது இரண்டு கட்சிகளிடையும் பாரிய முரண்பாட்டை வலுவாக்கியிருந்தது. இதனை மீறி பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்திலேயே உருவாக்கப் பட்டது. இதன் சின்னமாக சைவசமயத்தின் சின்னமான நந்தியே முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில் தமிழ்த்தேசியம் என்பது மத வரையறைக்குள் குறுகிவி டக் கூடாது. மொழியின் அடிப்படையிலும் இனத்தின் அடிப்படையிலுமே கட்டியெழுப்பப்படவேண்டும். இங்கு மதத்தைப் பிரதானப்படுத்தி முரண்பாடுகளை வளர்த்துக்கொள்வதை தவிர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

நான்காவது, பால் முரண்பாடு: வடக்கு, கிழக்கு முழுவதும் இது பரவிக் காணப்படுகிறது. இந்து மதத்தில் காணப்படும் ஆணாதிக்கக் கருத்துருவாக் கமே இதற்குக் காரணமாக அமைகிறது. இம் முரண் பாட்டினைக் களைவதில் நம் அரசியல் செயற்பாட் டாளர்களும் மக்களும் ஒன்றிணைய வேண்டும். சாதாரணமாகப் பாடசாலைகளில் அரசாங்க உத்தி யோகத்தில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து இருந் தாலும் அரசியலில் பெண்களுக்கான முன்னுரிமை வலுப்படுத்தப்படவில்லை. தமிழ்ப் பாராளுமன்ற உறுப் பினர்களில் பெண்கள் ஒருவரும் அங்கத்துவம் வகிக்கவில்லை என்பது இதனை எடுத்துக்காட்டப் போதுமானதாகும். இந்நிலைமை மாற்றப்பட வேண்டும் என்பதோடு

(18 ஆம் பக்கம் பார்க்க)

திருவள்ளுவரும் அறிவியலும்

இ.சு. முரளிதரன்

ஒருவன் தன்னைக் காப்பாற்ற நினைத்தால் கோபத்திலிருந்து காத்துக் கொள்ளவேண்டும் அவ்வாறு காத்துக்கொள்ளாவிட்டால் அக் கோபமானது அவனை அழித்துவிடும் எனத் திருவள்ளுவர் 305 ஆவது குறட்பாவிலே குறிப்பிடுகின்றார். அமைதியான உள்நோக்குடைய கோபம் ஏற்புடையதே! அத்தகைய கோபமே ஆளுமையாளர் பலர் சமூக நீதியைக் கட்டியெழுப்பப் பின்புலமாக அமைந்தது. பதற்றத்தோடு கூடிய துரித கோபமானது அறிவினையும், உடலையும், நடத்தையினையும் பாதிக்கின்றது. கோபப்படும் போது "அட்ரீனலின்"என்ற ஓமோன் அதிகமாகச் சுரக்கின்றது. இது குருதியோடு கலந்து குருதிக் குழாயினைச் சுருங்கச் செய்து மாரடைப்பினை ஏற்படுத்துகிறது. "இன்டர்லுகின்" என்ற விற்றமின் குறைபாடும் கோபத்தைத் தூண்டுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. எனவே விற்றமின்கள் நிறைந்த காய் கறிகள், பழங்களை அருந்துதல் நன்மை பயக்கும். விளையாட்டு, உடற்பயிற்சி என்பனவும் கோபத்தினைக் கட்டுப்படுத்துகின்றன.

போதைப்பழக்கம் அர்த்தமற்ற கோபத்தினை முகிழ்க்கச் செய்கிறது. 1898 இல் பாகிஸ்தானில் James squid என்ற ஆங்கிலேயக் காவல் அதிகாரி மதுவெறியிலே பயணித்தான். மரமொன்றின் அருகே சென்றவன் வழிவிடுமாறு உத்தரவிட்டான். மரம் தன்னுடைய கட்டளைக்குப் பணியவில்லை எனக் கோபங்கொண்டு அம்மரத்தினைக் கைது செய்தான். அம்மரம் சங்கிலிகள் பலவற்றால் பிணைக்கப்பட்டது. இதில் ஆச்சரியம் யாதெனில், 123 வருடங்களாக கைதியாகவே வாழ்ந்து வருகின்றது. ஆங்கிலேயரின் அர்த்தமற்ற கோபத்தினையும் வன்மத்தினையும் உலகிற்குத் தெரியப் படுத்தும் அடையாளமாக அம்மரத்தினை இன்றும் பாகிஸ்தானில் பேணிவருக்கின்றனர்.

சிந்தனையாற்றலைக் குறைக்கின்ற கோபமானது இழிவுச்செயல்களைச் செய்யத் தூண்டுகிறது. பாம்பினைப் போல வளர்ப்பவனைக் கொல்லும் பண்போடு அமைவதைத் திருவள்ளுவரும் இனங் கண்டுள்ளார்.

"தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்"

தளராமல் முயற்சித்தால் விதியைக் கூட புறங்காட்டி ஓடச்செய்து விடலாம் எனத் திருவள்ளுவர் 620 ஆவது குறட்பாவிலே தெளிவுபடுத்துகின்றார். அமெரிக்காவிலே வாழ்ந்த லோரன்ஸ் கிம்பீக் (Laurence Kim Peek) அவர்களுக்கும் இக் குறட்பா மிகவும் பொருத்தமுடையது. 1951 இல் பிறந்த கிம்பீக் மூளை வளர்ச்சி குன்றியவர் என மருத்துவர்களால் இனங் காணப்பட்டார். ஏனைய குழந்தைகளின் மூளையின் அளவைப்போன்று அவருக்கு அமையாததால், சிறப்புக் காப்பகத்திலே வளர்க்கப்பட வேண்டியவராகக் கணித்தனர். எனினும் பெற்றோர் பிடிவாதமாக வீட்டிலேயே வளர்த்தனர். குழந்தையிடம் இயல்பாக அமைந்துள்ள ஆற்றலை அறிய முயன்றனர். பேசுவதிலும், நடப்பதிலும் சிரமப்பட்ட 'கிம்பீக்' நூல்களை வாசிப்பதில் ஆர்வங்காட்டினார். இதனால் வாசிப்புப் பயிற்சியினை அதிகமாக வழங்கினர்.

கிம்பீக் சராசரிப்பிள்ளைகளின் ஞாபக சக்தியினைக் கடந்த அதீத ஆற்றலோடு திகழ்ந்தார். இடது கண்ணால் ஒரு பக்கத்தினையும் வலது கண்ணால் மற்றொரு பக்கத்தினையும் பத்துவினாடிக்குள்ளேயே வாசித்து முடித்தார். வாழ்நாளின் பெரும்பொழுதினை நூலகத்திலே கழித்தார். பன்னிராண்டாயிரம் நூல்களின் தகவல்களை நினைவிலிருத்திக் கேட்போருக்கு நுண் தவறுகள் கூட இல்லாமல் ஒப்புவித்தார். கணிப்பானைப் போலத் துரிதமாகக் கணக்கிடுகின்ற ஆற்றலினையும் கொண்டிருந்தார். அவரது ஆளுமையைக் கண்டு அனைவரும் வியந்தனர்.



சட்டைப் பொத்தான்களைக் கூடச் சரிவரப் போடத் தெரியாத "கிம்பீக்" தளராத வாசிப்பு முயற்சியால் கவனக்குவிப்புக்குள்ளானார். அவரது வாழ்க்கையை நடுவணாகக் கொண்டு "Rain man" என்ற திரைப்படம் வெளிவந்தது. அத்திரைப்படம் ஒஸ்கார் விருதினைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. முயற்சியானது விதியைக்கூட வென்று எழுச்சியை வழங்கும் என்பதை கிம்பீக் அவர்களின் வாழ்க்கை உறுதிப்படுத்தியுள்ளது.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது ஒற்றுபவர்"

பூமியானது 70% நீரால் சூழப்பட்டுள்ளது. கடல்நீரில் சோடியம் குளோரைற், மக்னீசியம், கல்சியம், பொட்டாசியம் உட்பட பல்வேறு தாது உப்புக்கள் கலந்துள்ளதால் உவர்த் தன்மையோடு அமைகின்றது. காற்றின் வழியாலும் கடலடி எரிமலைகளாலும் கடலடி புவியோட்டுத் தன்மையாலும் உவர்த் தன்மையைக் எய்துகின்றது. மேலும் ஆறுகளானவை பாறை மற்றும் மண் வழியே பாய்ந்து வருவதால் உவர் தன்மையைக் கொண்டு வருகின்றன. நன்னீரில் உப்பின் அளவு மிகச் சொற்பமாக அமைவதால் நம்மால் உணர முடிவதில்லை. சாக்கடல், செங்கடல் போன்றன ஒரு கிலோக்கிராமிற்கு 40% உப்பினையும் ஆர்டிக் மற்றும் அந்தாட்டிக் பிரதேசக் கடல் ஒரு கிலோக்கிராமிற்கு 30% உப்பினையும் கொண்டுள்ளன. உவர்த் தன்மையானது இடத்திற்கு இடம் மாறு பட்டாலும் மொத்தமாக நோக்கும் போது சமனிலையோடு அமைவது ஆச்சரியமானதாகும்.

கடல்வாழ் உயிரினங்களான மெல்லுடலிகள், ஒட்டுடலிகள், பவழபாலிப்புகள் போன்றன உப்பினை உறிஞ்சுகின்றன. எனினும் மழையானது கடல் உப்பின் சமனிலையைப் பேணுவதில் முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளது. காற்றில் கலந்துள்ள மாசு மேகத்திலிருந்து மழையானது தரைமீது பொழி

வதைக் தடுக்கிறது. மாசினைக் சுற்றி உருவாகும் நீர்த்துகள் நுண்ணியளவிலேயே அமையும், எனினும் உப்புக்காற்று நீர்த் துளிகளினை இணைத்துப் பெருந்துளியாக்குவதால் கடலிலே அதிக மழை பொழிகிறது. கடலிலே ஆவியாகும் நீர் தூய்மையாகவே இருக்கும். தரையில் பொழியும் மழை ஆற்றின் வழியாகக் கடலைச் சேருகின்றது. இச் சுழற்சியும் உப்பின் சமனிலையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. மழை மட்டுமில்லையெனில் சமனிலை குழம்பி உயிரினங்கள் அழியும் சூழல் ஏற்பட்டுவிடும்.

"மேகமானது கடலிலிருந்து நீரை முகர்ந்து மீளக் கடலில் மழையாகப் பெய்யாது விடின் கடலானது தனது இயல்பு மாறி வளமின்றிப் போகும்" என 17 ஆவது குறட்பாவிலே திருவள்ளுவர் தெளிவு படுத்துகிறார்.

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்து எழிலி
தான் நல்காது ஆகி விடின்"

நெருங்கி வரும் ஆபத்து

(ஆந்திரோமீடா)

இருண்ட இரவுவானத்தின் முகட்டை நீங்கள் பார்க்கும் போது கண்ணாடியில் விழுந்த தூசி போன்று வெறுங்கண்ணாலேயே பார்க்கக் கூடியது தான் ஆந்திரோமீடா கலக்சி ஆகும். மிகவும் தொலை தூரத்தில் இருப்பினும் நமது பால்வீதிக்கு மிக அருகில் உள்ள கலக்சி இதுவே ஆகும். நமது பால்வீதிக்கும் ஆந்திரோமீடா கலக்சிக்கும் இடையேயான தூரம் 25 இலட்சம் ஒளியாண்டுகள் ஆகும். அதாவது ஒளியின் வேகமான 1 செக்கனுக்கு 3 இலட்சம் கிலோமீற்றர் சென்றால் 25 இலட்சம் வருடங்களின் பின் நீங்கள் ஆந்திரோமீடா கலக்சியை சென்றடைவீர்கள். எமது பால்வீதியை விட இது இரண்டு மடங்கு பெரியதாகும். இவ் ஆந்திரோமீடா கலக்சியை ஆகஸ்ட்மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரை காணமுடியும். கிரேக்க இதிகாசங்களில் பேரதியான ஐரோப்பிய நாட்டின் இளவரசியின் பெயரே ஆந்திரோமீடா ஆகும். அவ் இளவரசியின் பெயரே இக்கலக்சிக்கு பெயராக வைக்கப்பட்டது. மேலும் எமது பால்வீதி ஒரு இலட்சம் ஒளியாண்டுகள் பெரிதாக இருக்கின்றது. அதே போல் ஆந்திரோமீடா கலக்சி 1 இலட்சத்து இருபதாயிரம் ஒளியாண்டுகள் பெரிதாக இருக்கின்றது. எமது பால்வீதியில் 40 ஆயிரம் கோடி நட்சத்திரங்கள் உள்ளன. ஆனால் ஒரு இலட்சம் கோடி நட்சத்திரங்களும் அவற்றைச் சுற்றி பலகோடிக்கணக்கான கிரகங்களும் சுற்றி வருகின்றன. ஆனாலும் ஆந்திரோமீடா கலக்சி நிறையளவில் எமது பால்வீதி கலக்சியை விட குறைவானதே ஆகும். அதற்கு காரணம் எமது பால்வீதி அதிகளவான கரும்பொருளை (Dark Matter) கொண்டிருப்பதே ஆகும். ஆந்திரோமீடாவைப் பற்றி 16ம்நூற்றாண்டே மனிதர்கள் அறிந்து கொண்டுள்ளனர். ஆனாலும் இதை ஒரு கலக்சி எனவும் பால்வீதிக்கு மிக அருகில் உள்ள கலக்சி எனவும் நவீன வெளியாளரான எட்வின் ஹாபிள் அவர்களே கூறினார்.

அத்தோடு அவர் தனது தொலைகாட்டியால் இலட்சக்கணக்கான கலக்சிகள் பேரண்டத்தில் சுற்றி வருவதையும் அவதானித்துக் கூறினார். ஆந்திரோமீடா கலக்சியானது 1000கோடி வருடங்களுக்கு முன் தோன்றிய ஸ்பைரல் வடிவமுடையதாகும். மேலும் இரண்டு கலக்சிகள் ஒன்றிணைந்ததன் மூலம் உருவாகிய பெரியபேரடை (Galaxy) ஆகும். இரண்டு கலக்சிகள் ஒன்றிணையும் போது அவற்றின் மையமான கருப் பகுதிகள் ஒன்றிணைந்து இரட்டைக் கருப்பகுதி காணப்படுகின்றது. இப்பகுதியே ஆந்திரோமீடாவின் மையத்தில் இராட்சத கருந்துளையாக (Super Masive black hole) காணப்படுகின்றது. ஆந்திரோமீடாவின் மையப்பகுதி மிகப் பிரகாசமாக காணப்படுவதற்கு காரணம் அதன் மையப்பகுதியில் பல நட்சத்திரக் கூட்டங்கள் காணப்படுவதே ஆகும். மேலும் ஆந்திரோமீடாவைச் சுற்றி இருபதிற்கும் மேலான கருந்துளைகள் காணப்படுகின்றன. ஆந்திரோமீடாவின் கலக்சி சுற்றும் திசையைவிட அங்கு காணப்படும் உடுக்கள் அதற்கு எதிர்த்திசையில் தாறுமாறாகச் சுற்றுவதையும் இப்போது கண்டறிந்துள்ளமை மேலும் இந்தக் கலக்சியானது மேலும் ஒரு சிறிய கலக்சியுடன் ஒன்றிணைய முயற்சிப்பதாகவும் இதற்கு முன்பும் ஆறு அல்லது ஏழு குட்டிக் கலக்சிகளை இந்த ஆந்திரோமீடா விழுங்கி தன்னுடன் இணைத்துக் கொண்டதாகவும் கருதப்படுகிறது. இப்போது இந்த ஆந்திரோமீடாக் கலக் சிக்கும் எமது மில்க்கி வே கலக்சிக்கும் என்ன தொடர்பு ஏற்படப் போகின்றது? என்பதைப்

பார்ப்போம். ஏறத்தாழ 1 செக்கனுக்கு 140 கிலோமீற்றர் வேகத்தில் நமது பால்வெளியை நோக்கி ஆந்திரோமீடா வந்து கொண்டிருக்கிறது. இன்னும் 400 கோடி வருடங்கள் கழித்து இவ்விரு கலக்சிகளும் ஒன்றோடு ஒன்று மோதப் போகும் பேரபாயம் காத்துக் கொண்டிருக்கிறது. இப்போதெல்லாம் உருவாகும் புதிய பேரடைக்கு மில்க்டிறோமீடா (Milkdromeda) எனப் பெயரிடப்பட் டுள்ளது. இது ஒரு நீள்வட்டக் கலக்சியாக மாறும் ஆனாலும் இம் மோதலின் போது எந்த நட்சத்திரமும் ஒன்றோடு ஒன்று மோதாது ஏனெனில் ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும் மற்றைய நட்சத்திரத்துக்கும் இடைவெளி பல கிலோமீற்றர்களாக இருப்பதே அதற்குக் காரணமாகும். எமது சூரியக் குடும்பம் அப்போது அழியாமல் இருப்பின் இப்போது எமது சூரியக் குடும்பத்துக்கும் பால்வீதி மையத்துக்கு இடைப்பட்ட தூரத்தை விட 3 மடங்கு தூரத்துக்கு தூக்கி வீசப்படுவோம்.

சபா.விஜயகுமார்

அகமது ஃபைசல்

தீப்பு

வாசிக்கத் தொடங்கினேன் எதிரில் வானொலி சத்தம் போட்டபடி இருந்தது. சத்தத்தை நிறுத்தினேன். சுவரில் பதித்திருந்த மின் விளக்குகளின் பொத்தான்களை கீழ் நோக்கி அழுத்தினாள் ஆசிபா. விளக்குகள் எரிந்தன. ஆனால் அது இரவல்ல. வெளிச் சத்தைப் பார்த்து எதையோ கேட்க நினைத்தவள் போன்று நின்றாள். எரியும்போது மின் விளக்குகள் சத்தம் போடுமோ என நினைத்து அதை முந்திக்கொண்டு நான் சத்தமாக வாசித்தேன் எனக்கு அந்தக் குதிரையை பரிசாகத் தந்தவரின் பெயரை. அவரது பெயரில் ஒரு எழுத்து அடி நாக்கில் இருந்து கொண்டு மிருதுவாக வெளியே வந்தது ஒரு மண் புழுவைப்போல. நீர் குடிக்க வந்த மானின் பதட்டமும், பயமும் எனக்கிருந்தது.

"பருந்திற்கும் மேகத்திற்கும் என்ன ரகசியம் வேண்டியிருக்கு" என்று வானத்தில் என்றோ பார்த்த ஒரு காட்சியை நினைத்து என் முன்னே நின்று கோபப்பட்டாள் ஆசிபா. நான் அவர் பெயரை ஒரு தடவைக்கு மேல் வாசிக்காமல் நிறுத்திக்கொண்டேன். ஒரு தடவை வாசித்தாலே புரிந்துவிடும் சில புத்தகங்கள் போல இருந்தது அவரது பெயர். கோபம் தணிய, ஆசிபா வாசலுக்குப் போய்க் கிளிக் கூட்டைத் திறந்தாள். அது அவளுக்கு விருப்பமான கிளிகள். முதுகில் மஞ்சள் நிறக் கோடுகள் போடப்பட்ட கிளியை கையால் பிடித்து அதன் அலகை விரல்களால் பிடித்துத் திறந்தாள். அதன் அலகு மேல் நோக்கியும், கீழ் நோக்கியும் விரிந்தது. அந்தக் கிளிக் கூட்டிற்கு இரு பக்கமும் அழகான சிறிய ஜன்னல்களும் இருந்தன. அந்த ஜன்னல்ப் பக்கமாக நின்று ஒரு கிளி சிறகை விரிக்கும். அப்போது அந்த ஜன்னலுக்கு திரைச் சீலை விரித்தாற் போல்சிறகுகள்சில நேரங்களில்என்னை ஏமாற்றின.

அந்த ஜன்னல்கள் கிளியை விட சற்றுப் பெரிது என்றும் சொல்ல முடியாது, சிறிது என்றும் நம்ப முடியாது. அதற்கு திறப்பு இல்லை. விரலினால் பிடித்து மேல் நோக்கி அந்தச் சிறிய பல கையைத் இழுத்து விட்டால் கிளிகளுக்கு விடுதலை கிடைத்தாற்போல் இருக்கும். ஆனால் அந்தக் கிளிகள் ஜன்னல் வழியாக வெளியே வர முயற்சிப்பதுமில்லை. அது வேண்டி நிற்பது நிரந்தர விடுதலையைத்தான். மாறாக தப்பி ஓடுவதையல்ல என்பதை ஆசிபா எப்போது புரிந்துகொள்வாளோ! அது இரண்டும் இரண்டு நிறத்தில் இருந்ததே ஒழிய சாதி இல்லை.

அன்று அந்தக் கிளிகளை வாங்குவதற்கு சந்தைக்குப் போகும் வழி யில் அவளுக்கு ஏழு வயது என்ற என் நினைப்பு என்னை முந்திரிக் கொட்டைபோல் முந்திக் கொண்டு சந்தைக் குச் சென்றது.

இப்போது அவளின் வயது என்ன?

அவளின் இரு கால்களையும் பெரிய கண்கள் உள்ள சங்கிலியால் சுற்றி ஒரு நடுத்தரமான செம்பு நிறப் பூட்டை போட்டுப் பூட்டிவிட்டார்கள். அந்தப் பூட்டின் திறப்பை என்னிடம் கொடுத்திருந்தார்கள். இப்போது அவளுக்கு வயது எத்தனை என்று நான் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபடுவதில்லை. யாரோ கண்டுபிடித்து பதின்மூன்று என்று சொன்னாற் போல் ஞாபகமிருக்கு.

திறப்பு என் கையில், பூட்டு அவள் காலில். ஆஸ்பத்திரியில் இருந்து அவர்கள் வருகிறார்கள் என்றால் மாத்திரம் பூட்டுவேன். ஆசிபாவின் உடல் நிலையை அவர்கள் சோதித்துவிட்டுச் சென்ற மாத்திரத்தில் திறந்து விடுவேன். அவள் சில நேரம் என் தலை மயிரைப் பிடித்து இழுத்து விளையாடுவாள். நான் மாடு மாதிரிக் கத்திக் கொண்டு நடப்பேன்.

ஆசிபாவுக்கு, அந்தக் குதிரையின் முதுகில் அடர்த்தியும், அடர்த்தி இல்லாமலும் இருக்கும் இள மஞ்சள் உரோமங்களை மிகவும் பிடிக்கும். தொட்டுப் பார்த்த நொடியே "என்ன உரோமங்கள். என்ன மென்மை. மொறு மொறுவென்று காதுக்கு கேட்காமல் கேட்கும் சத்தம் வருதே" என்பாள். அந்தக் குதிரையை பரிசாகத் தந்தவர் அவர்தான். அவரென்றால்? அவள் தந்தை.

அவள் புல்லாங்குழலை உதட்டில் வைத்து மெதுவாக வாசிக்கத் தொடங்கினாள். குதிரை அந்த அறையின் ஜன்னல் வழியாக எப்படி வெளியேறிச் சென்றது என வியக்கும்படி ஜன்னலுக்கு வெளியே புல் மேய்ந்து கொண்டிருந்தது. குதிரையின் வாய் பட்ட புல் நுனியில் இருந்து சின்ன, மென்மையான சிறகுகள் கொண்ட அந்துப் பூச்சிபோல அவை பறந்து பக்கத்தில் உள்ள புல் நுனியில் உட்கார்ந்தன. அந்தக் காட்சியை திறந்து கிடக் கும் ஜன்னல் வழியாகப் பார்த்தால் மனதுக்கு இதமாக இருக்கும். ஆனால் அதைப் பார்க்க அவள் உம்மாஇல்லை. யோகா பயிற்சி வகுப்புக்குச் சென்றுவிட்டாள்.

குதிரை இடமும் வலமுமாக வாலை ஆட்டுகிறது. அவள் குழந்தைப் பருவத்தில் தெத்தி நடந்ததை விடவும் மெதுவாக நடக்கிறது. புல்லாங்குழல் இசை வீடெங்கும், அறை அறையாக நிறைந்திருந்தது.

ஆசிபாவுக்கு பத்து வயது நடக்கும்போது, புல்லாங்குழல் ஊதும் போட்டி ஒன்றில் ஜனாதிபதி கையால் தங்கப்பதக்கம் வென்றாள். அன்றிலிருந்து அவள் வீட்டுக்கு வகை வகையான புல்லாங்குழல்கள் வரத் தொடங்கிற்று. அதன் பிறகு அடிக்கடி வாசல் கதவு திறந்தே கிடந்தது. இதைக் காரணமாக வைத்துக்கொண்டு அவன் அழகிய புல்லாங்குழல் ஒன்றுடன் இரண்டாவது முறையாக வீட்டிற்குள் நுழைந்தான்.

அவசரமாக நுழைந்தான். அவசரமாக நுழைந்ததில்

அவன் பாதணிகள் பிரிவைச் சுமந்துகொண்டு அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடந்தன. இவ்வளவு தூரம் கூடவே வந்த பாதணிகள், அவள் வீட்டுக்குள் போய்ப் பார்க்க ஆசைப்படாதா? அங்கிருக்கும் புதிய பாதணிகளிடம் தன்னையும் அறிமுகம் செய்ய விரும்பாதா? பாதணிகளைப் பற்றி அறியாத மக்கு இவ்வளவு அவசரமாகப் போய் தன்னை அவளிடம் அறிமுகம் செய்ய என்ன வேண்டிக் கிடக்கு.

"ரெக்கார்டர் - விசில் குடும்பத்தின் ஒரு நீளமான புல்லாங்குழல்.

பிக்கோலோ புல்லாங்குழல் - குறுக்கு புல்லாங் குழல். வழக்கத்தை விட இரண்டு மடங்கு குறைவு. இது மிக உயர்ந்த ஒலியைக் கொண்டுள்ளது. டிம்பர் மிகவும் பிரகாசமானது, மற்றும் மியூசிக் டைனமிக் ஃபோர்டே. ஸ்விஜி மூலம் இது மிகவும் துளையிடுகிறது.

நவீன ஓபோ: மியூசெட், கூம்பு பெல் கொண்ட ஓபோ, பாரிடோன் ஹார்ன்,

ஆங்கில ஹார்ன் பரோக் ஓபோ: பரோக் ஓபோ டி "மன்மதன், ஓபோ ஆம் கச்சா அல்லது வேட்டை ஓபோ."

அவனைக் கண்டதும் ஆசிபா படித்துக்கொண்டிருந்த "காற்றின் கருவி" புத்தகத்தை மூடி வைத்துவிட்டு மாடிப்படியை அண்டியுள்ள சுவரில் ஏறு வரிசையாக தொங்கவிடப்பட்டிருந்த வகை வகையான புல்லாங் குழல்களின் பக்கம் விரைந்தாள். அதில், இரு விரல்களையும் வைத்து கண்களால் ஏறி மாடிக்குச் சென்றாள்.

இவன் யார்? வெளிநாட்டுக்காரன் மாதிரி கோட் சூட் போட்டிருக்கிறானே. என்னைத்தான் காண வந்திருந்தான். அவனை அலட்சியமாகப் பார்த்தபடி படிகள் ஏறுவதிலே ஆர்வமாக இருந்தாள். அவன் கையில் இருந்த புல்லாங்குழலோடு ஒரு சிவப்பு ரோஜாவும் கொண்டு வந்திருந்தான். ரோஜாவின் இதழ்கள் புல்லாங்குழலின் துளைகளை உரசிக்கொண்டிருந்தன. அடுத்த விநாடியே வீடெங்கும் ஒரு மெல்லிய குழல் இசை கேட்பதுபோல இருந்தது. அவள் நின்றவாறு அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அப்போதுதான் அவன் அதைச் சொன்னான். "உன் கையில் இருக்கிற மச்சம் அழகா இருக்கு" அது அவளுடைய கை என்பதால் தன் கையைத் திரும்பவும் பார்க்க அவள் விரும்பவில்லை. அவனைப் பார்த்தாள். அவன் திரும்பவும் அவள் கையைப் பார்த்தான்.

அது வலது முன் கை. அதில் இருந்தது திறப்பு வடிவிலான மூன்று இஞ்சி நீளமும், ஒரு இஞ்சி அகலமும் கொண்ட ஒரு மச்சம். மச்சத்தின் குடும்ப நிறம் கறுப்பு என்பதால் இது சற்று வித்தியாசமான இளங்கறுப்பாக இருந்தது. தவிடு படிந்தாற்போல் சாந்தமான மெல்லிய உரோமங்களும் அதில் இருந்தன. இந்த மச்சம் திடீரென உருவானதல்ல. ஒரு யுத்தத்தைப்போல, காலமெடுத்து, நேரமெடுத்து, சந்தர்ப்பமொன்றைக் காத்திருந்துதான் உருவானது.

அந்த சந்தர்ப்பத்தை அவள் அடைந்தபோது அவள் வயது, ஒரு கையில் இருக்கும் விரல்களின் எண்ணிக்கைதான். ஒளித்து விளையாடுவதற்காக அந்த விரல்களின் எண்ணிக்கையொத்த அல்லையகார பிள்ளைகளோடு சேர்ந்துவிட்டாள்.

"காக்கையரே காக்கையரே"

"ஓ"

"எத்தின முட்ட இட்ட"

"மூணு"

"மூணுல ரெண்டக் குடிச்சிட்டு ஒண்ட எடுத்திட்டு ஓடியா" என்றாள் ஒரு பிள்ளை. ஆசிபா அந்த பழங்கால அலுமாரிக் கதவைத் திறந்து உள்ளே ஒழித்துக்கொண்டு கதவை அடைத்துவிட்டாள்.

கன நேரமா. நானும் என்ட தந்திரமெல்லாம் செய்து பார்த்தன். கதவு விடியச் சாமம்தான் திறந்தது.

ஆசிபாவின் உம்மா பொலிசுக்குப் போக வெளிக்கிட்டாள், நான்தான் தடுத்தன். வாப்பாக்காரன் பிரான்ஸில. இதெல்லாம் அவருக்குத் தெரியாது.

வால்ப் பக்கமாக மஞ்சள் பூசியிருந்தது. உடல் கறுப்பு. தலை ஒரு இரத்தத் துளிபோலவும், அலுமாரிக் குள்ளே பலகையில் ஒட்டி இருந்தது அந்தப் புழு. அந்த அலுமாரிக்குள் ளிருந்து ஆசிபா வெளியே வந்தபோது அவள் உடல் கொதியாய்க் கொதித்தது.

அன்று காய்ச்சலோடுதான் ஆசிபாவின் பொழுது விடிந்தது. பயப்பாட்டுக்கு தண்ணி ஓத மைமுனாச்சியை கையோட கூட்டியந்தாள் றிபாயா. அவளுக்கு பிள்ளை என்று ஆசிபா மட்டும்தான். பெரிய சில்வர் வாளி நிறைய தண்ணீர் கொண்டுவந்து மைமுனாச்சிக்கு முன்னால் வைத்துவிட்டு நிமிர்ந்தாள். சுவரோடு முதுகைச் சாய்த்துக்கொண்டிருந்த மைமுனாச்சி தண்ணீரை ஒரு பார்வை பார்த்தாள். தண்ணீரின் இதயம் திக் திக் என்றது. என்னவோ வாளிக்குள் இருந்தபடி தண்ணீர் அசைந்தது. அது குழந்தை உறங்குவதற்காக ஆட்டிவிட்ட தொட்டிலின் கடைசி ஆட்டம் போல இருந்தது.

தண்ணீரை மைமுனாச்சி ஓதிப் பார்க்கும் போது கடவாய் கிழியாதபடி "ஆ" வென்று கொட்டாவி விட்டாள். வெற்றிலை போட்ட வாய்தான். இருந்தும் சுத்தமாக இருப்பது வாளிக்குள் இருந்த தண்ணீரில் தெரிந்தது.

மொத்தம் எத்தனை கொட்டாவிகள் என்று எண்ணிக்கொண்டுவந்தேன் இறுதிக் கொட்டாவி வந்த விதத்தைக் கண்டு மொத்தக் கொட்டாவியும் எத்தனை என்ற கணக்கை மறந்துவிட்டேன்.

அப்போது ஆசிபா என்னைப் பார்த்து மெல்லச் சிரித்தாள். மூன்று முறை உள்ளங்கையில் தண்ணீரை எடுத்து ஆசிபாவின் முகத்தில் விசிறியடித்தாள் மைமுனாச்சி. சற்றுமுன் சிரித்துக்கொண்டிருந்த அந்தப் பிஞ்சு முகத்தைப் பார்த்த எனக்கு கண் கலங்கிற்று.

மிச்சத் தண்ணீரால் ஆசிபாவின் உடல் முழுவதையும் கழுவிவிட்டு உள்ளே துடைக்கத் துண்டெடுக்கப் போனாள் றிபாயா. தனது சேலை மற்றும் உள்ளாடைகளையும் கழுவுவதற்காக எடுத்த வாக்கில் கொஞ்சம் உதறினாள். அதன் உள்ளிருந்து அவளின் நேற்றைய உடல் கீழே விழுந்ததோ என்னவோ அப்படி அவள் குனிந்த குனி நிமிராமல் கீழே பார்த்துக்கொண்டு நின்றாள். அப்போதுதான் அவள் கண்களில் படாமல் ஊர்ந்து அலுமாரியின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்பதுபோல் நின்று மறைந்தது அந்தப் புழு.

சிறு கம்புத்துண்டொன்றால் அதைத் தூக்கி வெளியே எடுக்க வேண்டும் என்று நினைத்தேன். எனக்கென்னமோ இந்தப் புழுதான் அதைச் செய்திருக்க வேண்டும். இந்தப் புழுவைப் பார்த்துதான் ஆசிபா பயந்து கத்தியிருக்க வேண்டும். றிபாயா வெளியே வந்ததும் ஒரு கம்புத் துண்டால் அந்தப் புழுவைத் தொட்டேன் புழு கம்பைக் கட்டி அணைத்துக்கொண்டது. நீண்ட நாள் பாசத்திற்காக ஏங்கியிருக்கும்போல. வெளியில் கொண்டுபோய் மண்ணில் போட்டு உற்றுப் பார்த்தேன். அதன் கண்களில் அந்தக் கனவு தெரிந்தது. இத்தனை நாளாக அலுமாரிக்குள் இருந்துகொண்டு ஒரே கனவைத்தான் கண்டிருக்கிறது. அதன் கனவில் தோன்றியது அந்த பழைய அலுமாரித் திறப்புதான் என்று நினைக்கிறேன். ஏனென்றால் அந்தக் கதவைத் திறப்பதற்கான முயற்சியில் புழு திறப்பைத்தான் முதலில் தேடியிருக்கும். இது காட்டில் வாழும் ஒரு வகைப் புழு. கனவு காண்பது இதற்கு மிகவும் பிடிக்கும் என்று ஒரு புத்தகத்தில் படித்திருக்கிறேன்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

Lockdown காலக் காட்சிகள்

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

அரசாங்கத்தின் அறிவிப்பு ஒன்றாக இருக்க நடைமுறை வேறொன்றாக இருப்பதென்றால்? இதைப்பற்றி யாரிடம் முறையிடுவது? தற்போது மேற்கொள்ளப் பட்டு வரும் Lockdown னினால் தொழில் வாய்ப்பும் உழைப்பும் இல்லாதிருக்கும் வறிய நிலைக் குடும்பங் களுக்கு உதவியாக ஐயாயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்தது. இந்த ஐயாயிரம் ரூபாய் இன்றைய விலைவாசி யில் எத்தனை நாட்க ளுக்குக் காணும்? அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் நாளொன்றுக்குச் செலவழிக்கின்ற செலவையும் மக்களுக்கு வழங்கப்படும் உதவிப் பணத்தின் அளவையும் தெரிந்தவர்களுக்குத் தெரி யும், மக்களை அரசாங்கமும் மக்கள் பிரதிநிதிகளும் எந்தளவுக்கு மதிக்கின்றார்கள் என்று.

சரி, ஏதோ புண்ணியமாக இந்த ஐயாயிரத்தை யாவது கொடுக்கிறார்கள் என்று பார்த்தால், அதிலும் ஏகப்பட்ட குழப்பங்கள். இறுதியில் அந்த ஐயாயிரம் ரூபாய் வழங்கும் நடவடிக்கையும் இந்தப் பத்தி எழுதப்படும்போது நிறுத்தப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது. இந்த அறிவிப்பின்படி முதற் தொகுதி ஆட்களில் சிலருக்கு ஐயாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. அப்படி வழங்கிய சிலருடைய பணம் அடுத்த நாளே திரும்பப் பெறப்பட்டும் இருக் கிறது. இது ஏனென்று கேட்டால் அவர்களுக்கு முதி யோர் உதவிப்பணம் கிடைக்கும். அல்லது, சமூக சேவைகள் உதவிப்பணம் கிடைக்கும். எனவேதான் இந்தப் பணத்தைத் திரும்பப் பெற்றிருக்கிறார்கள் என்கிறார் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர்.

ஆனால் இதிலுள்ள நடைமுறைப்பிரச்சினைகளை அதிகாரிகளோ திட்ட வகுப்பாளர்களோ கணக்கிற் கொள்ளவில்லை. உதாரணமாக, சமுர்த்தி உதவி மூலமாகக் கிடைத்த ஐயாயிரம் ரூபாவைக் கொண்டு போய் அவர்கள் பொருட்களை வாங்கி விட்டனர். அப்படிப் பொருட்களை வாங்கியோரிடம் போய் தந்த காசைத்திருப்பித் தாருங்கள் என்று கேட்டால் அவர்கள் அதற்கு என்ன செய்வார்கள்? எங்கே போவார்கள்? பொதுவாகவே சமுர்த்தி உதவியைப் பெறுவோர் மிக வறிய நிலையில் உள்ளவர்கள். அவர்களுடைய கையில் பணம் கிடைத்தால் உடனே அதைக் கொண்டு போய் தமக்குத் தேவையான வற்றை வாங்குவர். அதற்குப் பிறகு அந்தக் காசைத் தாருங்கள் என்று கேட்டால், அந்தப் பொருட்களைத் திரும்பக் கொண்டு போய் கடையில் கொடுத்தே மீளப் பணத்தை வாங்கிக் கொடுக்க முடியும். இதற்கு

கடைகள் சீராக இயங்க வேண்டும். அந்த நிலை இல்லை. அதை விடக் கடைக்காரர் ஒத்துழைக்க வேண்டும். எல்லாவற்றையும் விட வாங்கிய பொருட்களை மக்கள் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும்.

இப்படிச் சிக்கலான ஒரு நிலையில் காசைத்திருப் பிக் கொடுக்க முடியாமல் சனங்கள் படுகின்ற சிரமம் கொஞ்சமல்ல. சனங்கள் மட்டுமல்ல அடி நிலை உத்தியோகத்தர்களுக்கும் இது பெரும் சிரமமே. நடவடிக்கைத் தவறுகளால் இந்த உத்தியோத்தர்க ளும் சனங்களும் மோதிக் கொண்டிருக்கிறார்கள். கசப்பு வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த அலைச் சல், அவலம் இந்தக் கொரோனா அபாயத்திற்குள் ளால் நடப்பது என்பது எவ்வளவு தவறானது? இதற்கான பொறுப்பை யார் ஏற்பது?

இது ஒரு புறம் என்றால் இப்பொழுது பணத்தை வழங்கும் நடவடிக்கையே இடை நிறுத்தப்பட்டுள் ளது. இனி மறுபடியும் கொடுப்பனவுக்கான உத்தரவு எப்போது எந்த வடிவத்தில் வரும் என்று யாருக்குமே தெரியாது. கேட்டால் மீதிப்பணம் இன்னும் வந்து சேரவில்லை என்று சொல்கிறார்கள். அது எப்போது வரும் என்றால் உதட்டைப் பிதுக்கிக் கைகளை விரித்து கண்ணால் மேலே காட்டுகிறார்கள்.

எல்லாம் அவன் செயல்!

இதைப்பற்றியெல்லாம் அரச தரப்பு எம்பிமார்க ளும், அமைச்சர்களும் வாய் திறக்க மாட்டார்கள். எதிர்த்தரப்பு - தமிழ்த்தேசிய நிலை அரசியல்வாதிக ளும் பேசமாட்டார்கள். அடி நிலை மக்களைப் பற்றி யாருக்குத்தான் கவலை? அவர்கள் எல்லாவற்றையும் உத்தரிக்கப் பிறந்தவர்களல்லவா!

உண்மையில் இப்போதைய Lockdown தொன் நெருக்கடியானது அதிக தொற்றாளர்கள் அதிக தொற்றுப் பிரதேசங்கள், அதிக உயிரிழப்புகள்,

இப்படியெல்லாம் இருந்தால் மருத்துவ மனைகள் தொடக்கம் வெளிச் சூழல் வரையில் எங்கும் ஏகப்பட்ட சிக்கல்கள், பிரச்சினைகள் இருக்கும் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டியது.

இந்த இரண்டாவது Lockdown இல் உதவிகள் கிடைத்திருப்பதும் குறைவு. இப்பொழுதுதான் நிலைமையின் தீவிரம் உணரப்பட்டு புலம்பெயர் சமூகத்தினரும் உதவ முன்வந்திருக்கின்றனர். அவர்களுக்கு இது வரையறைக்குட்பட்டதாகவே இருக்கும். ஏனென்றால் அவர்களும் இடர் காலத் திற்குள்ளே சிக்கியிருக்கிறார்கள்.

ஆகவே வறிய நிலையில் உள்ளோரின் நிலை மிகக் கஸ்ரமானது. அவர்கள் நாளொன்றை எப்படிப் போக்குவது என்றே தெரியாத நிலையில் தவிக்கின்றனர். விலை வாசி வேறு உயர்ந்துள்ளது. இந்த Lockdown மேலும் நீடிக்கப்படலாம் என்றும் சொல்லப்படுகிறது. இதை விட இதை ஊரடங்கு உத்தரவாக மாற்றக் கூடிய நிலை உண்டென்றும் கூறுகிறார்கள். அப்படியென்றால் பொருட்களுக்கான தட்டுப்பாடு அதிகரிக்கும். விலையும் மேலும் கூடும். அப்படியென்றால் நிலைமை எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்.

இதற்குள் விவசாயிகளும் மீனவர்களும் தங்கள் உற்பத்திகளைச் செய்யலாம் என்று அனுமதிக்கப் பட்டிருக்கிறது. உணவு என்ற அத்தியாவசியத் தேவைக்காக அனுமதிக்கப்படுவது சரி. தவிர்க்க முடியாததே. ஆனால் இதைப்போல சலூன் தொழிலாளர்கள், ஆடை அலங்கரிப்பாளர்கள், பனை, தென்னைத் தொழிலாளர்கள், மேசன் மற்றும் கூலிகள், கடைச்சிப்பந்திகள் என சமூக மட்டத்தி லுள்ள ஏராளம்பேரின் வாழ்க்கை? இவர்களுக்குத் தான் சமுர்த்தி உதவி ஐந்து ஆயிரம் வழங்கப்படுகி றது என்று நீங்கள் சொல்லக் கூடும். அதைத்தான் முன்பே சொல்லியிருக்கிறோமே, அது எப்படியாக இருக்கிறது என்று. தவிர, எல்லோருக்கும் சமுர்த்தி உதவியும் இல்லை. அதுவும் சுயதொழில் உள்ளவர்க ளுக்கு. அப்படியென்றால் இந்த மாதிரிச் சனங்களின் நிலை?

இதேவேளை முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் வழங்கப்படும் என்று பிரதிக் குழுக்களின் தலைவர் அங்கஜன் இராமநாதன் பெருமிதம் தெரிவித்துள்ளார். இரண் டாயிரத்து ஐநூறு ரூபாயின் இன்றைய பெறுமதி என்ன? இது ஒரு கொடுப்பனவா? நாளொன்றுக்கு அங்கஜன் இராமநாதனின் குடும்பத்துக்கு தனிப்பட எவ்வளவு பணம் வேண்டும்? அவருடைய பணிக ளுக்கோ பணித் தொகுதியினருக்கோ அல்ல.

ஆக உங்களுக்கு ஒரு மாதிரியும் மற்றவர்களுக்கு இன்னொரு மாதிரியும் என்றா உங்கள் சிந்தனை உள்ளது?

இப்படிச் சிந்தித்துத்தான் இந்த நாடு இப்படி உருப்பட முடியாமல் சீரழிந்து கிடக்கிறது. உரி மைகள், தேவைகள், தகுதிகள், உணர் நிலைகள், பசி, வாழ்க்கைப் பிரச்சினைகள், வாழ்க்கைத் தேவைகள்

> **வறிய நிலையில் உள்ளோரின் நிலை மிகக் கஸ்ரமானது. அவர்கள் நாளொன்றை எப்படிப் போக்குவது என்றே தெரியாத நிலையில் தவிக்கின்றனர். விலை வாசி வேறு உயர்ந்துள்ளது. இந்த Lockdown மேலும் நீடிக்கப்படலாம் என்றும் சொல்லப்படுகிறது. இதை விட இதை ஊரடங்கு உத்தரவாக மாற்றக் கூடிய நிலை உண்டென்றும் கூறுகிறார்கள். அப்படியென்றால் பொருட்களுக்கான தட்டுப்பாடு அதிகரிக்கும். விலையும் மேலும் கூடும். அப்படியென்றால் நிலைமை எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்.**

எல்லாம் எல்லோருக்கும் பொதுவானவை. யாருக் கும் சிறப்புத் தகுதி என்றிருக்கத் தேவையில்லை. பிறக்கும் போது எல்லாக்குழந்தைகளும் நிர்வாண மாகவே பிறக்கின்றன. அப்படியென்றால் இயற் கையின் நியதி அனைவருக்குமான ஒரு பொதுமைப் படுத்தலை - அதை மேம்படுத்தும் ஜன நாயகச் சூழலை ஒரே மாதிரியே வைத்திருக்கின்றன.

ஆகவே எதையும் நிதானமாகச் சிந்தித்து முடிவெ டுங்கள். குறிப்பாகச் சாமானிய மக்களின் நிலை நின்று. அவர்கள்தான் நாட்டின் அத்தியாவசிய உழைப்பாளிகள். அவர்களே குரலற்றவர்கள். அவர் கள் தான் நம்மையெல்லாம் உயிரோடு வைத்திருக் கிறார்கள். உணவாகவும் பாதுகாப்பாகவும் வாழ்க்கை வசதிகளாகவும் நம்முடைய கனவுகளுக் கெல்லாம் வளம் சேர்ப்பதாகவும்.

என்பதால் அவர்களை விட்டு யாரும் சிந்திக்க முடியாது. கொவிட் 19 க்கான தடுப்பு ஊசியிற் கூட மக்கள் கவனியாப் பொருளாகவே இருப்பது போலப் படுகிறது. ஏதோ வரும்போது போட்டுக் கொள்ள லாம் என்ற மாதிரி. இல்லை. எங்கள் மக்களை எப்ப டியும் காப்பாற்ற வேண்டும் என்ற முனைப்பை - அதற்கான அர்ப்பணிப்பைக் காண முடியவில் லையே.

■

கபிலன்

“இழப்புக்களுக்கும் அர்ப்பணிப்புக்களுக்கு நிரந்தரமான தீர்வினையே இன்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். மாறிவரும் உலக ஒழுங்கிற்கு ஏற்ப இன்றைய அரசியல் தலைமைகள் செயற்படுவதாக கூறிக்கொள்வது வெறும் கண்துடைப்பு நாடகம் என்பது மக்களுக்கு நன்கு தெரிந்திருக்கிறது. அறம் சார்ந்த அரசியலில் இருந்து விலகி நலம் சார்ந்த அரசியலை தமிழர்தரப்பு கைக்கொள்ள வேண்டும் என்பது நியதியாக இருந்தாலும் அதற்காக எமது அடையாளங்களையும் இருப்புக்களையும் சுயநிர்ணயத்தினையும் விட்டுக்கொடுத்து நலம் சார்ந்த அரசியலைக் கைப்பிடிக்க வேண்டிய அவலநிலையினை இன்றைய அரசியல் கட்சிகள் ஏற்படுத்துகின்றன.”

தமிழ்த்தேசியமும் தமிழர் தேசியமும்

உலகில் வாழுகின்ற மனித இனங்கள் தமக்கென்று தனித்துவமான அடையாளங்களையும் ஆழமான இருப்புகளையும் கொண்டமைந்துள்ளன. பலத்தின் வழியேயான மனித நாகரீக அரசியல் வளர்ச்சியில் தோற்றம் பெற்ற அரசுகளைத் தொடர்ந்து ஆழும் இனம், ஆழப்படும் இனம், விடுதலைபெற்ற இனம், விடுதலையை அவாவி நிற்கும் இனம் என்ற பாகுபாடுகள் தோற்றம் பெற்றன. இவற்றில் விடுதலையை அவாவி நிற்கும் ஒரு இனம் தனக்கான அரசியலையும் இருப்பையும் அடையாளங்களையும் முன்நிறுத்தி வகுத்துக்கொள்ளும் கொள்கையினை அந்த இனத்தின் தேசிய கொள்கை என அடையாளப்படுத்த முடியும்.

இலங்கைத்தீவில் தமிழர், சிங்களவர் என்ற இரண்டு மொழி பேசுபவர்கள் வாழ்ந்தபோதும் பெரும்பான்மையினமான சிங்களவர்கள்தான் ஆழும் இனமாக இருக்கிறார்கள். இந்த அழுகையின் பிணக்குகளின் வாயிலாக ஏற்பட்ட பிளவினால் உருவாக்கம் பெற்ற ஆயுதப் போராட்டங்களால் உருவானதே தமிழ் தேசியம் என்ற கொள்கை இருப்பாகும்.

தமிழ்த்தேசியம் என்பது தமிழர்களுடைய தேசியம் பற்றிய உணர்வு. இது தமிழரசுக்கட்சியினதோ அல்லது வேறு கட்சியினதோ கொள்கை விளக்கம் அல்ல. அது தமிழர்களுடைய கொள்கைப் பிரகடனம். முதலாளித்துவத்திற்கு எதிராக உலகில் தோன்றிய புதிய சிந்தனைவடிவமான இடதுசாரிச் சிந்தனை வடிவம் போன்று ஈழத்தமிழர்களது சிந்தனையில் உருவான வடிவமே தமிழ்த்தேசியமாகும்.

தமிழ்த்தேசியம் என்பது தமிழர்களுடைய இருப்பையும் அடையாளங்களையும் முன்னிறுத்திய வடிவமாகும். தமிழர்களுடைய பூர்வீக நிலம், இருப்பு அவர்களுடைய கலை, கலாசாரம், மொழி, பண்பாட்டு அம்சங்களை உள்ளடக்கியதான சுதந்திரமான சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஒரு தன்னாட்சிக்கான சிந்தனை வடிவமாகும். ஒருவன் கனவு காணுவது அவனுடைய சுதந்திரம் என்பது போலவே தமிழர்கள் தமது தன்னாட்சிக்கான, தமது இருப்பிற்கான ஒரு அடையாளவடிவமே தமிழ்த்தேசியம் ஆகும்.

இத்தகைய உயரிய நிலையில் வைத்து முன்னெடுக்கப்பட வேண்டிய இந்த சிந்தனைவடிவத்தை தமிழ்த்தரப்பில் உள்ள அனைத்துக் கட்சிகளும் வீதியில் போட்டு கற்பழிக்கின்ற ஒரு அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. வெற்று உணர்ச்சிவசமான அரசியல் கோசங்களுக்கு பயன்படுத்தப்படும் ஒரு அடையாளக்குறி வடிவமாகவே இன்று தமிழ்த் தேசியத்தினை அனைவரும் நோக்குவது கவலைக்குரிய விடயமாகும்.

திறந்தவெளி அரசியல் உரையாடல்களுக்கான களம் எதுவும் இல்லாது அவரவர் போக்கிற்கு தமது சுயசித் தாந்தங்களையும் கட்சிசார் கொள்கைப் பிரகடனங் களையும் மட்டுமே அரசியல் இலக்குகளாக கொண்டி ருக்கின்ற ஆரோக்கியமில்லாத அரசியல் கட்சிகளி னையே இன்றைய தமிழ்ச் சமூகம் பெற்றிருப்பது வேதனைக்குரியது. தேசியம் பற்றியும் தேசிய உணர்வு பற்றியும் அவரவர்க்குரிய மொழிகளில் மட்டுமே உரையாடி விவாதப்படுவதை விடுத்து தமிழ்த்தேசியத் திற்கான பொதுத்தளத்தில் வந்து அனைத்துக்கட்சிகளும் உரையாடலை ஆரம்பிக்கும் போதுதான் தமிழ்த்தேசியம் வீரியம் பெறும். அதற்கான அவசரமான காலச்சூழ்நிலையும் இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

இன்று தமிழர்தரப்பில் இரண்டுவகையான அரசியல் நகர்வுகள் நகர்ந்துகொண்டிருக்கின்றன.

1. பொதுமக்களை தமிழர் அடையாளம் என்ற உணர்ச்சியில் வைத்து அரசியல் செய்வது

2. தமிழர்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் என்ற கவர்ச்சியில் வைத்து அரசியல் செய்வது.

இந்த இரண்டு நிலைகளிலும் இருந்து தமிழ்க் கட்சிகள் விலகி மக்களின் நிரந்தரத்தேவைகளுக்

கான பொதுப்புத்தியினை அடையாளம்காணத் தவறிவிட்டன. முப்பது வருடகால யுத்தத்திற்கு பின்னர் மீண்டும் முப்பது வருடங்களுக்கு முற்பட்ட கொள்கை, கோட்பாடுகளில் ஊறிக்கிடப்பதை தமிழ்க் கட்சிகள் கைவிடவேண்டும்.

இழப்புக்களுக்கும் அர்ப்பணிப்புக்களுக்கும் அவசியமான, நிரந்தரமான தீர்வினையே இன்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். மாறிவரும் உலக ஒழுங்கிற்கு ஏற்ப இன்றைய அரசியல் தலைமைகள் செயற்படுவதாக கூறிக்கொள்வது வெறும் கண்துடைப்பு நாடகம் என்பது மக்களுக்கு நன்கு தெரிந்திருக்கிறது. அறம் சார்ந்த அரசியலில் இருந்து விலகி நலம் சார்ந்த அரசியலை தமிழர்தரப்பு கைக்கொள்ள வேண்டும் என்பது நியதியாக இருந்தாலும் அதற்காக எமது அடையாளங்களையும் இருப்புகளையும் சுயநிர்ணயத்தினையும் விட்டுக்கொடுத்து நலம்சார்ந்த அரசியலைக் கைப்பிடிக்கவேண்டிய அவலநிலையினை இன்றைய அரசியல் கட்சிகள் ஏற்படுத்துகின்றன.

இனியும் மக்களை ஏமாற்றமுடியாது என்ற தெளிவினை அரசியல் கட்சிகள் பெறவேண்டும். மக்கள் எந்த நேரத்தில் யாரை ஆதரிக்கவேண்டும் என்பதில் மிகத் தெளிவாக இருக்கிறார்கள். மக்களுடைய வாக்குவங்கிகள் இன்று புதிய சிந்தனை ஓட்டங்களால் நிரம்பி இருக்கிறது. ஒரு தேர்தலில் அறுதிப்பெரும்பான்மையாக வென்ற கட்சி அடுத்த தேர்தலிலும் வெல்லும் என்ற நினைப்பில் இருப்பது தவறு. மக்களுக்கான அரசியலை யுத்தத்திற்கு பின்னர் மக்களே தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அந்த அரசியல் வட்டத்திற்குள் வருகின்ற எவரையும் ஆதரிப்பதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள்.

எனவே, தமிழ்தேசியத்தின் நிலைபெறு காலம் என்பது தமிழ் இனம் தனது இலக்கினை அடையும் வரை தொடரும். அதனை எவரும் தமது கொள்கை என்று உரிமை கொண்டாட முடியாது என்பதை இனிவரு கின்ற தேர்தல்களில் கண்டு கொள்ளலாம். ■

மு.தமிழ்ச்செல்வன்

காணாமல் போகும் வன்னிக் காடுகளும், கண்டு கொள்ளாத திணைக்களங்களும்

ஜூன் 5 உலக சுற்றுச் சூழல் தினம், ஒவ்வொரு வருடமும் வந்து செல்கின்ற ஒரு நாளாகவே நாம் இதனைக் கடந்து செல்கின்றோம். மிஞ்சிப் போனால் சமூக வலைத்தளங்களில் ஒரு பதிவை இட்டுவிட்டு கடந்து விடுகின்றோம் அவ்வளவு தான். வேலியே பயிரை மேய்வ தால் வன்னியின் சுற்றுச் சூழல் காணப்படுகின்ற நிலையில் நாம் இதனைத் தவிர என்ன செய்துவிட முடியும்? என்பதுவே பலரின் கேள்வி. அதிலும் உண்மையிருக்கிறது. அதிகாரமற்ற ஒரு தரப்பு நடக்கின்ற அநியாயங்கள் தொடர்பில் கவலைகொள்வ தனைத் தவிர வேறு என்னதான் செய்துவிட முடியும்? கண்முன்னே வன்னிக் காடுகள் நாளாந்தம் கொஞ்சம் கொஞ்சமாகக் காணாமல் போய்க் கொண்டிருக்கிறது. தடுக்க முடியவில்லை என்ற ஆதங்கம் பலரை வருத்திக் கொண்டு மிருக்கிறது.

நிலையான அபிவிருத்திக்கு கிரவல், மணல் அவசியம்தான், ஆனால் அவை இயற்கையிலி ருந்து பெறுகின்ற போது பின் பற்ற வேண்டிய நடைமுறை கள், சட்டதிட்டங்கள் தொடர் பில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்பதே பலரின் வேண்டுகோள். வளங்களை மனித இனத்தின் பயன்பாட்டிற்கு பெறுகின்ற போது மிகமிக நேர்த் தியான சிறந்த திட்டமிடல் மூலம் பெறுவது கட்டாயமாகும் இல்லை யெனில் அதன் பாதிப்புகள் மீண்டும் மனித குலத்தைத் திருப்பித் தாக்கும். இந்தத் தாக்கம் மனிதன் இயற்கைச் சூழலில் இருந்து தான் பெற்ற வளத்தைக் கொண்டு அடைந்த பயனைவிட பாதிப்பு பலமடங்காக காணப்படும். இதனை நாம் இன்று எம் கண் முன்னே கண்டு வருகின் றோம். இற்றைக்கு இருபது ஆண்டு களுக்கு முன் வன்னியில் நிலவிய கால நிலைக்கும் தற்போது நிலவுகின்ற காலநிலைக்கும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

ஒவ்வொரு வருடமும் சீராகக் கிடைக்கப் பெறுகின்ற மாரிமழை இப்போது இல்லை, அதிகவெப்பம் நிலவுகிறது. 15 தொடக்கம் 20 அடிவரைக்குள் காணப்பட்ட நிலத் தடிநீர் தற்போது முப்பது நாற்பது அடிக்குமேல் காணப்படுகிறது. பயிர்ச் செய்கைகளில் போதுமான விளைச்சல் இல்லை சூழலில் காணப் பட்ட பல்லின உயிரினங்களைக் காணமுடியவில்லை. மனிதனுக்கு ஏற்பட்டுள்ள நோய்த்தாக்கம் என சூழலை மனிதன் திட்டமிடாமல் பயன்படுத்தியதன் விளைவால் ஏற்பட்ட பாதிப்புக்களைக் கூறிக் கொண்டே போகலாம். மனிதனால் இயற்கையின் சமநிலையில் ஏற்பட்ட பாரிய குழப்பமே இந்த நிலைமைக் குக் காரணம். இதன் காரணமாக தற்போது அபிவிருத்தி பற்றிப் பேசப் படுகின்ற போது அதில் சுற்றுச் சூழல் முக்கிய இடத்தை பிடிக்கிறது. அபி விருத்திக்கும் சுற்றுச் சூழலுக்கும் இடையிலான சிக்கலான தன்மை பற்றி அதிகம் கவனம் செலுத்தப்படுகிறது. இருப்பினும் அரசியல் பொருளாதார சமூகக்காரணிகளால் அதன் அழுத்தங்களால் அபிவிருத்தி மேலோங்கி நிற்க சுற்றுச் சூழல்க் காரணிகள் பின்தள்ளப்படுகிறது. இந்த சந்தர்ப்பங்களில் மனிதனால் மனிதனுக்கு குழி தோண்டப்படுகிறது. இதுவே தற்போது வன்னியெங்கும் இடம்பெற்று வருகிறது.

> **அபிவிருத்திக்காக இயற்கை வளங்களைப் பெறுகின்றபோது அங்கே முறையான திட்டமிடல் மேற்கொள்ளப் படவில்லை என்ற குற்றச் சாட்டுத் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகி றது. சூழலியலாளர்கள் தொடர்ந்தும் இதற்காகக் குரல் கொடுத்து வரு கின்றார்கள் ஆனால் சட் டத்தைப் பாதுகாக்க வேண்டியவர்களும் பொறுப்பு வாய்ந்த அதி காரிகளும் திணைக் களங்களும் அதனை கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. குறிப் பாக வீதி மற்றும் ஏனைய அபிவிருத்திப் பணிகளுக்காகக் கிரவல் அகழப்படுகின்ற போது ஆயிரக்கணக்கான ஏக்கர் காடுகள் அழிக் கப்படுகின்றன.**

அபிவிருத்திக்காக இயற்கை வளங் களைப் பெறுகின்றபோது அங்கே முறை யான திட்டமிடல் மேற்கொள்ளப்பட வில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ச் சியாக முன்வைக்கப்பட்டு வருகிறது. சூழலியலாளர்கள் தொடர்ந்தும் இதற்காகக் குரல் கொடுத்து வருகின்றார்கள் ஆனால் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டியவர் களும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் திணைக்களங்களும் அதனைக் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. குறிப்பாக வீதி மற்றும் ஏனைய அபிவிருத்திப் பணி களுக்காகக் கிரவல் அகழப்படுகின்ற போது ஆயிரக்கணக்கான ஏக்கர்க் காடுகள் அழிக்கப்படுகின்றன. ஒன்றைப் பெறுகின்ற போது இன்னொன்றை இழப்பது தவிர்க்க முடியாது என்றாலும் திட்டமிடலும் மாற்று திட்டங்களும் அவசியமானதாக வலுயுறுத்தப்படுவது இங்கே கவனத்தில் எடுக்கப்படுவில்லை.

பல ஒப்பந்தகாரர்கள் கிரவல் அகழ் வின் போது இயற்கை பற்றிச் சிறிதளவும் சிந்திப்பதாகத் தெரியவில்லை, அவர் களின் முழு நோக்கமும் கிரவல் அகழ்வு மாத்திரமே. கிரவல் அகழ்வுக்கு அனுமதி பெறுகின்ற போது விதிக்கப்படுகின்ற விதி முறைகள், நடைமுறைகளை அவர் கள் பின்பற்றுவதில்லை உதாரணமாக நிலத்திலிருந்து ஐந்து அடி வரைக்கும் கிரவல் அகழவேண்டும் என நிபந்த னையிருந்தால் அகழப்படுகின்ற இடங்களில் பத்து அடிக்கு மேல் அகழப் பட்டு வருகின்றமை, பெறுமதிக்க மரங்கள் வீழ்த்தப்படுகின்றமை, வரைய றுக்கப்பட்ட அளவை விட அதிகம் அகழப்படுகின்றமை போன்ற விதிமுறை கள் தொடர்ச்சியாக மீறப்பட்டு வருகின் றமையே காடுகள் அழிந்து போகின்ற மைக்குக் காரணமாக அமைந்துள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை வன்னிக்காடுகள் இலங்கையின் வனவளத்தில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது. இந்தக் காடுகளில் பல வருடங்கள் பழைமை வாய்ந்த பெறுமதியான மரங்கள் காணப் படுகின்றன. முதிரை, பாலை, கருங்காலி, போன்ற பெறுமதிமிக்க மரங்கள் வன்னிக் காடுகளின் சிறப்பம்சம். ஆனால் தற்போது இந்த மரங்கள் பெருமளவு அழிக்கப்பட்டு வருகிறது. கிரவல் அகழ்வு மேற்கொள்பவர்களால் ஒருபுறமும் திட்டமிட்டு சட்டவிரோதமாக மரங்கள் கடத்துபவர்களினால் மறுபுறமும் என அதிகளவில் மரங்கள் வெட்டப்படு கின்றன. ஏற்கனவே யுத்தப் பாதிப்புக்களால் அழிக் கப்பட்ட வன்னியின் காடுகள் தற்போது சட்டவிரோத செயற்பாடுகளாலும் அழிக்கப்பட்டு வருகிறன. இந்த நிலைமை சூழலியலாளர்கள் மத்தியில் பெரும் கவலை யினையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

குறிப்பாக கிரவல் அகழப்படுகின்ற பிரதேசங்களில் காணப்படுகின்ற காட்டு மரங்களைச் சுற்றி கிரவலை அகழ்ந்த பின் அந்த மரங்கள் இன்றோ நாளையோ விழுந்துவிடும் அபாய நிலையில் காணப்படுகிறன. இவ்வாறு ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் கிரவல் அகழப்படுகின்ற போது அந்தப் பிரதேசத்தில் உள்ள அனைத்துப் பெறுமதி வாய்ந்த மரங்களும் அழிக் கப்படுகிறன. சொல்லப் போனால் அந்தப் பிரதேசம் பாலைவனம் போன்று மாறிவருகிறது. எனவேதான் இதற்கான மாற்றுத் திட்டங்களை சூழலியலாளர்கள் வலியுறுத்தி வருகின்றார்கள்.

முக்கியமாக முறுகண்டி தொடக்கம் கொக்காவில் வரை ஏ9 வீதியின் மேற்குப் பக்கம் வீதியில் இருந்து நோக்கினால் அடர்ந்த காடுகள் இருப்பது போலவே காணப்படும் ஆனால் சற்று சில மீற்றர்கள் இறங்கிச் சென்றால் உள்ளே பாரியளவில் கிடங்குகளையும் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் மரங்களையும் காணமுடியும். 2009 க்கு முன்னரும் மீள்குடியேற்றத்தின் ஆரம்பத்திலும் கிரவல் அகழப்பட்ட பிரதேசங்களில் மீள் வனமாக்கல் திட்டத்தின் மூலம் மரங்கள் நாட்டப் பட்டது போன்று தற்போது கிரவல் அகழப்படுகின்ற, அகழப்பட்ட பிரதேசங்களிலும் மீள் வனமாக்கல்த் திட்டத்தை கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஒரு அபிவிருத்தித் திட்டம் வரையப்படும் போதே அந்தத் திட்டத்தில் மீளவனமாக்கல் செயற்றிட்டத்திற்கும் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளும் வகையில் அபிவிருத்தியின் திட்டமிடல்களை மேற்கொள்ளவேண்டும். அதனை அரசு சட்டமூலம் உறுதிப்படுத்தவேண்டும். அத்தோடு சட்டவிரோத மரம் கடத்தற் காரர்களுக்குக் கடுமையான தண்டனைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லை எனில் இலங்கையின் முக்கியத்துவம் வாய்ந்த வன்னிக் காடுகளும் காணாமல் போய்விடும்.

■

எழுத்தின் இயங்கியல்

உடலை அடையாளப்படுத்தல்

● ந.மயூரரூபன்

எமது புரிதல் எப்போதும் இரட்டை அளவீடுகளால் அனைத்தையும் விளங்கிக்கொள்ளும் வகையில் தன்னை தகவமைத்துக் கொண்டுள்ளது. இதனை நாம் அனைத்து விடயங்களில் இருந்தும் பார்க்க முடியும். நன்மை - தீமை, இரவு - பகல், கதாநாயகன் - வில்லன், இறைவன் - சாத்தான், ஆரிய - திராவிட, வைதிக - அவைதிக, தூய்மை - தூய்மையின்மை, என எல்லாவற்றையும் இங்கு உதாரணங்களாகப் பொருத்திப் பார்த்துக்கொள்ள முடியும். இத்தகைய பார்வைக்கு அடிப்படையாக அமைகின்ற இன்னொரு இரட்டை எதிரிடைத்தன்மை ஒன்று உண்டு. அது, ஆண் - பெண் என்பதே. இதனை நாம் 'உடல்' என்கிற அமைப்பிலிருந்து விளங்கிக் கொள்ள முடியும். நாம் விளங்கிக்கொள்கிற அனைத்திலும் 'உடல்' என்கிற பொருண்மையே மறைந்தும் மறையாமலும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறது. இன்னொரு விதத்தில் சொல்வதானால் நாம் அனைத்திலும் 'உடல்' என்கிற பொருண்மையை ஏதோவொரு வகையில் உணரத் தலைப்படுகிறோம். இதனை எமது கலாசாரம், பண்பாடு, மொழி, இனம், தேசியம், வரலாறு, கல்வி, குடும்பம் என அனைத்தும் தொடர்ச்சியாகக் கற்றுத் தந்து கொண்டிருக்கிறது.

நான் எனது உடலை எவ்வாறு அடையாளப்படுத்துவது? என்கிற கேள்வி மிக முக்கியமானது. ஏனெனில் ஒருவன் தனது உடலை அடையாளப்படுத்தும் நோக்கிலேயே அனைத்தையும் செய்கிறான். அல்லது அவனது செய்கைகள் அவனது உடலை அடையாளப்படுத்துகின்றன. (இது அந்தச் செய்கைகளில் இருந்து நாம் அவனது அடையாளத்தைத் தேடிப் புரிந்து கொள்வதில் முனைப்பாயுள்ளோம் என்கிற புரிதல் வகைமையைச் சார்ந்தது) உடலை அடையாளப்படுத்துவதில் மூன்று விடயங்கள் கவனிக்கத்தக்கவை.

1. தன்னை அறிதல்.
2. மற்றவற்றை அறிதல்.
3. மற்றவற்றினூடாக தன்னை அறிதல்.

இங்கு தன்னை அறிதல் என்பது மிக முக்கியமானது. மிக அடிப்படையானது. ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து சமூகத்தில் வாழ்ந்து இறக்கும் வரை இந்த முனைப்பைத் தொடர்ந்து செய்கிறது. இறுதிவரை தன்னை அறியும் தேடல் நிகழ்ந்த வண்ணமே உள்ளது. இந்தத் தேடல் அவனது உடலையும் மனதையும் அவன் யார் என்கின்ற பொருண்மையையும் வடிவமைத்துக் கொண்டிருக்கிறது. புத்தர், காந்தி, ஹிட்லர், சேகுவேரா, என்று நாம் புரிந்து கொள்கிற அனைவரையும் இங்கு கவனித்துப் பார்க்க முடியும். 'புத்தர்' என்கிற பிரதிமைப்படுத்தல் வெறுமனே புகைப்படம் போன்றதல்ல. அது அசையும் சலனப்படம். அதாவது 'புத்தர்' என்கிற உடல் வெறும் ஒற்றைச் சொல்லால் விளங்கிக்கொள்வதல்ல. அதற்கு தொடர்ச்சியான இயக்கம் உண்டு. அது உடல் மறைந்த பின்னும் இயங்கிக் கொள்ளக் கூடிய இயந்திர வகைமை.

அதேபோல் மற்றவற்றை அறிதல் என்பது கூட, தன்னை அறிதலுக்கு அடிப்படையானது. மற்றவற்றை அறிதலின் மூலம் தான் யார் என்பதை அறுதியாக நிலைப்படுத்துவதற்கான செயற்பாட்டை நாம் தொடர்ச்சியாகவும் தன்னிச்சையாகவும் செய்து கொண்டிருக்கிறோம். இரட்டை எதிரிடைத் தன்மைகளின் அடிப்படைகளில் இதுவும் ஒன்று. நான் - நீ அல்லது நான் - ஏனையவை இது எதுவாக இருந்தாலும் எனது உடலுக்கு மாற்றாக உனது உடலில், அவனது உடலில், அதனுடைய உடலில் என்ன இருக்கிறது, என்ன இயக்கத்தைக் கொண்டிருக்கிறது என்பதாக இது அமையும்.

அடுத்து மற்றவற்றிலிருந்து தன்னை அறிதல். இது தான் அடிப்படையானது. எமது தேவை என்னை அறிதல், என்னை முன்னிலைப்படுத்தலே. நான் என்னை அறிகிறேன், மற்றவற்றை அறிகிறேன், அதிலிருந்து என்னை அறிகிறேன். ஒரு சமூகத்தில், ஒரு நாட்டில் வரலாற்றில் முதன்மைப்படுகிற ஒருவனை எடுத்துப் பார்த்தால் அவன், அவனாக தன்னை வெளிப்படுத்தியமைக்கு அவன் மட்டுமே காரணமல்ல. அவனைச் சுற்றியுள்ள மற்றவர்கள், அவனைச் சுற்றியுள்ள மற்றைய அமைப்புக்கள் அதிலிருந்து அவன் தன்னை இனங்கண்டு கொள்கிறான். இங்கு முதற் சொன்ன புத்தர், காந்தி, சேகுவேரா, பெரியார், பிரபாகரன் என அவர்களது பெயர்களால் பிரதிமைகளால் அறியப்பட்ட அனைவரும் அந்த அடையாளங்களைக் கண்டு கொள்வதற்கு இந்த மூன்று அறிதல் தன்மைகள் முக்கியமானவை.

'நீ உன்னையே அறிவாய்' என்கிற கூற்று மிக அடிப்படையானது. ஆன்மிக நிலையிலும் அரசியல் நிலையிலும் லௌகீக நிலையிலும் இதனை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

ஒரு உடல் எவ்வாறு தன்னை அடையாளப் படுத்துகிறது என்பதிலிருந்தே நாம் ஒரு பிரதி யைப் புரிந்து கொள்ள முடியும். ஒரு பிரதி யில் உடலின் அடையாளம் என்பது மிக முக்கியமானதும் அடிப்படையானதும். இன்னொரு வகையில் அது ஒரு இயல்பான செயலூக்கம். சுயத்தை வெளிப் படுத்தல் என்பது உடல் அடையாளத் தின் பிரதான கூறு. இந்த சுய அடையாளந்தான் ஒரு பிரதியின் பாலினத்தை, கலாசாரத்தை, பண்பாட்டை, இனத்தை, மொழியை, அரசியலை, கலகத்தை தீர்மானிப்பதாக அமையக் கூடியது.

உண்மையில் ஒருவன் தன்னை உடலாக உணர்தல் என்பதை இன்னொருவர் புரிந்து கொள்கின்ற முயற்சி மிகவும் தேவையான ஒன்று. ஏனெனில் அந்த உடலிலிருந்து மொழி, கருத்துருவம், அழகியல், அதிகாரம் என அனைத்தும் பிறக்கிறது. அதிலிருந்துதான் பிரதி தோற்றம் கொள்கிறது. இத்தகைய புரிந்து கொள்கின்ற முயற்சியில் அடிப்படைத் தத்துவம் ஒன்று உண்டு. அது வேறுபடுத்தல் தத்துவம் இந்த வேறுபடுத்தல் என்பது உடலை வேறுபடுத்தல் போன்றது.

ஆண் - பெண்
எங்கடையாக்கள் - மற்றாக்கள்
ஆதரவானவன் - எதிரானவன்

இந்த அடிப்படைகள் அனைத்தும் வேறுபடுத்தலில் இருந்து பிறந்ததே. ஒரு பிரதியிலும் நாம் இதைத்தான் தேடுகிறோம். இந்தப் பிரதி இந்துத்துவ பிரதி, இது தலித்திய பிரதி, அது பெண்ணியம் சார்ந்தது, அது புலி ஆதரவு கொண்டது, இது புலிகள் மீது காழ்ப் புணர்வு கொண்டது என நாம் வாசித்து அடையா ளப்படுத்துகின்ற புரிதல் எங்கிருந்து வருகிறது.

ஒரு வகையில் பார்த்தால் பெண் இலக்கியம், மார்க்சிய இலக்கியம், தலித் இலக்கியம் என அனைத்தும் 'உடல்' மைய இலக்கியம் தான். இது உடல் பற்றிய புரிதலில் இருந்து உருவாகிறது. குறிப்பாக இவ்வாறான வேறுபடுத்தல் வடிவத்திலிருந்து உடல் ஏகாதிபத்தியம் பிறக்கிறது. இந்த உடல் ஏகாதிபத்தியத்தின் மைய இழைகளை குறிப்பாக நுண்ணிய இழைகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் பிரதிகளில் கண்டு கொள்ளமுடியும்.

இந்த ஏகாதிபத்தியம் இரண்டு அடிப்படைகளால் ஆனது. ஒன்று தனிநபர் ஏகாதிபத்தியம் இரண்டு குழு ஏகாதிபத்தியம் இங்கு தனிநபர் ஏகாதிபத்தியம் என்பது நான் என்கின்ற சுயத்தை அதிகாரம் எவ்வாறு கட்டமைக்கிறது என்பதனூடாக நாம் புரிந்து கொள்ள முடியும். ஒரு தனி மனித உடல் எவ்வாறு வடிவமைக்கப்படுகிறது. என்பதே அது. அது எவ்வாறு தன்னை இயல்பாக வடிவமைத்துக் கொள்கிறது என்பதல்ல.

இதே போல் ஒரு நாட்டில் ஒரு நிறுவனத்தில் தனியனுக்கு அளிக்கப்படும் சிகிச்சை. இதனை அரசும் அதிகாரமும் முறைப்படுத்தி மேற்கொள்கிறது. மார்க்சிய பார்வையில் இத்தகைய சிகிச்சைக் கட்டமைப்பு என்பது தனது நிறுவனத்திற்கு ஆரோக்கிய மான வேலையாளை - உத்தியோகத்தரை தக்க வைத்து தனது நிறுவனத்தின் உற்பத்தியை, தொடர்ச்சியை தக்கவைக்க வேண்டும் என்கிற அதிகார முதலாளித்துவ அடிப்படைகளாலானது என்கிறது. இதனூடாக உடலைக் கட்டுப்படுத்தி தனது அதிகாரத்துக்குள் வைத்திருத்தல் என்பதே அது.

அதேபோல் குழுநிலையில் வெளிப்படுகின்ற ஏகாதிபத்தியம் என்பது ஒரு சமூகக் குழுமத்தை கண்காணிப்பில் வைத்திருப்பதனை புரிந்து கொள்வதாக அமையும். ஒரு சமூகக்குழு என்பது அதிகாரத்தின் பார்வையில் ஆட்டு மந்தையைப் போன்றது. வழி காட்டும் ஆட்டின் வழி மந்தை நடக்கும். அதிகார வடிவம் இதனை தனது கண் காணிப்பிற்காக பயன்படுத்துகிறது.

இங்கு இந்த இரண்டு ஏகாதிபத்திய வடிவங்களில் இருந்து பீறிடுகின்ற 'உரையாடல்கள்' மிக முக்கியமானவை. மிக முக்கியமாக பிரதிகள் இந்த உரையாடலை முன்வைக்கக் கூடியவை. அதிகாரத்தின் ஒத்தோடிக்கொள்ளக் கூடிய உரையாடலாகவும், அதி காரத்தின் அடக்குமுறையிலி ருந்து வெடித்துக் கிளம்புகிற மாற்று உரை யாடலாகவும் அது அமையலாம்.

இதுதான் ஒரு பிரதி கொண்டிருக்கக் கூடிய உரையாடல் இதிலிருந்து ஒரு தனியன் பெற்றுக் கொள்ளக்கூடிய 'சுய இயங்கியல்' மிக முக்கியமா னது, மிக நுட்பமானது. ஒரு தனியன் இந்த அதிகார ஏகாதி பத்திய வடிவத்திலிருந்து தன்னை எவ்வாறு மீட்டுக் கொள் கிறான் அல்லது அந்த அதிகா ரத்திடம் எவ்வாறு தன்னை ஒப்புக் கொடுக் கிறான் என்பதே அது.

ஒரு உடலின் இயக்கம் என்பது பிரதி யின் இயக்கத் திற்கு அடிப்படையானது. உடலின் உரு வாக்கமே பிரதியின் உருவாக்கத்தையும் அதன் சார்பு நிலையையும் தீர்மானிக்கிறது. ■

தீம்பு

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல்லையென்றால் எப்படி? ஆசிபாவின் கையில் அந்த பழைய அலுமாரியின் திறப்பை உரிச்சு வச்சாப் போல் இருக்கிறது மறு. சிறிய தழும்பாகத்தான் வந்தது. பிறகு மறைந்து விட்டது. மீண்டும் சில நாட்களின் பின் அந்த மறு வந்துவிட்டது. இதை நானோ அவள் உம்மாவோ கண்டுகொள்ளவில்லை. பிள்ளையின் உடம்புக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. மாறாக பிள்ளையின் வலது முன்னங்கைக்கு அந்த மறு அழகாகத்தான் இருந்தது.

ஆனால் அந்த டொக்டர்மாருக்குத்தான் சந்தேகம். இவள் அடைக்கப்பட்ட அலுமாரிக் கதவுகளைத் திறப்பு இல்லாமல் கையை வைத்தே திறக்கின்றாள். ஐந்து வயதில் இருந்த சுறுசுறுப்பான பேச்சு எதுவுமே இல்லை. அடிக்கடி வீட்டை விட்டு வெளியே ஓடுகிறாள் என்றால் இதை மன நோய் என்று சொல்ல முடியாது மாறாக என்னவென்பது. இனி ஆசிபாவின் கால்களுக்கு சங்கிலிப் பூட்டுத் தேவையில்லை. எந்த மருந்துகளும் தேவையில்லை. இது ஒரு நோயில்லை. என்று டொக்டர் முடிவு செய்துவிட்டார் என்ற சந்தோசமான செய்தியைக் கேட்கும் தொலைபேசி அழைப்பிற்காகத்தான் நான் காத்திருந்தேன்.

"குதிரை எப்படி இருக்கு? நீ சவாரி போக பழகிவிட்டாயா?" என்று அவன் ஆசிபாவைப் பார்த்துக் கேட்டான்.

"இல்லை இன்னும் இல்லை" என்றேன் நான் எதிரே வந்து. கதிரையில் இருந்தவன் எழுந்து நின்றான். றிபாயா தனது அறைக்குள் நாளைய யோகா மாணவிகளுக்கான செய்முறைப் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தாள். அவள் உடல் இறுக்கமாக, ஒரு கம்பீரமாக இருந்தது. அவன் அவளைத் திரும்பிப் பார்க்கவில்லை. ஆசிபாவின் கையில் இருந்த திறப்பு வடிவ மச்சத்தையே பார்த்தான்.

"நான் இன்னும் ஒரு வாரத்தில் பிரான்ஸ் போகிறேன். ஆசிபாவின் வாப்பா அவளை நலம் விசாரித்து வரச் சொன்னார்" என்றான் அவன்.

"அவர் அன்பாகத் தந்த குதிரை சுகம் என்று சொல்லுங்கள் போதும். அவர் பெயரை மகள் மறந்து விட்டாள் என்றும் சொல்லுங்க" என்றாள் யோகா ஆசனத்தில் இருந்தவாறு.

"உங்கள் மனைவி லமாவுக்கு என் சலாத்தைச் சொல்லுங்கள்" என்றாள் .

"வீட்டில் அவரின் புகைப்படம் ஒன்றுகூட இல்லை என்றும் சொல்லுங்கள்" என்று நான் குறுக்கிட்டேன். அவன் கண்கள் எதற்கோ அவதியுறுவதுபோல் இருந்தன.

"மூன்று வருடத்திற்கு இரண்டு வாரம் லீவில் வாரவர்தானே" என்று அவன் கையில் இருந்த புல்லாங்குழலையும், அந்த ஒற்றை ரோஜாவையும் ஆசிபாவின் பக்கம் நீட்டினான்

"என் வாப்பாவின் பெயர் எனக்குத் தெரியாது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள் அவனருகில் வந்த ஆசிபா. அவன் கொடுத்த புல்லாங்குழலில் அவர் பெயர் எழுதியிருந்தது. அவள் பார்க்கவேயில்லை. அப்போது தொலைபேசியில் டாக்டர் அழைத்தார். "ஆசிபாவை நீங்கள் பிரிந்துதான் ஆகவேண்டும். என்னை மன்னித்துவிடுங்கள்" என்றார். ■

யாழ் சத்யா

அத்தியாயம் - 07

அவள் அம்மாவாகிறாள்...

"என்னங்க எனக்கு ஒரே விசராக் கிடக்கு. எனக்குச் சரியாப் பால் குடுக்கத் தெரியுது இல்லை. ஒழுங்காப் பிள்ளையைத் தூக்கத் தெரியுது இல்லை.. பிள்ளையிட தோல் பளபளப்பில்லாம இருக்காம். பிள்ளை நிறம் குறைவாக இருக்கிறானாம். எல்லாம் என்னால தானே. நான் நல்ல அம்மா இல்லைப் போல கிடக்கு. எனக்குப் பேசாமல் செத்துப் போகலாம் போல கிடக்குப்பா. ஒரு மாசப் பிள்ளையையே ஒழுங்காக வளர்க்கத் தெரியாதனான். எப்பிடி இனிமேல் வளர்த்து முடிக்கப் போகிறனோ தெரியேல்லையே. அதுவும் ஆம்பிளைப் பிள்ளை வேற. நாட்டில இப்ப எல்லா வசதியும் சுதந்திரமும் வேற இருக்கு. எனக்கு சரியான பயமாக் கிடக்கு ஆனந்த்."

அருகில் அமர்ந்திருந்த கணவனிடம் கூறிய தாரணி விசும்பி அழ ஆரம்பித்து விட்டாள். ஆனந்தரூபனோ அவள் பேச்சைக் கேட்டுத் திகைத்து விட்டான்.

"ஏய் தாரு. என்ன நடந்தது உனக்கு? சும்மா லூசு மாதிரிக் கதைக்காதை. பிள்ளை நல்லாத் தானே இருக்கிறான். அவனுக்கு இப்பத்தான் ஒரு மாசம் ஆகியிருக்கு. நீ ஏன் அதுக்குள்ள இருபது வருசத்தைப் பற்றி யோசிக்கிறாய்.

இப்ப எல்லாம் ஒரே எரிஞ்சு விழுந்து கொண்டு அழுது கொண்டிருக் கிறாய் தாரு. பிள் ளையிட தோலெல்லாம் நல்லாத்தான் இருக்கு. நீ வாறவையிட கதைக்கெல்லாம் காது குடுக் காதை. எங்கட சனத்தைப் பற் றித் தெரியாதே.

தங்களுக்குத்தான் எல்லாம் தெரியும் என்று ஒவ்வொன்றைச் சொல்லுவினம். நீ கணக்கெடுக்காதை. உனக்கு டொக்டர், மிட்வைப் என்ன சொன்னவையோ அதன்படி மட்டும் நட"

வழக்கமாக ஆனந்தரூபன், மனைவி என்ன சொன்னாலும் அதைப் பற்றி ஒழுங்காகக் காது கொடுக்காமல் மறுத்துப் பேசுவதுதான் அதிகம். ஆனால் இப்போது சில வாரங்களாகவே தாரணியின் மாற்றத்தை அவதானித்தவன் இப்போது கொஞ்சம் அமைதியாகப் பொறுமையாகவே அவளோடு பேச ஆரம்பித் திருந்தான்.

கணவனின் வார்த்தைகள் ஆறுதல் தந்தனவோ என்னவோ தாரணியும் அப்போதைக்கு அழுகையை நிறுத்தி விட்டாள். ஆனால் ஆனந்தரூபன் மனதோ அமைதியிழந்து தவித்தது. எதுவோ சரியில்லை என அவன் உள் மனது உணர்ந்து கொண்டது. உடனடியாகத் தனது வைத்திய நண்பன் ஒருவனுக்கு குறுஞ்செய்தியை அனுப்பி விட்டுத்தான் மறுவேலை பார்த்தான்.

"மச்சான்.. உன்னை ஒருக்கால் அவசரமாகச் சந்திக்க வேணும்.. எப்ப வீட்ட நிப்பாய் என்று சொல்லு வாறன்.."

ஆனந்தோடு பாடசாலையில் கூடப் படித்தவன். இப்போது மகப்பேறு வைத்திய நிபுணராக இருக்கிறான். பாடசாலை நட்பு இப்போது வரை நெருக்கமாகவே தொடர்கிறது. அன்று இரவே நண்பனை சந்திக்க வரச் சொன்னான் அந்த வைத்திய நண்பன்.

"என்ன மச்சி.. ஏதும் பிரச்சினையே..? என்னடா நடந்தது? தாரணியும் பிள்ளையும் சுகமாகத்தானே இருக்கினம்..?"

"சுகமாகத்தான்டா இருக்கினம்.. ஆனால் தாரு தான்டா கொஞ்சம் வித்தியாசமா நடக்கிறாள்.. அது தான் எனக்கு ஒரே குழப்பமாகக் கிடக்கு.."

"ஓ.. என்ன ஒரே கோபப்பட்டுக் கத்துறாளா? அடிக்கடி அழுகிறாளா? தான் நல்ல அம்மா இல்லை என்று சொல்லுறாளா? சாக வேணும் போல கிடக்கு என்டுறாளா?"

"என்னடா நீ.. அப்பிடியே நேரில பார்த்த போல சொல்லுறாய்..?"

"ஹூம்.. என்ர தொழிலே இதுதானேடா.. பிள்ளை பிறந்து சில கிழமைக்குத் தாய்மாருக்கு இப்பிடி உணர்வுகள் வாறது சாதாரணம்டா.. ரொம்பவே மூட் ஸ்விங் ஆகுவினம்.. நல்லாக் கதைச்சுக் கொண்டி ருந்துவிட்டு உடன அழுவினம், கோபப்படுவினம்.. ஒரே சோகமாக இருப்பினம். postpartum blue என்று கூகிள் பண்ணிப்பாருடா. ஆனா இதே தொடர்ந்துச்சு என்று சொன்னால் அது சீரியஸ் பிரச்சினை தான்டா. அதை postpartum depression என்று சொல்லுறது. இந்தப் பிறந்த குழந்தையைக் கொலை செய்யுறது, அடிக்கிறது எல்லாம் இதனாலதான்டா.."

"என்னடா இப்பிடி கிலியைக் கிளப்பிறாய்?"

"இல்லை ஆனந்த்.. நான் உன்னை பயப்பிடுத்தச் சொல்லேல்ல.. தாரணிக்கு இப்பத்தானே ஒரு மாசம் ஆகுது. சாதாரணமாக எல்லோருக்கும் வாறது போல தான் அவளுக்கும் வந்திருக்கு. எல்லாம் சரியாகிடும்.. நீ பயப்பிடாதை."

"இது சுகமாகி தாரு முந்தி மாதிரி நோர்மலாக இருக்க வேணும் என்றால் நான் என்னடா செய்ய வேணும்..? முந்தியெல்லாம் நான் என்ன சொன்னாலும் பெருசாத் திருப்பிக் கதைக்க மாட்டாள்.. அவள் என்னோட சண்டை பிடிக்கிற ஒரே விசயம் குடிச்சுப் போட்டு மோட்டசைக்கிள் ஓடிறது மட்டும் தான்.. ஆனா இப்ப எதுக்கெடுத்தாலும் கத்துறாள். எரிஞ்சு விழுந்து கொண்டேயிருக்கிறாள்டா.."

"புரியுதுடா. ஆம்பிளையள் நாங்கள் பிள்ளை பெறுறதைப் பற்றிப் பெருசா நினைக்கிறேல்ல. எல்லாரும் தானே பெறுகினம்.. பிறகென்ன என்டிட்டு நாங்கள் எங்கட வாழ்க்கைய வழக்கம் போலவேதான் கொண்டு போறது.. எனக்கும் இப்ப இதைப் பற்றிப் படிச்சபடியால்தானே எல்லாம் தெரியுது.

எங்கட பொம்பிளையள் பாவங்களடா. ஒண்டையும் வெளிய சொல்லவும் முடியாமல் எங்க சைக்கியாட்ரிக்கடப் போனால் பைத்தியம் என்று முடிவு கட்டிடுவினம் என்று பயத்திலேயே எல்லாத்தையும் தங்களுக்க அடக்கி வைச்சு வாழ்ந்து முடிச்சிடுகினம். இது அளவு கடந்து போற நேரத்திலதான் இந்தப் பிள்ளைகளையே பெத்த தாய்மார் கொலை பண்ணுற சம்பவங்கள் எல்லாம் நடக்குது.. இப்ப எல்லாம் அடிக்கடி இந்த நியூஸ் தானே வந்து கொண்டிருக்குது."

"ஓமடா. எனக்கும் தாரணி கதைக்கிறதுகளைக் கேட்டுப் பயத்திலதான் உன்னட்ட ஓடி வந்தனான்"

"நல்ல வேலை செய்தாய் ஆனந்த்."

"நான் என்னதான்டா செய்யணும் இப்ப?"

"நீ ஒண்டும் கனக்கச் செய்யத் தேவையில்லை.. தாரணி இந்த நேரத்தில எரிஞ்சு விழுந்தா நீயும் கத்தாமல் கொஞ்சம் பொறுமையாக இரு. அவளோட அன்பாகக் கதை. பிள்ளையை நீயும் சேர்ந்து தான் வளர்க்கிறது என்றதை அவள்ட மனசில பதிய வை. பிள்ளைக்கு பம்பர்ஸ் மாத்துறது, பிள்ளையைத் தூக்கி வைச்சு விளையாட்டுக் காட்டுறது என்று கொஞ்சம் பிள்ளையை நீயும் பார்த்துக் கொள்ளு. அவளை தன்ர வேலைகளை செய்ய விடு.

இருபத்து நாலுமணி நேரமும் அவளையே பிள்ளையைப் பாக்க விடத்தான் அவளுக்கு தான் மட்டுமேதான் பிள்ளையை வளர்த்து ஆளாக்க வேணும் என்ற பயம் வருது.. கொஞ்ச நாளைக்கு லீவு போட்டிட்டு வீட்டில நின்று நீயும் பிள்ளையைக் கவனியடா. அவளை நல்லா நித்திரை கொள்ள விடு."

"ஹூம் நானும் கொஞ்ச நாளாக பார்ட்டி அது இதென்று அவளை கவனிக்கிறதே இல்லை தான்டா. பிள்ளை வேற சின்னனாக இருக்கத் தூக்கப் பயமாக் கிடக்குடா."

"பொம்பிளையள் மட்டும் என்ன தூக்கிப் பழகியே பிறந்தவையடா? எல்லாம் பழக்கம்தான். நீ எந்தளவுக்கு அனுசரணையாக தாரணியோட நடந்து கொள்ளுறியோ அந்தளவுக்கு உன்ர வாழ்க்கை சுகமாகிடும். ஒவ்வொரு அம்மாமாரும் பிள்ளை பிறக்கேக்க கத்துற சத்தத்தைக் கேட்டால்தான்டா தெரியும் அதுட வேதனை.. வெளிநாடு மாதிரி இங்கயும் புருசன்மாரை பிள்ளை பிறக்கேக்க கூட இருக்க விட்டாலே எங்கட ஆம்பிளையள் பெஞ்சாதிமாரை அன்பாக நடத்தத் தொடங்கிடுவினம்."

"ஹூம்.. தாங்ஸ்டா மச்சான்.. நானும் இனி தாருவோட அவதானமாக நடக்கிறன்டா. அவள் சாகணும் போல இருக்கு என்றவும் உண்மையாப் பயந்து போனன்டா. சரிடா. இப்பவே ஒன்பது மணியாச்சு. நான் பிறகு ஆறுதலா உன்னட்ட வாறன். ரொம்ப தாங்ஸ்டா மச்சான்."

"ஒண்டும் யோசிக்காம போடா. அவளுக்குச் சரியாகிடும். பால் குடுக்கிறது நோகுது அப்பிடி ஏதும் என்டால் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டு வா.. நான் செக் பண்ணிப் பாத்திட்டு மருந்து தாறன்."

"சரிடா மச்சான்.. நான் போய்ட்டு வாறன்."

புதிய உணர்வுகளோடு வீட்டை நோக்கிப் புறப் பட்டான் ஆனந்தரூபன். நண்பனின் அறிவுரைகள் தாரணி வாழ்வை மாற்றுமா?

அவள் தொடர்வாள்...

(11 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தமிழ்த்தேசியத்திற்கான பெண்ணியச் சிந்தனைகளையும் உருவாக்க வேண்டும். இதற்கு இந்திய, சர்வதேச பெண்ணியச் சிந்தனைக் கூறுகளையும் தமிழர்கள் மரபு நிலைப்பட்ட முற்போக்கான கூறுகளையும் இணைந்ததாக கையாளுதல் சிறந்தது.

தமிழ் இனத்திற்கிடையே எழுகின்ற அக முரண்பாடு காரணமாக மிக முக்கியமான நான்கு நெருக்கடிகள் எழுகின்றன.

ஒன்று, மனித உரிமை மீறல்: ஒரு தேசியத்துக்குள் இருக்கின்ற மக்கள் குழுவினரை குறித்த ஒரு காரணத்தைக் கருத்தில் கொண்டு ஒதுக்கி விட முடியாது. அப்படிச் செய்வதற்கு யாருக்கும் உரிமையும் கிடையாது அது அவர்களுடைய தனித்துவத்தினைக் கேள்விக் குள்ளாக்கும். இது அவர்களுடைய உரிமையை மறுதலிப்பதாகும். தமிழ் இனத்துக்குள் ளேயே ஒவ்வொருவருக்குரிய உரிமை வழங்க தயக்கம் காட்டும் போது. சிங்களத் தரப்பினரிடம் எப்படி தமிழர்கள் தமது உரிமை தொடர்பில் போராடுவது? என்ற கேள்வி எழுகிறது.

இரண்டாவது, மக்களைத் திரளாக்குவதில் உள்ள தடை: தேசம் என்பது மக்கள் திரளைக் கொண்ட தொகுதி. இவ் மக்கள் திரளை ஒன்றாக்குவதற்கு எவையெல்லாம் தடையாக இருக்கின்றதோ அவை எல்லாம் தேசிய ஒருமைப்பாட்டுக்குத் தடையாகவே அமையும். மக்களைத் திரளாக்காது தேசிய இலக்கை அடைய

அக முரண்பாடுகளைக் களைதலும் தமிழ்த்தேசியத்தை வாழ்வு முறையாக்குதலும்

முடியாது, தேசத்தைக் கட்டியெழுப்ப முடியாது.

மூன்றாவது, எதிரி இடைவெளியைப் பயன்படுத்திக் கொள்ளல்: தமிழ்த் தேசிய மக்களிடையே நிலவிக் காணப்படுகின்ற பல்வேறு அகமுரண்பாடுகள் ஒவ்வொரு மக்கள் கூட்டத்தையும் ஒவ்வொரு மனிதனையும் தனித்தனிக் கூறுகளாக்கி இடைவெளியை ஏற்படுத்திச் செல்லும். இவ் இடைவெளியை எதிரி தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி தேசிய உணர்வுகளைப் பலவீனப்படுத்தும் நெருக்கடி நிலை உருவாக்குவதற்கு வாய்ப்பளிக்கும்.

நான்காவது, சர்வதேச அபிப்பிராயத்தை தமிழ்த்தேசியத்தின்பால் திருப்புவதற்குரிய தடை:

ஓர் இனத்துக்குள் இத்தகைய அக முரண்பாடுகள் தேசிய ரீதியிலான பிரச்சினையை ஒத்த குரலில் எழுப்புவதற்கும் சர்வதேசத்திடம் கொண்டு செல்வதற்கும் தடையாக அமையும். இது தமிழ்த் தேசிய முன்னெடுப்புகளில் பாதிப்பினை ஏற்படுத்தும். பேராசிரியர் சிவத்தம்பி சொல்வதைப் போல் தேசிய போராட்டம் தேசிய அரசினால் தான் உருவாகி வளரும். ஆனால் தேசிய போராட்டத்தின் வெற்றியைத் தீர்மானிப்பது சர்வதேசமாகவே இருக்கும். இதனால் சர்வதேசத்தை தேசிய போராட்டத்தின் பால் திசைதிருப்ப முனைய வேண்டும். இதற்கு ஜனநாயக நிதிக்கோட்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். அது இல்லாமல் நாம் சர்வதேசத்தின்முன்எமது பிரச்சினையைக்கொண்டு செல்லமுடியாது.

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது தமிழ் இனம் தன்னகத்தே கொண்டுள்ள அகமுரண்பாடுகளுடன் தொடர்ந்து பயணிக்கும் போது தமிழ்த் தேசிய அரசியலில் வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியாது. இத்தகைய முரண்பாடுகளைப் நீக்குவதற்குரிய வழிமுறைகளைக் கையாள வேண்டும். இத்தகைய அகமுரண்பாடுகளை நீக்கும் வல்லமை தமிழ் தேசியத்திற்குத்தான் உண்டு. மக்களைத் திரளாக்கவேண்டிய தேவையும் அதற்கு இருக்கின்றது. மக்களைத் திரளாக்காது தமிழ்த் தேசியத்தை வென்றெடுக்கமுடியாது. எல்லாவகையான முரண்பாடுகளையும் களைந்தால்தான் தேசமாக எழுச்சி கொள்ள முடியும். தேசமாக எழுச்சி கொண்டால்தான் வெளியிலிருந்து வருகின்ற ஒடுக்குமுறைகளை எதிர்கொள்ள முடியும். இதனை தமிழ்த்தேசியத்தின் வாழ்வுமுறையாக மாற்றுவதற்கு தமிழ்த்தேசியவாதிகள், செயற்பாட்டாளர்கள் அகமுரண்பாடு தொடர்பாக மீள் வாசிப்பினை மேற் கொண்டு அதனைக் களைவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இல்லையென்றால் தமிழ்த் தேசியம் வெல்லமுடியாததாக மாற்றம் பெற்றுவிடும். ■

கொரியன் மர்ம முடிச்சிய சினிமா “Blind”

அபூர்வன்

தென்கொரிய இயக்குநரான ஆன்-சாங்-ஊன் (Ahn – Sang – Hoon) அவர்களின் உருவாக்கத்தில் வெளிவந்த மர்ம முடிச்சிய சினிமாவாக ‘Blind’ அமைந்துள்ளது. உலகம் முழுமையும் பெரும் திரள் சுவைஞர்களின் ஈர்ப்பிற்குரிய நகரும் படிமமாகக் கொண்டாடப்படுகின்றது. விறுவிறுப்பான திரைக்கதையும் பார்வையாளனைப் பதற்றங்கொள்ள வைக்கும் சட்டகங்களும் படத்திற்கு வலுச்சேர்த்துள்ளன. அடுத்தடுத்த காட்சிகளைத் திரைச்சுவைஞர் ஊகிக்க முடியாத அளவிற்கு நகர்த்திச் செல்கிறார். பன்முக முடிச்சுக்களைப் போட்டு, சுவாரஸ்யமான தருணத்திலே ஒவ்வொன்றாக அவிழ்க்கிறார்.

காவல்துறையிலே பயிலுநராகப் பணியாற்றும் நாயகி, தனது சகோதரனைக் கைது செய்யும் தருணம் ஒன்றிலே நிகழும் விபத்திலே, பார்வையை இழக்கிறாள். அவள் வாழுகின்ற பிரதேசத்திலே தொடர் கொலைகளை நிகழ்த்துகின்ற ஒருவனைத் தற்செயலாகச் சந்திக்கின்றாள். அவனைக் குறித்த செய்திகளைக் காவல்துறையினரிடம் பகிர்கிறாள். அவளைப் போலவே பிறிதொரு இளைஞனும் அக்கொலைகாரன் பற்றிய செய்திகளைக் காவல்துறையினரிடம் கூறுகிறார். இருவரும் நட்புக்கொண்டு அக்கொலைகாரனைத் தேடிச் சென்று கொல்வதை மைய இழையாக வைத்துத் திரைக்கதை பின்னப்பட்டுள்ளது.

Blind திரைப்படத்தில் மிரட்டலாக அமைவது கிம் - ஹா – நியூ (Kim – Ha – Neal) அவர்களின் ஆற்றுகையே ஆகும். விழிப்புலனிழந்த சூ - ஹா (Soo – Ah) என்ற பெண்ணாகப் பிரதான கதாபாத்திரத்தில் அற்புதமாக நடித்துள்ளார். காட்சிகளுக்கான இணைப்பு முடிச்சும் சிறப்பாக அமைந்துள்ளது. சகோதரனை விபத்தில் இருந்து காப்பாற்ற நாயகி எடுக்கும் முயற்சியின் தோல்வியினை, இறுதிக் காட்சியோடு பொருத்திய விதம் அருமையாகவுள்ளது. கொரியன் சினிமாவிலிருந்து கதைகளையும் காட்சிகளையும் நகலெடுக்கும் பண்பினைத் தமிழ்ச் சினிமாவிலே அதிகமாகக் காணமுடியும். அவ்வகையில் மிஷ்கின் இயக்கத்திலே வெளிவந்த “சைக்கோ” திரைப்படம் ‘Blind’ திரைப்படத்தினைப் பார்த்த அருட்டுணர்வில் உருவாக்கப்பட்டதே! தற்போது நயன்தாரா நடித்துக் கொண்டிருக்கும் ‘நெற்றிக்கண்’ திரைப்படம் ‘Blind’ திரைப்படத்தின் அப்பட்டமான நகல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அறம் பிழைத்த அரசியலில் இலங்கை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கமானவர்களாகவே காண்பித்துள்ளனர், காண்பித்து வருகின்றனர். அரசியல மைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை என்பதிலிருந்து ஆட்சியமைக்கும் போதும் ஆட்சி புரியும் போதும் மதபீடங்களுக்குச் சென்று வணங்கி ஆசி பெறும் காட்சிகள் உங்களுடைய நினைவுக்கு வரலாம்.

இந்த ஆசி என்பது தாம் மேற்கொள்ளுகின்ற அத்தனை தவறுகளுக்கும் மக்கள் விரோத - தேச விரோதச் செயற்பாடுகளுக்கும் சேர்த்தே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இங்கே பௌத்த பீடங்களில் உள்ள துறவிகளி டம் பெறுகின்ற ஆசி போதாதென்று இந்தியாவுக்குச் சென்று திருப்பதியிலும் ஆசியைப் பெறுகிறார்கள். சிலர் சாயிபாபாவிடம் ஆசி பெற்றதும் உண்டு.

இப்படி ஆசி பெற்றவர்கள் தங்களுடைய ஆட்சியை எப்படி நடத்தினார்கள்? கடவுளுக்கு விசுவாசமாக அதைச் செய்தார்களா? அல்லது குறைந்த பட்சம் தங்களுடைய மனச்சாட்சிக்குப் பயந்தாவது அதைச் செய்தார்களா?

அதிகாரத்துக்கு வந்து விட்டால் தமக்கு அசுர பலமுண்டு என்று நினைத்துக் கொண்டு ஆட்சியை நடத்தியவர்கள்தானே அனைவரும். ஏன் இப்போது மட்டும் என்ன குறை? இவர்களும் அப்படித்தான். முழந்தாளில் மண்டியிட்டு, துறவிகளிடம் ஆசியைப் பெற்றபின், மக்களுக்கு எதிராக - தேசத்துக்கு எதிராகவே செயற்படுகிறார்கள். இது ஒரு மகா நடிப்பன்றி, மோசமான செயலன்றி வேறென்ன?

இந்த நடிப்பையும் இந்த நடிகர்களையும் இந்த மதபீடங்களும் கேள்வி கேட்பதில்லை. இதே நிலைதான் இந்தியாவிலும். அங்கே மோடி ஒரு தீவிர இந்துமதப்பற்றாளர். பி.ஜே.பி வெளிப்படையான மதவாதக் கட்சி. அது டில்லியில் பாபர் மசூதியை உடைத்து ராமர் கோயிலைக் கட்டியதிலிருந்தே மாபெரும் எழுச்சியடைந்தது. ஆனால் பி.ஜே.பியின் ஆட்சியில்தான் முன்னெப்போதையும் விட மத வன்முறைகளும் தலித்துகள் என்ற பிற்படுத்தப்பட்ட மக்களின் மீதான மிகக் கொடூரமான ஒடுக்குமுறைகளும் மேற்கொள்ளப்படுகிறது. இதையிட்டு மோடியோ பி.ஜே.பியோ கண்டு கொள்வதேயில்லை. மறைமுக ஆதரவை மட்டும் தாராளமாக வழங்குகிறது.

ஆட்சியிலிருப்போரிடம் மட்டும்தான் இந்தக் குறைபாடு இருக்கிறது என்றில்லை. ஆட்சிக்கு வெளியே உள்ள கட்சிகள், அரசியல் தலைவர்கள் தொடக்கம் சமூகத்தில் உள்ள மக்கள் அமைப்புகள், மத நிறுவனங்கள் மற்றும் மக்களில் அதிகாரமும் படிநிலை உயர்வும் உள்ளவர்களிடத்திலும் இந்த முரணும் நாடகத்தன்மையும் உண்டு.

தமிழ்ப்பரப்பில் கடவுள் நம்பிக்கை, மதப்பற்றுள்ள அரசியல்வாதிகளே அதிகமுண்டு. அவர்களிடம்தான் சாதியதிகாரமும் சர்வாதிகார மனநிலையும் தளைத்தோங்கியிருக்கிறது. தங்கள் கண்ணுக்கு முன்னே மதத்தின் பேராலும் சாதியின் பேராலும் பிரதேசம் மற்றும் பால் வேறுபாடு போன்றவற்றின் பேராலும் நடத்தப்படும் எந்த ஒடுக்குமுறையையும் இவர்கள் எதிர்ப்பதில்லை. மறைமுகமாக அவற்றை ஆதரிக்கின்றனர். அப்படியென்றால் இவர்களுடைய உண்மையான முகம் தான் என்ன? இவர்கள் வலியுறுத்துகின்ற நீதியும் அறமும் எத்தகையது? விடுதலையின் பொருள் என்ன?

குறைந்த பட்சம் மேலோட்டமான ஜனநாயகப் பண்பைக் கூட இவர்களிடம் நாம் காண முடியவில்லையே! ஆக, இவர்களும் தமக்குள்ள அதிகாரத்துக்கேற்ற விதத்தில் விலக்கல்களையும் ஒடுக்குமுறைகளையும் தாராளமாகவே செய்கிறார்கள். இவர்களுக்கு அதிகாரம் மேலும் கூடுமாக இருந்தால் ஒடுக்குமுறையின் - அதிகாரப் பிரயோகத்தின் எல்லையும் தன்மையும் கூடும். ஏன் தம்முடைய சக சிறுபான்மைத் தேசிய இனங்களான முஸ்லிம்களையும் மலையக மக்களையும் இவை நோக்கும் விதம் எத்தகையது?

என்ன செய்வது, குதிரையின் குணம் அறிந்து தம்பிரான் கொம்பைக் கொடுக்கவில்லை இவர்களுக்கு என்று சொல்லி நாம் ஆறுதலடைய வேண்டியுள்ளது. இது ஆறுதல் அல்ல உண்மையில் பெரிய மகிழ்ச்சியே.

இருக்கின்ற அதிகாரத்துக்குள்ளாகவே தமது ஆட்களுக்கு (சாதி ரீதியாக) என காணி வழங்குவது தொடக்கம் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பது, அரச உத்தியோகத்தின் மூலம் சமூக அதிகாரத்தைப்பெற எத்தனிப்பது என அத்தனையையும் மிகச் சாதுரியமாகச் செய்து கொண்டேயிருக்கிறார்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்படுவது பகிரங்கமாகவே தொடர்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ்த்தரப்பில்தான் கோயிலுக்குள் அனுமதிக்காத - பாடசாலைகளிலும் சாதி பேதம் பார்க்கின்ற இழிகாரியங்கள் எல்லாம் நடக்கின்றன. இதன்போது இவர்களுடைய கடவுள் பக்தியும் நீதியுணர்வும் அறமும் எங்கே போய் விடுகிறது?

இது மிதவாத அரசியலில் உள்ள குறைபாடு என்றால் விடுதலை அரசியலை முன்னெடுத்தோரின் கதையும் நிலையும் இதுதான். இவர்கள் புரட்சிகரமாக கடவுள் மறுப்பாளர்களாகவும் மத ஒறுப்பாளர்களாகவும் முற்போக்குச் சிந்தனையோடு அரசியலாட்டத்துக்குள் பிரவேசித்தவர்கள். தங்களுடைய புரட்சிகரச் சிந்தனையின் அடையாளமாக தொடக்கத்தில் முற்போக்காகவும் சீர்த்திருத்தமாகவும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டதுமுண்டு. ஜே.வி.பி தொடக்கம் தமிழ் இயக்கங்கள் வரையில் எல்லாற்றுக்கும் ஒரு முற்போக்குப் பாத்திரம் இருக்கிறது. ஆனால் இது ஒரு கட்டம் வரைக்கும்தான். பின்னரோ நிலைமை தலைகீழ்.

அதாவது யாரெல்லாம் தவறானவர்கள், எதெல்லாம் தவறானவை என்று தமது மாற்று அரசியலை தொடங்கினார்களோ அதையெல் லாம் மிஞ்சும் வகையிலேயே பின்னாளில் நடந்து கொண்டனர். இன்றைய ஜே.வி.பி இதற்குச் சிறந்ததொரு உதாரணம். ஐ.தே.க, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன போன்றவற்றுக்கு எந்த வகையில் குறைந்தது ஜே.வி.பி? அதனுடைய இன்றைய முற்போக்கு அம்சங்கள் என்ன? குறிப்பாக இன ஒடுக்கு முறைக்கு எதிரான அதனுடைய நிலைப்பாடு என்ன? அரசியலமைப்பில் பௌத்தத்துக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற ஐ.தே.க , பெரமுன, சு.க போன்றவற்றிலிருந்து ஜே.வி.பி எந்தளவில் விலகுகிறது?

மேலும் இலங்கையின் பல்லினத் தன்மையை அங்கீகரிப்பதிலும் பன்மைத்துவத்தைப் பேணுவதிலும் ஜனநாயக விழுமியத்தைக் காப்பதிலும் ஜே.வி.பியின் நிலைப்பாடு என்ன? பாத்திரமும் பங்களிப்பும் என்ன?

இதை அப்படியே தமிழ் இயக்கங்களுக்கும் போட்டுக் கொள்ளலாம். விடுதலை அரசியல் பேசி ஆயுதம் ஏந்திய போராளிகள் கொலைகார்களாக மாறி கொலை வெறித் தாண்டவமாடியதுதானே வரலாறு. சாதி, பிரதேச வேறுபாடுகளைக் களைவதில் இந்த இயக்கங்களுக்கு ஒரு முற்போக்குப் பாத்திரமிருந்தாலும் அது இவற்றின் அரசியற் தவறுகளால் இடைநின்று போன - அரைகுறை வேக்காட்டு வேலையாகத்தானே மாறியது. முக்கியமாக ஜனநாயகத்தை அப்படியே உயிரோடு குழி தோண்டிப் புதைத்தவை இவைதானே. ஜனநாயகத்தைப் புதைத்து விட்டு விடுதலையைப்பற்றியும் மானுட மகத்து வத்தைப் பற்றியும் எப்படிப் பேச முடியும்?

இதில் சிலருக்கு ஒரு குழப்பம் உண்டு. ஜனநாயகம் என்பது மேற்குலகின் ஒரு சதிகாரக் கட்டுக்கதை. அது மேற்குலகின் தந்திரமான ஒடுக்குமுறை முகம் என. ஆனால் உண்மையான முற்போக்காளர்களும் புரட்சியாளர்களும் ஜனநாயகத்தை மறுதலித்துப் புரட்சியையும் போராட்டத்தையும் மக்கள் விடுதலையையும் மாற்றத்தையும் உருவாக்கலாம் என்பதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். விமர்சனத்தையும் பொறுப்புக் கூறுதலையும் மறுதலிக்கார்.

எனவே இலங்கையிலும் தென்னாசியப் பிராந்தியத்திலும் மதத்தின் பேராலும் விடுதலையின் பேராலும் ஒடுக்குமுறையும் அழிப்புகளும் நடக்கின்றனவே தவிர, ஆக்கபூர்வமான அரசியல் முன்னெடுப்பென்பது குறை நிலையிலேயே உள்ளன. இலங்கையில் இது இன்னும் தீவிரம். இதனால் தான் இலங்கை மேலும் மேலும் நெருக்கடியைச் சந்திக்கிறது. இலங்கையர்கள் வீழ்ச்சியடைந் தோராக இருக்கின்றனர். இதில் மாறுதல் வேண்டும் என்றால் அதற்கான பயணத் திசைபற்றி திறந்த மனதோடு வெளிப்படையாகச் சிந்திக்கவும் பேசவும் வேண்டும். பல கைகள் இணைய வேண்டும்.

■

இருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை புதிய பிரச்சினைகளும் விடுவதாயில்லை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் தமது சேவைகளைத் தொடர்ந்து செய்வ தற்குப் பல்வேறு காரணிகள் தடையாக உள்ளன. அவ் வாறான காரணிகளைக் கருத்தில் கொண்டு நிவர்த்திப் பதன் மூலம் தமது சேவையினைப் பாதுகாப்பாகவும் வினைத்திறனுடையதாகவும் செய்யலாம் என்று நம்பு கிறார்கள். அதன் அடிப்படைகளைக் கொண்டே அவர் கள் தமது கோரிக்கைகளை அரசு நிறைவேற்றித்தர வேண் டும் என்பதனை வலியுறுத்தி அடையாளப் பணிப்புறக் கணிப்பினை செய்துள்ளதாக அறிய முடிகிறது.

வைத்தியசாலைப் பணியாளர்கள் பதின்னான்கு கோரிக் கைகளை முன்வைத்து தமது அடையாளப் பணிப்புறக் கணிப்பினைச் செய்திருக்கின்றனர். அத்தகைய கோரிக் கைகளில் மிகவும் முக்கியமானவையாக ஆளணிப்பற் றாக்குறையினை நிவர்த்தி செய்தல், கொரோனாத் தடுப் பூசிகளை தருதல். கொரோனா காலத்தில் தாங்கள் மேற் கொள்ளும் இடர் நிறைந்த பணிகளைக் கருத்தில் கொண்டு இடர்காலக் கொடுப்பனவை வழங்குதல், கொரோனா நோயாளிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு சேவையினைச் செய்பவர்களுக்கு தங்குவதற்குரிய இடவசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பாதுகாப்பு அங்கிகளைப் பெற்றுத் தருதல் குறிப்பாக N 95 மாஸ்க்கை போதியளவு கிடைக்கச் செய்தல். போன்றவையே அவை யாகும். அவர்கள் வைக்கின்ற கோரிக்கை நியாயமானது என்றே பலரும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். மட்டக்களப்பு வைத்தியசாலையில் அடையாளப் பணிப்புறக்கணிப்பு மேற்கொண்ட வைத்தியசாலைத் தாதியர்கள் மற்றும் ஊழியர்களைப் பாரளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும், மன்னார் வைத்தியசாலைகளில் அடையாளப் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்ட தாதியர்களைப் பாராளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கலநாதனும் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்த தோடு தீர்த்து வைப்பதற்குரிய நடவடிக்கைகளை முன் னெடுப்பதாகவும் தெரிவித்திருந்தனர் என்பது இவ் விடத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய விட யமாகும். ஏனைய அரசியல் கட்சிசார்ந்தவர்கள் இவ்வாறு சந்திப்புக்களை நடத்தியதாக அறியமுடியவில்லை.

உண்மையில் இன்றைய நெருக்கடி நிலையில் வைத்திய சாலையில் பல்வேறுபட்ட நோய்நிலைக்கு உள்ளானவர் களுடன் கொரோனா நோய் தொடர்பில் கண்காணிக்கப் படவேண்டிய நோயாளர்களையும் பராமரிக்கவேண் டிய சூழ்நிலை உள்ளது. தற்போது இருக்கின்ற ஆளணியி னரை வைத்துக் கொண்டு வினைத்திறனான சேவை யினைச் செய்யமுடியாது என்பது அவர்களின் பிரதான வாதமாக அமைகிறது. இலங்கையில் உள்ள 100 அரச வைத்தியசாலைகளில் 3,513 தாதியர்கள் பணியாற்றவேண் டிய நிலையில் வெறும் 985 தாதியர்களே பணியாற்றும் நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. நாளுக்குநாள் அதிகரித்துவரும் கொரோனா நோயாளி களைப் பாராமரிப்பதற்கும் அவர்களுக்கான சேவை களைச் செய்வதற்கும் மேலதிக ஆளணியினர் தேவைப் படுவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து அறியக்கூடியதாக உள் ளது. வைத்தியசாலை ஊழியர் ஒருவரின் கருத்துப்படி கொரோனா நோயாளர் பிரிவு வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டபின்னர். ஓய் வின்றி வேலை செய்ய வேண்டியுள்ளதாகவும் சாதாரண நோயாளர்களைப் பராமரிக்கும் ஊழியர்களையே அப் பிரிவுக்கும் பயன்படுத்தவேண்டிய நிலை உள்ளதனால் ஏனைய பிரிவுகளுக்கு போதுமான ஆளணியில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார். இந்நிலையானது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் பணிகளில் தாமதமும் அதனால் பாரிய விளைவுகள் ஏற்பட்டு விடக் கூடிய ஆபத்தும் இருப்பதனைச் சம்மந்தப் பட்டவர்கள் கருத்தில் கொள்ளவேண்டும். வைத்தியசாலைப் பணியாளர்கள் உயிர்களைப்பாதுகாக்கும்பொறுப்பிற்கு ரியவர்களாக இருப்பதனால் அவர்களின் வேலைப்பளு அதிகரிக்காமல் இருக்கவும் சலிப்பற்று வேலைசெய்வற்குரிய வாய்ப்புக்களை ஏற்படுத்துவது தொடர்பிலும் அரச தரப்பு கவனத்தில் கொண்டு செயற்படவேண்டும்.

வைத்தியசாலையில் தாதியர்களுக்கும் சுகாதாரப் பணி யாளர்களுக்கும் கொரோனா விடுதிகளில் சுற்றுநிரல் அடிப்படையில் கடமை வழங்கப்படுகிறது. இக்கட மையின் போது குறித்த கடமைக்குரியவர் கொரோனா தொற்றுக்குள்ளாகவேண்டிய நிலை உண்டு. இந்நிலை யில் அவர்கள் தொடர்பில் அரசு, சுகாதார அமைச்சு அடிப்படையான சில விடயங்களைக் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும்.

1.கடமையில் ஈடுபடும் குறித்த பணியாளருக்குச் சிறந்த பாதுகாப்பு முகக்கவசங்களை வழங்குவதும் அதனைச் சரி யான வகையில் உறுதிப்படுத்துவதும்

2.கடமையில் ஈடுபடும் பணியாளர் கொரோனா விடுதிகளில் பணியாற்றுவதால் அவர்கள் தமது குடும் பத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக வீடு செல்லாமல் விடுதிகளில் தங்குவதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

3.தாதியர்களுக்கும் சுகாதாரப்பணியாளருக்கும் தடுப்பூசி வழங்குவதோடு, அவர்களது குடும்பத்தி னருக்கும் முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசிகளை வழங்குதல்.

4.கொரோனா அச்சுறுத்தலுக்குள்ளான சூழலில் அவர்கள் தமது பணிகளைச் செய்வதன் காரணமாக இடர்காலப் பணிக்கொடுப்பனவை வழங்குதல்.

இன்று முழு இலங்கையுமே கொரோனாப் பேரி டரிலிருந்து எவ்வாறு தப்பித்துக் கொள்வது, அல்லது எவ்வாறு கொரோனாவைக் கட்டுப்படுத்துவது என்று சிந்தித்து வரும் சூழலில் வைத்தியசாலைத் தாதியர், சுகாதாரப்பணியாளர்களின் பணிப்புறக்கணிப்புக்கள் இன்னும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும். கடந்த முறை செய்யப்பட்ட பணிப்புறக்கணிப்பினை அவர்கள் மிகுந்த தொழில்ப்பொறுப்புடன் செய்திருந்தார்கள். அதாவது நோயாளர்கள் பாதிப்புக்குள்ளாகாத வகையில் சுழற்சிமுறை ஒழுங்கில் பணிகளிலும் பணிப்புறக்கணிப் பிலும் ஈடுபட்டு இருந்தனர். அது அவர்களின் மனிதாபி மானச் செயற்பாடாக அமைகிறது. ஆனால் அரசு இத் தகைய மனிதாபிமானச் செயலாற்றுகையினைத் தமக் குச் சாதகமாக்கிக் கொண்டு, இவர்கள் தொடர் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தைச் செய்யமாட்டார்கள் என்ற குருட்டு நம்பிக்கையில் பாராமுகமாகச் செல்வ தும் வெளிப்படையானதாகத் தெரிகின்றது. ஆனால் தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப் படாதவிடத்து தொடர் பகிஸ்கரிப்பினை மேற்கொள் வதற்கு வாய்ப்புள்ளதாகவே வைத்தியசாலை வட்டா ரத்திலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

நாட்டில் வாழுகின்ற ஒவ்வொரு மனிதனின் பாதுகாப் பினையும் உறுதிப்படுத்த வேண்டியது அரசின் கடமை. அவ்வாறு இருக்கும் போது மிகுந்த சிரமத்தின் மத்தியில் தங்களது ஆரோக்கியத்தினையும் கருத்தில் கொள்ளாது, சேவையாற்றும் வைத்தியசாலைப் பணியாளர்களின் நலனையும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்த வேண்டி யது மிக அவசியமான விடயங்களில் ஒன்று என்பதனை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் கேட்பது வேலையிடத்தில் பாதுகாப்பு, தமது வீட்டாருக்கான பாதுகாப்பு. இது பொதுவாக எல்லோரும் எதிர்பார்க் கும் ஒன்றுதான் கொரோனா சம்பந்தமான நோயாளர்க ளுடன் பணிபுரிந்துவிட்டு வீடுகளுக்குச் செல்லும் போது அங்கிருக்கக் கூடிய வயதானவர்கள், கர்ப்பிணிப்பெண் கள், குழந்தைகள் தவிர்க்கமுடியாமல் இவ் அச்சுறுத் தலுக்கு உள்ளாகவேண்டியிருக்கிறது. அதிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு குறித்த பணியாளர்கள் வீடுகளுக்கு குறித்த காலத்தில் செல்லாமல் இருப்பது அவசியமானது. அதேவேளை, அவர்கள் குடும்பங் களுக்கு தடுப்பூசிகளை வழங்குவதும் அசியமானது. இப் பாதுகாப்பு முன்னெச்சரிக்கையானது முழுச் சமூகத்துக் குமானது. அத்தகைய பாதுகாப்பினை மேலும் உறுதிப் படுத்துவது அரசிற்குரிய கட்டாய பொறுப்பாகவே அமைகின்றது.

அரசாங்க ஊழியர் ஒருவர் சாதாரண நிலைமையில் பணிபுரிவதற்கும் அச்சுறுத்தலான பகுதியில் பணிபுரி வதற்கும் வேறுபாடு உண்டு. அதன் வேறுபாடுகளைக் கருத்தில்க்கொண்டு அத்தகைய அரச பணியாளர்களுக்கு அரசாங்கம் கஸ்டப்படிகளை வழங்குவது வழமையான நடவடிக்கையானதுதான். அத்தகைய கஸ்டப்படியி னையே குறித்த வைத்தியசாலை தாதியர் மற்றும் பணி யாளர்கள் கோருகின்றனர். யுத்த காலத்தில் இராணுவத் தினருக்கு அத்தகைய படி வழங்கியிருந்தமை குறிப்பிடத் தக்கது. உண்மையில் அவர்கள் வேலையிடத்தில் எதிர் நோக்கும் ஆபத்திற்கு அவர்கள் கோரும் கஸ்டப்படி யானது ஈடானது இல்லை. ஆனாலும் அவர்கள் செய் யும் பொறுப்புமிக்க செயற்பாட்டுக்கு பெறுமதி ஒன்று இருக்கவேண்டும். அதற்குத்தானே சம்பளம் வழங்கப்ப டுகிறதே என்பது சிலவேளை அரசு சார்பானவர்கள் பதிலை முன்வைக்கவும் கூடும். ஆனால் அது வழமை யான பணிகளைச் செய்வதற்குரியது. இதனை சாதாரண இடர்காலப்பணி என்ற வகைக்குள் கொண்டுவர முடியாது. சாதாரண இடர் காலப்பணி என்பது பாதிப்பினை எதிர்நோக்கிய சமூகத்திற்கு பணி செய்வதாக இருக்குமே தவிர பணி செய்பவர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதாக அமையாது. அதேவேளை எதிர்பாராதவிதமாக ஏற்படும் ஆபத்து என்பது வேறு ஆபத்தினை எதிர்பார்த்துப் பணி செய்வது என்பது வேறு. இவற்றினையெல்லாம் அரசு சரியாகப் புரிந்து செயற்பட வேண்டும். சம்மந்தப்பட்வருடன் உரையா டிப் பயனுள்ள தீர்வு எட்டப்படவும் வேண்டும்.

பொதுவாக ஒரு நாட்டினை ஆளுகின்ற அரசாங்கம் நாட்டில் இடர் அல்லது ஆபத்து ஏற்படும் போது அத னைச் சீர்செய்வதற்குரிய முன்னெச்சரிக்கையான ஒழுங் குகளைச் செய்து வைத்திருக்கவேண்டும். அத்தகைய முன்னெச்சரிக்கைகளே நாட்டினையும் நாட்டு மக்க ளையும் பாரிய ஆபத்துக்குள் சென்றுவிடாமல் பாது காக்கும். ஆனால் இலங்கையினைப் பொறுத்தவரையில் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பில் துளியளவேனும் கரிசனை கொள்வதாகத் தெரியவில்லை. வெறுமனே சர்வதேச நாடுகளை பொருளாதர நலனுக்காக எதிர் கொள்வதற்கும், நாட்டில் பொருளாதாரச் செயற்பாடு களை முன்னெடுப்பதற்புகுமான தீவிர நிகழ்ச்சிநிரலில் இயங்குவதனையே வெளிப்படையாக அறியக் கூடிய- தாகவும் உள்ளது. நாட்டினை சரியான ஆளுகைக்கும் அபிவிருத்திக்கும் இட்டுச்செல்வதற்கு பொருளாதாரம் அடிப்படையானதுதான். ஆனால் தீவிரமாக அதில் கவனம் செலுத்தும் போது நாட்டுக்குள் எழும் பகுதி பகுதியான பிரச்சினைகளை இனம் காணவும் அதனைத் தீர்த்துக்கொள்ளவும் போதுமான செயல் ஒழுங்குகளைச் செய்யமுடியாமல் போகின்றது. இதுவே காலப்போக்கில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தவும் கூடும். ஆளும் அரசைப் பொறுத்த வரை யில் உள்நாட்டில் எழுகின்ற எந்தப் பிரச்சினைகளையும் தீர்க்கமுடியாது திண்டாடி வருவது வெளிப்படை. அது இனப்பிரச்சனையாக இருந்தாலும் சரி கொரோனா சார்ந்து எழுகின்ற பிரச்சினையாக இருந்தாலும் சரி இன்னும் வேறு பிரச் சினையாக இருந்தாலும் சரி.

■

சி.விமலன்





கோபா அமெரிக்கா - 2020

1916 ஆம் ஆண்டில் இருந்து தென் அமெரிக்க நாடுகளுக்கிடையில் கோபா அமெரிக்கா உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அந்தவகையில் 47 ஆவது கோபா அமெரிக்கப் போட்டிகள் நாளை (ஜூன் 13) பிறேசிலில் ஆரம்பமாகவுள்ளது. சென்ற வருடமே நடைபெற்றிருக்க வேண்டிய இப் போட்டிகள் கொரோனா காரணமாக யூரோ கிண்ணப் போட்டிகளைப் போன்று இந்த வருடம் நடத்தப்படுகின்றது. சென்ற வருடம் இப்போட்டிகளை ஆர்ஜென்ரீனாவும் கொலம்பியாவும் இணைந்து நடத்தும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் தற்போது அவ்விரு நாடுகளிலும் நிலவும் கொரோனா தாக்கத்தினால் அவை விலகிக் கொள்ள பிறேசில் 6 ஆவது தடவையாக தொடரை நடத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. இம்முறை தொடரில் கலந்து கொள்ளும் 10 நாடுகளில் 'ஏ' குழுவில் ஆர்ஜென்ரீனா, பொலிவியா, உருகுவே, சிலி, பரகுவே ஆகியனவும் 'பீ' குழுவில் பிறேசில், கொலம்பியா, ஈகுவடோர், பெரு, வெனிசுலா ஆகியனவும் இடம்பெற்றுள்ளன.

தென்அமெரிக்க உதைபந்தாட்டக் கூட்டமைப்பு 1991 ஆம் ஆண்டில் இருந்து தென்அமெரிக்க நாடுகள் தவிர்ந்த வேறு இரண்டு நாடுகளையும் கோபா அமெரிக்கா தொடரில் விளையாட வைத்து வருகின்றது. அந்த வகையில் 2019 நடைபெற்ற கோபா அமெரிக்கா தொடரில் அவுஸ்ரேலியாவும் கட்டாரும் பங்கு பற்றி இருந்தன. அதுபோல 2020 ஆம் ஆண்டு தொடரிலும் இவ்விரு நாடுகளுமே மீளவும் பங்கு பற்றும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் சென்ற வருடம் இத் தொடர் நடைபெற்றிருந்தால் அதில் பங்குபற்றுவதற்கு சம்மதம் தெரிவித்த இவ்விரு நாடுகளும் இந்த வருடம் நடைபெறும் தொடரில் பங்குபற்ற முடியாதெனத் தெரிவித்தன. காரணம் கோபா அமெரிக்கா தொடர் நடைபெறும் காலப்பகுதியில் இவ்விரு நாடுகளும் அடுத்த வருடம் கட்டாரில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான தகுதிகாண் போட்டிகளில் விளையாட உள்ளதனால். இதையடுத்து அவற்றுக்குப் பதிலாக புதிய நாடுகளை உள்வாங்காமல் 1991 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 10 நாடுகளுடன் போட்டிகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு அணியும் தமது குழுவில் உள்ள ஏனைய 4 அணிகளுடன் விளையாடி லீக் சுற்றின் முடிவில் புள்ளிப்பட்டியலில் முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும். 8 அணிகள் காலிறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெறும். போட்டிகள் அனைத்தும் பிறேசிலின் 4 நகரங்களில் உள்ள 5 மைதானங்களில் நடைபெறவுள்ளன. முதற் போட்டியில் பிறேசில் - வெனிசுலா அணிகள் நாளை மோதுகின்றன. இறுதிப் போட்டி அடுத்த மாதம் 10 ஆம் திகதி பிறேசிலின் புகழ் பெற்ற மரக்கானா மைதானத்தில் நடைபெறவுள்ளது. நடப்புச் சம்பியனாக விளங்கும் பிறேசில் 9 தடவைகள் கிண்ணத்தைக் கைப்பற்றினாலும் அதிகபட்சமாக உருகுவே 15 தடவைகளும் ஆர்ஜென்ரீனா 14 தடவைகளும் கிண்ணத்தைக் கைப்பற்றி முன்னிலை வகிக்கின்றன.

எச்சரிக்கை

தற்போது நடைபெற்றுவரும் பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் போட்டிகள் நாளையோடு (ஜூன் 13) முடிவடைய உள்ளது. இம்முறை ஜப்பானின் ரென்னிஸ் வீராங்கனையான நயோமி ஒசாகா போட்டி முடிவடைந்த பின்னர் நடைபெறும் ஊடக சந்திப்பை புறக்கணித்ததனால் பிரெஞ் ஓப்பன் நிர்வாகம் 11 இலட்சம் ரூபாவினை அவருக்கு அபராதமாக விதித்தது. இதையடுத்து 4 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற ஒசாகா, கடந்த சில வருடங்களாக மன அழுத்தத்திற்கு ஆளாகி உள்ளதனால் பிரெஞ் ஓப்பன் தொடரில் இருந்து முதற் சுற்றுப் போட்டியுடன் விலகுவதாக அறிவித்திருந்தார். இதற்கு ஆதரவாக செரீனா வில்லியம்ஸ், ஜோகோவிச் ஆகியோர் கருத்தும் தெரிவித்திருந்தார்கள். இது தொடர்பாக முன்னாள் ரென்னிஸ் ஜாம்பவானான ஜேர்மனியின் பொறிஸ் பெக்கரும் சில கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

ஒசாகா மனச்சோர்வு மற்றும் பதற்றம் இருப்பதை ஏற்றுக் கொண்டதன் விளைவாக அவருக்கு ரென்னிஸ் தரப்பிலிருந்தும் அப்பாலும் ஆதரவு கிடைத்தாலும் என்னுடைய கவலை என்ன வென்றால் விளையாட்டில் உச்ச நட்சத்திரமாகத் திகழும் ஒருவருடைய வாழ்க்கையின் ஒரு பகுதியாக விளங்கும் இவற்றைச் சமாளிக்க முடியாமல் இருக்கின்றார் என்பது தான். ஒரு இளம் பெண்ணிடமிருந்து ஊடகப் புறக்கணிப்பு பற்றி அவர் கூறிய கருத்துகள் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. ஒரு போட்டியில் தோல்வி அடைந்த பின்னர் ஊடக சந்திப்பில் அவர் எதிர்கொள்ளும் அழுத்தங்களைச் சமாளிக்க முடியவில்லை. இது அடிக்கடி நிகழும் என்பதனால் அதனை அவர் சமாளித்தே ஆக வேண்டும். பாரிஸில் உள்ள ஊடகங்களை அவரால் சமாளிக்க முடியவில்லை என்றால் விம்பிள்டன், அமெரிக்க ஓப்பன் தொடர்களில் உள்ள ஊடகங்களை சமாளிக்கவே முடியாது. எனவே மனநலப் பிரச்சினைகள் காரணமாக அவரது வாழ்க்கை ஆபத்தில் இருப்பதாகவே நான் உணர்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள நீடா குழுமத்தினரால் 12.06.2021 அன்று வெளியிடப்பட்டது,